Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3110)

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 20 ஞாயிற்றுக்கிழமை (06.10.2013) பக்கங்கள் 20 ஓசை - 006

## முதலமைச்சரின் பதவிப்பிரமாணம்; தமிழ் சட்டத்தரணிகள் பேரவை கண்டனம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் வட மாகாண முதலமைச்சர் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவிருப்பதை தமிழ் சட்டத்தரணிகள் பேரவை கண்டித்துள்ளதுடன், கூட்டமைப்பின் இத்தகைய செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு மாகாணசபையின் ஏனைய உறுப்பினர்கள் முன்வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசின் அடக்குமுறைக்கு எதிராக, அந்த அடக்குமுறைக்குள் இருந்து கொண்டு, அரசின் சலுகை, அபிவிருத்தி மாயைகளுக்குள் சிக்கி விடாமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்ததன் மூலம், தமது எதிர்ப்பை மக்கள் காட்டியுள்ளனர். இத்தருணத்தில் வட மாகாண முதலமைச்சராக சி.வி.விக்கினேஸ்வரன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யத் தீர்மானித்திருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்

19 ஆம் பக்கம் பார்க்க

## உழவு இயந்திர சில்லில் நசியுண்ட குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(பருத்தித்துறை)



வடமராட்சி கிழக்கில் உழவு இயந்திரத்தின் சில்லுக்குள் அகபட்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். போக்கறுப்பு முள்ளியானைச் சேர்ந்த செல்வராஜசிங்கம் கஜன்தன் (வயது - 25) என்ற 2 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மருதங்கேணிச் சந்திக்கும், புதுக்காட்டுச் சந்திக்கும் இடைப்பட்ட பிரதேசத்திலுள்ள கல்லடி வைரவர் கோயிலடிப் பகுதி

19 ஆம் பக்கம் பார்க்க

# ஜனாதிபதி முன் பதவிப்பிரமாணம் கூட்டமைப்பிற்குள் கடும் அதிருப்தி

## இந்தியா சென்றார் மாவை?

(கொழும்பு)

வடமாகாண சபை முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் நாளையதினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முன்னிலையில் பதவியேற்கவுள்ள நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலுள்ள் கட்சிகள் இதற்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளதுடன், தமது அதிருப்தியையும் தெரிவித்துள்ளன.

தன்னிச்சையாக சம்பந்தன் ஜனாதிபதியை சந்தித்தமை, ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்கத் திட்டமிட்டமை தொடர்பாக அவர்கள் சீற்றமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா, ரெலோ, புளொட் ஆகிய கட்சிகளும் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளன. ஜனாதிபதி முன்னிலையில் முதலமைச்சர் பதவியேற்பது தொடர்பாக கூட்டமைப்பின் கடந்த கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் மாவை சேனாதிராஜாவும் ஏனைய கட்சித் தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதனை தீவிரமாக எதிர்த்திருந்தனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமைப்பின் உயர்மட்டக் கூட்டத்திலும் இது தொடர்பில் இழுபறி நிலை தொடர்ந்த போதிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈ.சரவணபவன் மற்றும் சுமந்திரன் ஆகியோரே சம்பந்தனுக்கு சார்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையிலேயே பதவிப் பிரமாணம் மேற்கொள்ளவேண்டும் எனத் தீவிரமாக வலியுறுத்தியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே முதலமைச்சர் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் மேற்கொள்வதில் மாற்றமில்லை என்பதை உணர்ந்த மாவை சேனாதிராஜா நேற்று முன்தினம் இரவே அவசரமாக

19 ஆம் பக்கம் பார்க்க

## ரணிலை பதவி விலக்கக் கோரும் ஆர்ப்பாட்டத்தின் மீது துப்பாக்கிச் சூடு

### பிரதேச சபை உறுப்பினர் உட்பட எழுவர் காயம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை கட்சித் தலைமையிலிருந்து விலகும்படி வலியுறுத்தி போராட்டம் நடத்தியவர்களுக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக போராட்டம் நடத்தியவர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் துப்பாக்கிச் சூடு வரை சென்றதில் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் உட்பட 7 பேர் காயமடைந்துள்ளனர்.

மாத்தறை நகரில் ஏற்பட்ட இந்த மோதலில் காயமடைந்தவர்களில் பிரதேச சபை உறுப்பினர் நிசாந்த புஸ்பகுமார ஏன அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலி

19 ஆம் பக்கம் பார்க்க

## டிப்பர் வாகனம் மோதி யாழ்.பல்கலை மாணவன் பலி

(அச்சுவேலி)

டிப்பர் வாகனம் மோதி படுகாயம் அடைந்த நிலையில் யாழ்போதனா வைத்தியசாலையின் அனுமதிக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவன் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளார்.

19 ஆம் ப்க்கம் பார்க்க

11



எட்டிவிட்ட

## கற்றவர்களுக்கு மட்டுமே வடக்கின் அமைச்சுப் பொறுப்பு

### முதல்வர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(கொழும்பு)

வட மாகாண சபைக்கான புதிய அமைச்சர்களாக நியமிப்பதற்கு கல்வித் தகைமை மிக்கவர்களின் பெயர்ப்பட்டியலை மாத்திரம் தமக்கு வழங்குமாறு வட மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமைத்துவத்திற்கு அறிவித்தல் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போதியளவு கல்வித் தகைமைகள் இல்லாதவர்களை தனது அமைச்சரவைக்கு உள்வாங்குவதில்லை எனவும் முத

19 ஆம் பக்கம் பார்க்க

## முடிவின்றித் தொடரும் மாகாண அமைச்சர் தெரிவு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை அமைச்சர்களை நியமிப்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு நேற்றிரவு கொழும்பில் இடம்பெற்ற கூட்டம் விரைவாக முடிவடைந்துள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் அமையவுள்ள வடமாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பாக பேசப்பட்டது எனினும் அமைச்சர்களை நியமிக்கும் விடயத்தில் முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார். அடுத்த கூட்டத்தில் இறுதி முடிவுகள் எடுக்கப் படும் எனவும் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறினார்.

எனினும் மாகாண சபை அமைச்சர்களை நியமிப்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானிக்காது எனவும் அது குறித்து முதலமைச்சரே தீர்மானிப்பார் எனவும் இந்தக் கூட்டத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

12



வசதி

## உல்லாசப்பயணம் வந்தவேளை மன்னார் கடலில் மூழ்கியது படகு

### ஐவர் பலி 11 பேர் மீட்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் பூக்குளத்திற்கு அப்பால் கற்பிட்டி பிரதேசத்திற்கு உட்பட்ட பழுக்காத்துறை என்ற கரையோரக் கிராமத்தில் சுற்றுலா வந்த உள்ளூர்ப் பயணிகள் கடலில் உல்லாசப் பயணம் மேற்கொண்டபோது படகு கவிழ்ந்ததில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளதுடன் மேலும் 9 பேர் காயங்களின்றி மீட்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் ஒருவர் புத்தளம்

19 ஆம் பக்கம் பார்க்க

13



ஸ்தம்பிதம்

# நித்திரையிலிருந்தவரின் சங்கிலியை அபகரித்துச் சென்ற திருடன்

(திருநெல்வேலி)

தாவடிச் சந்திக்கு அண்மையில் உள்ள வீடு ஒன்றில் நித்திரையிலிருந்த ஒருவரின் தங்கச் சங்கிலியை திருடன் அறுத்துச் சென்றுள்ளான்.

காற்றோட்டத்துக்காக வீட்டின ஜன்னல் கதவுகளைத் திறந்துவிட்டு ஜன்னல் கரையோரமாக வீட்டுக்காரர் நித்திரையில் ஆழ்ந்துள்ளார். ஜன்னலூடாக அவரது கழுத்திலிருந்த சங்கிலியைத் திருடன் கண்டுள்ளான். ஜன்னலினூடாக கையை நீட்டி மிகவும் இலாவகமாக வீட்டுக்காரரின் கழுத்திலிருந்த சங்கிலியைத் திருடன் அபகரித்துள்ளான்.

வீட்டுக்காரர் விழித்தெழும்புவதற்குள் திருடன் ஓடிச் சென்று மறைந்துவிட்டான். தாவடிப் பகுதியில் திருடர்களின் அட்டகாசம் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிக்கடி இப்பகுதியில் திருடர் நடமாட்டம் காணப்படுவதால் மக்கள் நித்திரையின்றி அவதிப்பட வேண்டியுள்ளதாகத் தெரியவருகிறது. பல நாள் திருடன் ஒருநாள் பிடிபடுவான் என்னும் நம்பிக்கையில் அவர்கள் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (137)

## "பிரதீபா பிரபா" விருது

(யாழ்ப்பாணம்)

'பிரதீபா பிரபா' விருதினை யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ணமகாவித்தியாலய அதிபர் ச.வாமதேவன் பெற்றுக் கொண்டார்.

பிரதமர் தி.மு. ஜயரத்தினவினால் நேற்றைய தினம் இவருக்கு இவ்விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.


# புங்குடுதீவு இறுப்பிட்டியில் திறக்கப்பட்டது தபாலகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு இறுப்பிட்டி உப தபாலகம் நேற்று வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்ற இந்த த்பாலக திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பிரதி தபால்மா அதிபர் என்.ரட்ணசிங்கம் தபாலகத்தை திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின வேலணைப் பிரதேச அமைப்பாளரும் பிரதேச சபையின் தவிசாளருமாகிய சிவராசா (போல்) அதிதியாகக் கலந்து கொண்டார்.




புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் சுவிஸ் நாட்டில் தற்போது வசித்து வருபவருமாகிய சிவராசா கலாவதி குடும்பத்தினரின் காணியில் புதிதாகக் கட்டப்பட்ட கட்டடத்திலேயே இந்த உப தபாலகம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

# வலி.வடக்கு பிரதேசத்தில் தெருவெளி ஆற்றுகை

(மல்லாகம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வலி.வடக்கு தெல்லிப்பளை கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் புத்தாக்க அரங்க இயக்கத்தின் (ஐ.ரி.எம்) எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் பண்பாடு என்னும் கலாசார விழிப்புணர்வு தெருவெளி ஆற்றுகை வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் நிகழ்த்தப்படவுள்ளது.

இன்று காலை 9.30, மணிக்கு அளவெட்டி கிழக்கு பாரதி விளையாட்டு மைதானத்திலும் நாளை மாலை 3.30 மணிக்கு கட்டுவன்புலம் மகாவித்தியாலய மைதானத்திலும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு தெல்லிப்பளை பட்டிக்கடவை மாவிட்டபுரத்திலும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு தந்தை செல்வாபுரம் ஐக்கிய வாலிபர் சனசமூக நிலையத்திலும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு மல்லாகம் பழம்பதி தேவஸ்தான முன்றலிலும் இடம்பெறவுள்ளது.

இக்கலாசர விழிப்புணர்வு தெருவெளி ஆற்றுகையில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கலாசாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

# கடற்கரை வீதியில் கூடுவோருக்கு பொலிஸார் அறிவுறுத்து

குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள சம்பேதுறுவார் மடம் ஆலமரச் சூழலில் கூடிப் பொழுது போக்கும் வயோதிபர் மற்றும் இளைஞர்களை இரவு 7 மணிக்குப் பிற்பாடு அந்தப் பகுதியில் கூடுவதை தவிர்க்குமாறு பொலிஸார் நேற்று முன் தினம் தொடக்கம் அறிவித்துள்ளனர்.

மக்கள் செறிந்து வாழும் நெருக்கமான குடியிருப்புகளில் இருந்து காற்றோட்டமான பகுதிகளில் மரங்களில் மதியநேரங்கள் சப்பேதுறுவர் மடம் மற்றும் அதை சூழ்ந்த ஆலமரம் நிற்கும் பகுதிகளில் பெருந்தொகையானோர் தினமும் ஒன்று கூடுவது வழக்கமாக இருந்து வந்தது.

நாளடைவில் அப்பகுதியில் கதிரை போன்ற இருக்கைகளைப் போட்டும் இளைப்பாறும் புதிய நடைமுறைகளும் தோன்றின. இதனால் அப்பகுதியால் போக்குவரவு செய்வோர் பாதிக்கப்படுவதாக முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் மேற்படி நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவானதாகவும் தெரியவந்துள்ளது. (68)

# விளைவேலி மருதடியானின் மணியைக் களவாடிய திருடர்

(சாவகச்சேரி)

நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி விநாயகர் ஆலய மணி நேற்று முன்தினமிரவு திருடப்பட்டுள்ளது.

தற்போது ஆலய புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்ற இவ் வேளையில் ஆலய காவலாளி, தொழிலாளர்கள் எனப் பலர் ஆலயத்தினுள் குறித்த தினம் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் மருதமரத்தடியில் பொருத்தபட்டிருந்த வெண்கல மணியே இவ்வாறு திருடர்களால் திருடப்பட்டுள்ளது.

நவராத்திரி தினமான நேற்றுக்காலை பிள்ளையாரை வழிபடவந்தவர்கள் பொருத்தப்பட்டிருந்த மணியை காணவில்லை என ஆலய நிர்வாகத்தினரிடம் முறையிட்டதையடுத்தே மணி திருட்டுப் போன சம்பவம் தெரியவந்தது.

அண்மையில் இவ்வாலயத்தின் மிக பழமைவாய்ந்த உண்டியல் ஒன்று இரவு வேளையில் வடிரக வாகனமொன்றில் வந்தவர்களால் திருடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ)

## மாணவர் கௌரவிப்பு; விண்ணப்பிக்கலாம்

5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

சங்க அங்கத்தவர்கள் தமது பிள்ளையின் பெயர்,பெற்றபுள்ளி விபரத்தை கற்ற பாடசாலையின் அதிபரினூடாக உறுதிப்படுத்தி எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பி வைக்குமாறு சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (இ)


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 193 | திகதி 2013.10.04 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

31 36 42 59 W

பரிசுத் தொகை ரூபா. 14,113,940/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 05 | 250,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 206 | 206,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 399 | 399,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9392 | 563,520/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 5141 | 205,640/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 122885 | 2,457,700/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17522 | 350,440/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 14,113,940/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,432,300/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 14,355,040/-

2013.10.08ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

நியத்த ஜய

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk
(C/3104)


# சமூகவிரோத செயல் குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்து

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் இடம்பெறும் சமூக விரோத செயல்களை கட்டுப்படுத்தும் முகமாக நெல்லியடி பொலிஸாரும், சிவில் பாதுகாப்புக் குழுவும் இணைந்து உடன் அமுலுக்கு வரும் வகையில் பல தீர்மானங்களை நிறைவேற்றி பொது மக்களுக்கு அறிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதன்படி மண்ஏற்றும் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் ஏனைய வாகனங்கள் குளத்தில் கழுவுதல் கூடாது, அழுக்கான உடுப்புகள் குளத்தில் கழுவக்கூடாது, உள்ளாடையுடன் ஆண்கள் குளத்தில் குளிக்கக்கூடாது, கோயில் குளக்கட்டுக்களில் இருந்து மதுபானம் அருந்துவதைத் தவிர்த்தல், குளத்தில் பெண்கள் குளிக்கும் போது பார்வையிடுவதைத் தவிர்க்கவேண்டும், குளத்திற்கு அருகில் குப்பை, கூழங்களை கொட்டுதல் கூடாது, பெண்கள், ஆண்கள் தொந்தரவு வெள்ளன்பத்தையில் கூடுதலாக உள்ளது, உள்ளூர் சந்தை ஒழுங்கையில் குடிவகையை குடிப்பது தவறு. இவ்வாறான குற்றச் செயல்கள் இடம்பெற்றால் தமக்கு அறியத்தருமாறு நெலலியடி பொலிஸாரும், சிவில் பாதுகாப்புக் குழுவினரும் இணைந்து அறிவித்துள்ளனர். (18)

# சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் சைவசமய அறிவுப்பரீட்சை இன்று

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் வருடந்தோறும் நடாதத்தி வரும் சைவ சமய அறிவுப்பரீட்சை இன்று காலை 9.30 மணிமுதல் 5 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை, மிருசுவில் அ.த.க.பாடசாலை, யாழ். இந்துக் கல்லூரி, காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயங்களில் இப்பரீட்சை இடம்பெறவுள்ளது.

தரம் 3 தொடக்கம் தரம் 13 வரையில் நடைபெறும் இந்தப் பரீட்சைக்கு பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 990 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

இவர்களுக்கான் அனுமதி அட்டைகள் யாவும் பரீட்சார்த்திகள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# கிளிநொச்சி மாவட்டத்தில் விதைநெல் தட்டுப்பாடு

## விவசாயிகள் கவலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் விதை நெல் ஒரு மூடை 2400 முதல் 3000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படும் அதே வேளை, இந்த விலையிலும் விதை நெல்லைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்போது காலபோக நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவிருக்கும் நிலையில் விதை நெல்லிற்கான தட்டுப்பாடு விவசாயிகளைப் பாதித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலத்தில் இவ்வாறு விதை நெல்லுக்குத் தட்டுப்பாடு இருந்ததில்லை என்று தெரிவித்த விவசாயிகள் உற்பத்தி செய்யப்பட்ட நெல் தென்பகுதிக்கு முழுவதுமாக ஏற்றுமதி செய்யப்பட்டமையும் இதக்குக் காரணமாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விவசாயிகள் கடன்பெற்று நெற்பயிர்ச்செய்கையை மேற்கொண்டிருந்த நிலையில் அரசாங்கம் விதை நெல்லைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் தரப்பிலிருந்து முன் வைக்கப்பட்டுள்ளது. (பா)

# தலைப்பிறை பார்க்கும் தினம்

ஹஜ்ஜுப் பெருநாளை தீர்மானிப்பதற்கான துல்ஹஜ் மாதத்தின் தலைப் பிறை பார்க்கும் தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று ஞாயிறு மாலை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் உலமாக்கள், பள்ளி வாசல் நிர்வாகிகள், முஸ்லிம் சமய கலாசார திணைக்கள அதிகாரிகளின் மாநாடு இடம் பெறுகின்றன. அதே போல் யாழ். உலமா சபையினரும் இன்று தலைப் பிறை பார்ப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர். பொதுமக்களையும் இன்றைய தினத்தில் பிறை பார்க்கும்படி வேண்டுகின்றனர். (105)


# தீர்த்தக்கேணி அமைப்பு

(வரணி)

வடவரணி சிமிழ் அம்மன் ஆலயத்தில் தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டு வருகின்றது. இதுவரை காலமும் அம்பாள் தீர்த்தமாடுவதற்கு தீர்த்தக் கேணி இல்லாது அருகில் உள்ள கிணற்றில் தீர்த்தமாடி வந்த நிலையில் தற்போது ஆலயத்திற்கு வடபகுதியில் நிரந்தர தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டு வருகின்றது.

இனிவரும் காலங்களில் இந்த தீர்த்தக்கேணியில் அம்பாள் தீர்த்தமாட வசதி ஏற்படும் என பக்தர்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர். (150)

# முருகானந்தாக் கல்லூரியில் 3 மாடிக் கட்டடம் அமைப்பு



கிளி. முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரிக்கு புதிதாக மூன்று மாடிக் கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஆண்டு இந்தப் பாடசாலை கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டிருந்ததை அடுத்து அந்தக் கல்லூரியின் ஆசிரியர் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கட்டட வசதிகளை அதிகரிக்கும் திட்டத்திற்கு ஏற்ப குறித்த மூன்று மாடிக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இந்த மூன்று மாடிக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் முடிவடையும் நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துணுக்காய் வலயத்தின் கல்வி வளர்ச்சி பாராட்டுக்குரியது

## வலய கல்விப் பணிப்பாளர்

(துணுக்காய்)

துணுக்காய் கல்வி வலயம் கல்வி அபிவிருத்தியில் வளர்ச்சியடைந்து செல்வதாகவும் இது பாராட்டுக்குரியதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். என துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெலிக்ரன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

புலமைப்பரிசில் சித்தி வீதம் 2012 ஆம் ஆண்டு 2.23 வீதமாக இருந்த நிலையில், 2013 ஆம் ஆண்டு 5.88 வீதமாக வளர்ச்சியடைந்துள்ளது. இதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினரது அயராது உழைப்பும் ஆர்வமுமே காரணமாகும்.

இம்முறை இக்கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் அனிஞ்சயன் குளம் தமிழ்க் கலவன் பாடசாலையில் 14 பேரும், சண்முகரட்ணம் வித்தியாலயத்தில் 13 பேரும், ஆறுமுகம் வித்தியாலயத்தில் 4 மாணவர்களும், தண்டுவான் அ.த.க. பாடசாலையில் ஒரு மாணவனும் சித்தியடைந்துள்ளனர்.

மேலும் பாலிநகர் குமாரசாமி வித்தியாலயத்தில் 4 மாணவர்களும், திருமுருகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் 2 மாணவர்களும் முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலையிலும், பொன்னர் விளாங்குளம் அ.த.க. பாடசாலையிலும், பெரிய புளியங்குளம் அ.த.க. பாடசாலையிலும் தலா ஒரு மாணவனுமாக மொத்தம் 34 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

மேலும் இவ்வலயத்திலுள்ள பாடசாலைகளில் 100 முதல் 150 புள்ளிகளை 100 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பெற்றுள்ளனர்.

இதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள் வழங்கிய ஊக்கமும் சிறந்த கல்வியை வழங்கியதுமே காரணமாகும் எனவும் இதற்காக அவர்களை பாராட்டியாக வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (12)

# பனை, தென்னை வள கூட்டுறவு சங்கத்தில் ஓய்வு பெற்றோர் கௌரவிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் 91 ஆவது சர்வதேச கூட்டுறவுதின விழாவும் ஓய்வுபெற்ற அங்கத்தவர், பணியாளர் கௌரவிப்பு மற்றும் கல்வி உயர்கல்வி வாய்ப்புப் பெற்ற அங்கத்தவர், பணியாளரின் பிள்ளைகளின் கௌரவிப்பு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் சங்கத்தலைவர் செ.காந்தராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் கிளை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட சிறந்த அங்கத்தவர்களுக்கான பரிசளிப்பு மற்றும் சிறந்த பணியாளர் கௌரவிப்பு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் (2010, 2011, 2012) ஆகிய ஆண்டுகளில் சித்தி பெற்ற மற்றும் பல்கலைக்கழக, கல்வியியற் கல்லூரி அனுமதி பெற்ற மாணவர்கள் (2010, 2011, 2012) மற்றும் தெரிவுசெய்யப்பட்ட கிராம வங்கி வாடிக்கையாளர்களுக்கான பரிசளிப்பு, மாவட்ட கூட்டுறவுச் சபை சமாசம் ஆகியவற்றால் நடாத்தப்பட்ட போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றியீட்டிய பணியாளர்களுக்கான சிறப்பு பரிசில் வழங்கல்.

2012 ஆம் ஆண்டில் மாகாணத்தில் முதல்தரச் சங்கமாக தெரிவுசெய்யப்பட்டதை முன்னிட்டு சங்கப் பண்யாளர்களுக்கு விசேட பரிசில்கள் வழங் கல் மற்றும் சிறப்பு விருந்தினர் உரை, பிரதம விருந்தினர் உரை என்பன இடம் பெறவுள்ளன. (85)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவில் உதவி பகுப்பாளர் (மும்மொழி) பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வித் தகைமை பல்கலைக்கழ பட்டம்பெற்ற பட்டதாரி, சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தல். இரண்டு வருட அனுபவம் தேவை.

விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாகவும், நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக் கூடிய உடல், உள நலமுடையவராகவும், சிறந்த பண்பாளராகவும், 18 -45 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் அவசியமாகும்.

விண்ணப்பம் 27.10.2013 இற்கு முன்னர் அரசாங்க தகவல் திணைக்களம், 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு -05 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பவேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் உதவிப் பகுப்பாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளல் எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவமும் மற்றும் மேலதிக விபரங்களும் 4 ஆம் திகதி அரச வர்த்தமானியைப் பார்வையிடலாம்.

மதுவரித் திணைக்களம் வட மாகாணத்தில் சேவையாற்றும் முகமாக மதுவரி காவலாளர் (ஆண், பெண்) பதவிக்காக விண்ணப்பம் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரி 18-30 வயதுக்குட்பட்டவரர்கவும், உயரம் 5 அடி 6 அங்குலம் (ஆண்) 5 அடி 2 அங்குலம் (பெண்) உடையவராகவும் கண் பார்வையுடையவராகவும், நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய உடல், உள நலமுடையவராகவும், பெண் விண்ணப்பதாரி திருமணமாகாதவராகவும் விளையாட்டுத் திறமையுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

எழுத்துப் போட்டிப் பரீட்சையாக பொது உளச்சார்பு, பொது அறிவு தமிழ்மொழிமூலம் நடைபெறும். பரீட்சைக் கட்டணம் 300 ரூபாவாகும். நேர்முகப் பரீட்சையாக விளையாட்டுத் திறமை, விசேட பயிற்சி, பிறவெளிச் செயற்பாடுகள் கவனிக்கப்படும்.

விண்ணப்பம் 04.11.2013 இற்கு முன்னர் மதுவரி ஆணையாளர்நாயகம், இலங்கை மதுவரித் திணைக்களம், இல.34. டபிள்யூ. ஏ.டி.ராமநாயக்க மாவத்தை, கொழும்பு -02 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிடல் வேண்டும். மேலதிக விபரங்களை 4 ஆம் திகதி அரச வர்த்த மானியைப் பார்வையிடலாம். (105)



உலக ஆசிரியர் தினம் யாழ். அத்தியார் இந்துக் கல்லூரியில் சிறப்புற இடம்பெற்றபோது...

எதிர்ப்பு இல்லாத இடத்தில் வெற்றி இல்லை
- சுவாமி விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## என்ன மாதிரியான ஒரு சூழலில் நாம் வாழ்கிறோம்?

தமிழ் மக்கள் தங்களது அமோக ஆதரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வடக்கு மாகாணத்தில் ஆளுங் கட்சியாகத் தெரிவு செய்துள்ளார்கள். பலமான எதிர்க்கட்சி ஒன்று அமையாதது, மத்திய அரசாங்கத்திற்கு நல்ல கடிவாளம் இல்லாத அங்குள்ள நிலைமை போலவே வடமகாணத்திற்கும் நேர்ந்துவிட்டது.

எனவே, நடைபெறும் சில தவறுகளைப் பாராதது போல இருந்துவிடாமல், சுட்டிக்காட்டி கேள்வியெழுப்ப வேண்டியது ஊடகங்களின் கட்டாயப் பொறுப்பாகியுள்ளது. அந்தவகையில் வெறும் குற்றச்சாட்டுகளாக இல்லாமல், வடமாகாண மக்கள் தங்கள் ஆளுங்கட்சியாகத் தெரிவுசெய்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள் மீது உண்டாகும் சில சந்தேகங்களைக் கேட்டுவிட வேண்டியது நம் கடமையாகிறது.

முதலாவது சந்தேகம், மாகாண சபைக்கு அதிகாரமெதுவும் இல்லையென்றால், அமைச்சுப் பதவிகளுக்கு ஏன் இத்தனை அடிபிடி?

அடுத்த சந்தேகம், ஜனாதிபதி மகிந்த முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுப்பதற்குக் கேட்டு, அவர் சம்மதம் சொன்னதற்கு மகிழ்ச்சி தெரிவித்த பிறகு, அவரைப் போர்க்குற்ற விசாரணையில் நிறுத்த சர்வதேசத்திடம் கோருவது எப்படி?

ஜனாதிபதியை சந்தித்த பிறகு பத்திரிகையாளர்களைச் சந்தித்த கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்கள், "பிரிவினைவாத கோரிக்கைக்கு எதிரான எமது கட்சி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் எமது முதல்வர் பதவிப் பிரமாணம் செய்வது பொருத்தமானது எனக் கருதுகிறோம்" என்று தெரிவித்துள்ளார். இதை கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களிடமும் கூறியுள்ளார்.

போர்க்குற்றவாளி எனவும், சர்வதேச விசாரணைக்குப் பிறகு சிறையில் அடைக்கப்பட வேண்டியவர் என்றும் தேர்தலின் போது பிரசாரங்களை மேற்கொண்டிருந்த சிறீதரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்ற கூட்டமைப்பு அங்கத்தினர்கள் இதுகுறித்து எதிர்ப்பேதும் தெரிவிக்காமல் மௌனம் காப்பது ஏன்?

கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சரவணபவன் அவர்கள் மட்டும் தமது பத்திரிகையில் வன்மையான கண்டனத்தைப் பதிவுசெய்துள்ளார். "மகிந்த முன்னால் விக்கி பதவியேற்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்கின்றனர் வடக்கு மக்கள்" என அவர் தனது பத்திரிகையில் அதுபற்றிய கருத்துக் கணிப்பு முடிவைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி அமோக ஆதரவுடன் தாங்கள் தெரிவு செய்த விக்கினேஸ்வரன் அவர்களின் செயற்பாட்டை, இரண்டே வாரங்களில், இப்போது அவரைத் தாங்கள் எதிர்ப்பதாக வடக்கு மக்கள் கௌரவ உறுப்பினர் சரவணபவனுக்குச் சொல்லியிருப்பது ஏன்? அப்படியானால் நாளை திங்கட்கிழமை ஜனாதிபதி முன்னால் பதவியேற்பாரானால், தங்கள் முதலமைச்சரை வடமாகாண மக்கள் நிராகரித்துவிடப் போகிறார்களா?

மாகாணசபை என்னவிதமாக செயற்படப் போகின்றது, அமைச்சர் பதவிகளை என்னவிதமாகப் பிரிக்க வேண்டும், என்னென்ன கருமங்கள் ஒவ்வொரு அமைச்சுக்கும் வரவேண்டும், என்னென்ன விதமாக இந்த கருமங்களைக் கையாள்வது போன்ற விடயங்களை எல்லோருக்கும் திருப்தியளிக்கும் விதத்தில் ஜனாதிபதியுடன் பேசியதாக சம்பந்தன் அவர்கள் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனாதிபதியைச் சந்தித்துவிட்டு வந்தே விக்னேஸ்வரன் அவர்களை முதலமைச்சர் வேட்பாளராக சம்பந்தன் அவர்கள் அப்போது அறிவித்தார். அதுபோல் இப்போதும் அமைச்சர்கள் யார் யார் என்னென்ன பொறுப்புக்கள் என்பவற்றையும் ஜனாதிபதியைச் சந்தித்துவிட்டு வந்தே அறிவிக்க இருக்கிறார்.

இத்தகைய இணக்க அரசியல் அனுகுமுறையை, வடக்கு மக்களுக்கு நன்மையளிக்கும் திட்டங்களை ஜனாதிபதியுடன் பேசி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மகாணசபை மூலம் செய்யும் எனவும் நாம் நம்பிக்கை கொள்ளலாமா? - *ஆசிரியர்*

# வடக்கின் அபிவிருத்திக்கு அதிக நிதி வளங்கள் பயன்பாடு

## தெற்கை விட அதிகம் என்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

தெற்கை விடவும் வட மாகாணத்திற்கு அபிவிருத்திக்கு கூடுதலான அளவு பணம் செலவிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யுத்த நிறைவின் பின்னர் அரசாங்கம் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்களை வடக்கு அபிவிருத்திக்காக செலவிட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்தத் தொகையானது தெற்கு அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட தொகையைவிடவும் அதிகமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு மற்றும் பிரதானமான ஒரு சில நகரங்களில் காணப்படும் அதி நவீன வசதி கொண்ட மருத்துவமனையொன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை பிரித்தானிய நாடாளுமன்ற கூட்டமைப்பின் துணைத் தலைவருமான லிவகா பிரபுவை சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் நோக்கில் லிவகா பிரபு ஏழு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இதேவேளை, இலங்கை தனது நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமென லிவகா பிரபு தெரிவித்துள்ளார்.

# "சண்டே லீடர்" செய்தி ஆசிரியர் மந்தனா இஸ்மைல் பதவி நீக்கம்

வீட்டில் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தை அடுத்து நாட்டில் இருந்து வெளியேறிய சண்டே லீடர் பத்திரிகையின் இணை ஆசிரியர் மந்தனா இஸ்மையில் அபேவிக்ரமவை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் லீடர் வெளியீட்டு நிறுவனம் பணியில் இருந்து நீக்கியுள்ளது.

அந்த பத்திரிகையின் பொருளாதார செய்தியாசிரியரும் மந்தனாவின் கணவருமான ரொமேஷ் அபேவிக்ரமவும் பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

மின்னஞ்சல் மூலம் இந்தப் பணி நீக்கம் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. என்ன காரணத்திற்காக அவர்கள் பணியில் இருந்து நீக்கப்பட்டனர் என்ற தெளிவான காரணம் அதில் குறிப்பிடப்படவில்லை.

மந்தனா, அவரது கணவர் மற்றும் மகள் ஆகியோருடன் கடந்த செப்ரெம்பர் மாதம் வட அமெரிக்க நாடொன்றுக்கு புறப்பட்டுச் சென்றார்.

ஒகஸ்ட் 24 ஆம் திகதி அவரது வீடு ஆயுததாரிகளினால் தாக்கப்பட்டதுடன் இந்தச் சம்பவத்துடன் அரசாங்கத்தின் முக்கிய இளம் அரசியல்வாதிக்கு தொடர்பிருப்பதாகவும் பேசப்பட்டது. சண்டே லீடர் பத்திரிகை 2012 ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கு நெருக்கமான வர்த்தகர் ஒருவரினால் கொள்வனவு செய்யப்பட்டது. இந்தப் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரான லசந்த விக்ரமதுங்க 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தனது அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# படகு அகதிகளை திருப்பி அனுப்ப முடிவு

அவுஸ்ரேலியாவிற்கு சட்டவிரோதமாக படகுகள் மூலம் நுழைய முற்பட்டபோது நிர்க்கதிக்குள்ளான சுமார் 200 இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் இந்தோனேஷியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் குறித்து சர்வதேச புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான அமைப்பிற்கு அறிவித்துள்ளதாக இந்தோனேஷியாவிற்கான இலங்கையின் பதில் உயர்ஸ்தானிகர் சட்டத்தரணி லலித் யூ கமகே தெரிவித்தார்.

இவர்களை விரைவில் இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புகலிடக் கோரிக்கையாளர்களை நாட்டிற்கு அனுப்பிவைப்பதற்கான விமானப்பயணச் சீட்டுகள் சர்வதேச புகலிடக் கோரிக்கையாளர்கள் அமைப்பினால் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதனடிப்படையில் 75 இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் முதற்கட்டமாக நாட்டிற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக இந்தோனேஷியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் மேலும் குறிப்பிட்டார்.

# புலிகளின் தடயங்கள் வடக்கில் தேவையில்லை

## இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தடயங்களை இன்னும் வைத்துக்கொண்டிருக்க வேண்டிய தேவையில்லை. அதனால் புதுக்குடியிருப்பு பகுதியிலிருந்த நிலக்கீழ் பதுங்கு குழி தகர்க்கப்பட்டது என்று இராணுவ ஊடகப்பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார். புதுக்குடியிருப்பு மேற்கு பகுதியில் கடந்த வியாழன் இரவு தகர்க்கப்பட்ட பதுங்குகுழி புலித்தலைவருடையதா என்பது குறித்து எமக்கு சரியாகக் கூறமுடியாது. என்றாலும் அது புலிகளின் பதுங்கு குழியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள நிலக்கீழ் பதுங்கு குழி தகர்க்கப்பட்டமை தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகளின் தலைவரின் பதுங்கு குழியும் இந்தப் பிரதேசத்திலேயே இருந்தது. மூன்று மாடிகளைக் கொண்ட இந்தப் பதுங்கு குழியிலிருந்து அவசரமாக வெளியேறுவதற்கான சுரங்கபபாதையும் இருந்தது அந்தப் பதுங்கு குழிக்கு முன்பாக பிரபாகரன் தன்னுடைய வீரர்களுடன் கலந்துரையாடுவதற்கான மண்டபமொன்றும் அமைக்கப்பட்டிருந்தது.

புலிகளின் பதுங்கு குழிகள் பல அழிக்கப்பட்டுவிட்டன. இந்த பதுங்கு குழியை சுற்றி மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. ஆகையினால் இந்தப பதுங்கு குழியை தகர்ப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. கண்ணிவெடிகளை அகற்றாமல் பதுங்கு குழியை தகர்ப்பதனால் ஏற்படும் சேதங்களை குறைத்துக்கொள்ளவதற்கே கண்ணிவெடிகளை அகற்றியதன் பின்னர் இந்தப் பதுங்கு குழி தகர்க்கப்பட்டது.

பதுங்கு குழியை சுற்றி புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் யாவும் கடந்த வாரமே அகற்றப்பட்டன என்றும் அவ்ர் தெரிவித்துள்ளார். அந்த பதுங்கு குழிக்கு முன்பாக பாதுகாப்புக் கூடாரங்களும் அமைக்கப்பட்டிருந்தன. பிரபாகரனின் வாகனம் அந்த வீட்டுக்குள் நுழைவதற்கான வசதிகளும் அமைக்கப்பட்டிருந்தன.

பதுங்கு குழியை சுற்றி ஆறு வரிசைகளில் முட்கம்பிகள் கட்டப்பட்டிருந்தன. ஒரு வரிசையிலிருந்து மற்றொரு வரிசைக்கான தூரம் 20 அல்லது 25 மீற்றராக இருந்தது. அவற்றுக்கு இடையிலும் பாதுகாப்புக் கூடாரங்களும் இருந்தன என்றும் அவர் கூறினார். இந்தப் பதுங்கு குழியை பார்வையிடுவதற்கு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதி கடந்த வாரம் முதல் நிறுத்தப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

## ஏறாவூரில் கைக்குண்டு மீட்பு

ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பு கலைமகள் வித்தியாலய வீதியில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். துப்பறியும் தகவல் கிடைத்ததன் பேரில் தாம இந்தக் குண்டை மீட்டதாக பொலிஸார் கூறினர்.

நேற்று நண்பகலளவில் இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

ஆறுமுகத்தான் குடியிருப்பு கலைமகள் வித்தியாலய வீதியிலுள்ள பாழடைந்த் வளவிற்குள் உள்ள மாமரத்தடியிலிருந்து இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது. இது ஒரு பழைய குண்டு என்றும் பொலிஸார் கூறினர்.

குண்டு செயலிழக்கச் செய்யும் படையினரைக் கொண்டு தாம் இந்தக் குண்டை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# கூட்டமைப்பின் உள்ளக முரண்பாடு மாகாண சபையைச் சீரழித்துவிடும்

**சங்கர சிவன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலையிடி அதன் வெற்றிக் களிப்பு மறைவதற்கு முன்னரே ஆரம்பித்துவிட்டது. சர்வதேச சமூகத்துக்குக் காட்டுவதற்காகத் தமிழ் மக்கள் ஒன்றுமையை வெளிப்படுத்த வேண்டும் என்று மேடைக்கு மேடைபேசிய தலைவர்கள் இப்போது தங்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் தடுமாறுகின்றார்கள். மறுபுறத்தில் தேர்தல் பிரசாரத்தின்போது வழங்கிய வாக்குறுதிகளும் மக்களிடம் தோற்றுவித்த நம்பிக்கையும் கூட்டமைப்புத் தலைவர்களைத் துரத்தத் தொடங்கிவிட்டன.

இரண்டு தடவைகள் கூடியும் அமைச்சர்கள் நியமனத்தில் முடிவு எடுக்க முடியவில்லை. அரசியலமைப்பின்படி நான்கு அமைச்சர்களை மாத்திரம் நியமிக்க முடியும். ஐந்து கட்சிகளுக்கிடையே நான்கு அமைச்சுக்களைப் பகிர வேண்டும். தமிழரசுக் கட்சி தனக்கு இரண்டு அமைச்சுகள் வேண்டும் என்பதில் பிடிவாதமாக நிற்பதால் குடுமிபிடி சண்டை நடக்கின்றது. கட்சி நலனுக்கு அப்பால் குடும்ப நலனும் விளையாடுகின்றது. சுரேஷ் பிரேமச்சந்திரன் போட்ட வேட்பாளர்களில் ஒருவரான ஐங்கரநேசனுக்கு விவசாய அமைச்சை வழங்கலாம் என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் அண்மையில் சிபார்சு செய்தார். பிரேமச்சந்திரன் அதற்குச் சம்மதிக்கவில்லை. அவர் தனது கட்சிக்கான அமைச்சுப் பொறுப்பைத் தனது சகோதரனுக்கே வழங்க வேண்டும் என்பதில் பிடிவாதமாக நிற்கிறார். குடும்ப நலனுக்காகக் கட்சிக் காரனுக்கே வெட்டு.

அமைச்சுப் பதவிகள் தொடர்பாக முடிவெடுப்பதற்காகக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக் கும் கட்சிகளின் கூட்டம் இரண்டு நாட்கள் கொழும்பில் நடைபெற்றது. எந்த முடிவும் எடுக்க முடியாததால் மீண்டும் சந்திப்பதெனத் தீர்மானித்தார்கள். இக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் தினத்தில் (வெள்ளிக்கிழமை) இடம்பெறும் மூன்றாவது சந்திப்பில் ஒரு முடிவுக்கு வருவார்களோ தெரியாது. இங்கு சொல்ல வந்த விடயம் வேறு. முதலிரண்டு கூட்டங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்த சங்கரி பகிஷ்கரித்திருக்கின்றார். மூன்றாவது கூட்டத்தில் பங்குபற்றுவாரா அல்லது அதையும் பகிஷ்கரிப்பாரா என்பது பற்றி இப்போதைக்கு எதுவும் கூற முடியாது. இந்தப் பகிஷ்கரிப்பு கூட்டமைப்புக்குள் தலைதூக்கியிருக்கும் உட்கட்சிச் சண்டையின் வெளிப்பாடு.

ஆனந்தசங்கரி கிளிநொச்சி மாவட்டத்தில் திட்டமிட்டுத் தோற்கடிக்கப் பட்டிருக்கின்றார். இந்தக் காரியத்தைச் செய்தவர் நாடாளுமன்ற உறுப்பினரான தமிழரசுக் கட்சியின் சிவஞானம் ஸ்ரீதரன். ஆனந்த சங்கரியைத் தோற்கடித்ததுடன் அவர் நிற்கவில்லை. ஆனந்த சங்கரிக்கு போனஸ் ஆசனமும் சித்தார்த்தனுக்கு அமைச்சுப் பதவியும் வழங்கினால் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யப் போவதாக அச்சுறுத்தல் விடுத்திருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிக்குள் இரண்டு கட்சிகளைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பகிரங்கமாக நிராகரிக்கின்றார். இந்த லட்சணத்தில் இவர்கள் ஒரு கூட்டமைப்பு!

**ஐக்கிய இலங்கையில் தீர்வு காணவேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்களும் அந்த நிலைப்பாட்டை நிராகரிப்பவர்களும் கூட்டமைப்பில் உள்ளனர். தனிநாடு பற்றித் தெளிவான ஒரு நிலைப்பாட்டைக் கூட்டமைப்புத் தலைமை எடுக்காததன் வெளிப்பாடு என்று இதைக் கூறலாம். புலிகளின் தோல்விக்குப் பின்னர், ஜனநாயக அரசியலில் கால்பதித்த கூட்டமைப்பு இனப்பிரச்சினையின் தீர்வு தொடர்பாக மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களின் கூட்டாகவே இருந்தது. இன்று வரை அவ்வாறே இருக்கின்றது.**


முதலமைச்சர் பதவிப் பிரமாணம் செய்யும் விடயத்திலும் ஒருமித்த கருத்து கூட்டமைப்புக்குள் இல்லை. முதலமைச்சருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பதற்காகக் கூட்டமைப்புத் தலைமை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்திருக்கின்றது. கூட்டமைப்பில் உள்ள தீவிரவாத சக்திகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. கூட்டமைப்புக்குள் நிலவும் இரண்டு கருத்து நிலைகளுக்கு இடையிலான முரண்பாடாகவே இதைப் பார்க்க வேண்டும்.

ஐக்கிய இலங்கையில் தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்களும் அந்த நிலைப் பாட்டை நிராகரிப்பவர்களும் கூட்டமைப்பில் உள்ளனர். தனிநாடு பற்றித் தெளிவான ஒரு நிலைப்பாட்டைக் கூட்டமைப்புத் தலைமை எடுக்காததன் வெளிப்பாடு என்று இதைக் கூறலாம். புலிகளின் தோல்விக்குப் பின்னர், ஜனநாயக அரசியலில் கால்பதித்த கூட்டமைப்பு இனப்பிரச்சினையின் தீர்வு தொடர்பாக மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களின் கூட்டாகவே இருந்தது. இன்று வரை அவ்வாறே இருக்கின்றது.

ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் மாகாண சபை அரசாங்கத்துடன் ஓரளவு இணக்கப்பாட்டுடன் செயற்படுவதன் மூலம் சில சாதனைகளை ஈட்ட முடியுமென நம்புகின்றார்கள். பதவிப் பிரமாணத்துக்கு ஜனாதிபதியை அழைக்க வேண்டும் என்ற முடிவு இவர்களுடையது.

கூட்டமைப்புக்குள் தனிநாட்டு இலக்குடன் செயற்படுபவர்கள் எதிர்ப்பு அரசியலையே தொடர வேண்டுமெனக் கூறுகின்றார்கள். சிறிய அளவிலாவது அரசாங்கத்துடன் இணக்கம் தெரிவிப்பது இறுதி இலக்கை (தனிநாடு) அடையும் முயற்சியைப் பலவீனப்படுத்திவிடும் என்பது இவர்களின் நிலைப்பாடு. சம்பந்தனின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்ய வேண்டும் என்பது இவர்களின் நிலைப்பாடு.

இது தான் கூட்டமைப்பின் மிகப் பெரிய பலவீனம். தனிநாடு தொடர்பாகத் திட்டவட்டமாக ஒரு முடிவை ஆரம்பத்தில் எடுத்திருந்தால் இன்றைய முரண்பாடுகள் தோன்றியிருக்க மாட்டா. இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. தனிநாட்டை நிராகரிக்கும் முடிவை இப்போது மேற்கொள்ள வேண்டும். இல்லையென்றால் மாகாண சபை இருவேறு அணிகளின் முரண்பாட்டுக் களமாகக் காலம் முழுவதும் இருக்க நேர்ந்துவிடும்.



**வடக்கு-கிழக்கு இணைந்த சமஷ்டி நடை முறைச் சாத்தியமற்றது. என்பதை உணர்ந்த நிலையிலேயே, அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு ஓரளவு சுயாட்சி அதிகாரத்தை வழங்க வேண்டும் என்ற கருத்தைச் சுமந்திரன் முன்வைத்திருக்கின்றார். ஓரளவு சுயாட்சி அதிகாரத்தைப் பெறுவதற்கு மாகாண சபையையே பிரதான ஊடகமாகக் கொள்வதைத் தவிர இன்றைய நிலையில் வேறு வழி இல்லை. மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியாகவும் ஏற்க முடியாது என்றும் இந்த அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் எதையும் சாதிக்க முடியாது என்றும் கூறிவரும் தீவிர நிலைப்பாட்டாளர்கள் மேற்கூறிய அணுகு முறையுடன் ஒத்துப்போவார்களா என்பது பிரதான கேள்வியாக உள்ளது. 'ஓரளவு சுயாட்சி' என்பதற்கு நடைமுறை வடிவம் கொடுக்காமல் வெறும் கோஷமாக வைத்திருப்பதால் மக்களுக்கு எவ்வித நன்மையும் இல்லை.**

தங்களால் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளையே மாகாண சபைத் தேர்தல் காலத்தில் கூட்டமைப்பு வழங்கியது. வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவதும் வெளிநாட்டு உதவியுடன் அபிவிருத்தியை மேற்கொள்வதும் மாகாண சபையின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்ட விடயங்கள். வடக்கு-கிழக்கு இணைந்த சமஷ்டி நடைமுறைச் சாத்தியமற்றது.

வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது சாத்தியமில்லை என்பதையும் அது மக்களிடமிருந்து கூட்டமைப்பை அந்நியப்படுத்திவிடும் என்பதையும் உணர்ந்த நிலையிலேயே அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு ஓரளவு சுயாட்சி அதிகாரத்தை வழங்க வேண்டும் என்ற கருத்தைச் சுமந்திரன் முன்வைத்திருக்கின்றார். ஓரளவு சுயாட்சி அதிகாரத்தைப் பெறுவதற்கு மாகாண சபையையே பிரதான ஊடகமாகக் கொள்வதைத் தவிர இன்றைய நிலையில் வேறு வழி இல்லை. அதுவும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திக் கூடுதலான அதிகாரங்களைக் காலத்துக்குக் காலம் பெறுவதன் மூலமே சாத்தியமாகும். மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியாகவும் ஏற்க முடியாது என்றும் இந்த அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் எதையும் சாதிக்க முடியாது என்றும் கூறிவரும் தீவிர நிலைப்பாட்டாளர்கள் மேற்கூறிய அணுகுமுறையுடன் ஒத்துப் போவார்களா என்பது பிரதான கேள்வியாக உள்ளது. ஓரளவு சுயாட்சி என்பதற்கு நடைமுறை வடிவம் கொடுக்காமல் வெறும் கோஷமாக வைத்திருப்பதால் மக்களுக்கு எவ்வித நன்மையும் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபையை மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் நடத்திச்செல்ல வேண்டுமானால், உள்ளக முரண்பாட்டை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். தனிநாட்டு மாயையிலும் தனிநாட்டு ஆதரவுப் புலம் பெயர் அமைப்புகளின் செல்வாக்கிலும் தொங்கிக் கொண்டிருக்கும் நிலையிலிருந்து முற்றுமுழுதாக விடுபட்டு ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்ற திட்டவட்டமான முடிவை எடுக்கும்வரை மாகாண சபையை மக்களின் நலனுக்காகப் பயன்படுத்துவது கூட்டமைப்புக்குச் சாத்தியமாகாது.

# அமைச்சரவையில் மறுசீரமைப்பு
# பங்காளிக் கட்சிகளுக்கு வாய்ப்பு

(கொழும்பு)

தற்போது இருக்கும் அமைச்சரவையில் மறுசீரமைப்பு ஒன்றைச் செய்வதற்கு அரசு அவசர அவசரமாக நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கின்றவர்களில் மேலும் 13 பேருக்கு எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்படவிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

அதனடிப்படையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை சேர்ந்த இருவருக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்த இருவருக்கும் பிரதியமைச்சர் பதவிகள் கிடைக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரத்திற்கு பிரதியமைச்சர் பதவியொன்று வழங்கப்படவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதுமட்டுமன்றி மாகாண சபைகளில் அமைச்சர்களாக பதவி வகித்து நாடாளுமன்றத்திற்கு தெரிவான உறுப்பினர்கள் சிலருக்கும் பிரதியமைச்சர் பதவி வழங்கப்படவிருப்பதாக தெரிய வருகின்றது.

# ரஷ்ய யுத்தக் கப்பல் திருமலையில் தரிப்பு



ரஷ்ய கடற்படையின் பாரிய ஏவுகணைப் போர்க்கப்பல் ஒன்றும் விநியோக கப்பல் ஒன் றும நட்புறவுப் பயணமாக காலை திருகோணமலைத் துறைமுகத்துக்கு வந்துள்ளன.

இந்தக் கப்பல்களுக்கு கடற்படையினர் மரபுரீதியான வரவேற்பை அளித்துள்ளனர். வர்யக் எனற பெயர் கொண்ட, 187 மீற்றர் நீளமான ஏவுகணைப் போர்க் கப்பலும், பொரிஸ் புடோமா என்ற 162 மீற்றர் நீளமான விநியோகக் கப்பலுமே திருகோணமலைத் துறைமுகத்துக்கு வந்துள்ளன. வர்யக் போர்க் கப்பலில், 65 அதிகாரிகள் உள்ளிட்ட 529 கடற் படையினரும், பொரிஸ் புடோமா கப்பலில், 75 மாலுமிகளும் பணியாற்றுகின்றனர்.

ரஷ்யக் கடற்படையின் பசுபிக் கப்பற்பிரிவைச் சேர்ந்த இந்தக் கப்பல்கள், வரும் 8 ஆம் நாள் வரை திருகோணமலை யில் தரித்து நிற்கவுள்ளன. இதன் போது, கடற படையினருடன் இணைந்து, ரஷ்யக் கடற்படையினர் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளனர்.

# மகாராணியின் சிலைக்கு மவுசு



(கொழும்பு)

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை முன்னிட்டு, கடந்த ஏழு வருடங்களாக கொழும்பு நூதனசாலை கட்டடத்துக்கு பினனால் வைக்கப்பட்டிருந்த விக்டோரியா மகாராணியின் உருவச்சிலைக்கு புதுபொலிவு கிடைக்கப்பெற்றுள்ளது.

1897 ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சியாளர்களால் நிர்மாணிக்கப்பட்ட இந்தச் சிலை, ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த சிலை கடந்த ஏழு வருடங்களுக்கு முன்னர் அங்கிருந்து அகற்றப்பட்டு, கொழும்பு நூதனசாலைக்கு பின்னர் வைக்கபபட்டிருந்தது.

இந்த நிலையில் அடுத்த மாதம் கொழும்பில் பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடைபெறவுள்ள நிலையில், குறித்த சிலையை கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை கொழும்பு மாநகரசபை மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் உள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகரகமும் இதற்கான கோரிக்கை முன்வைத்ததாக கொழும்பு மாநகர சபையின் பிரதி முதல்வர் டைடஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

# திருப்தியான பொருளாதார வளர்ச்சி
# ஆசிய அபிவிருத்தி வங்கி அறிக்கை



(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 6.8 வீதமாக பதிவாகும் எனவும், பணவீக்கம் 7 வீதமாக அமைந்திருக்கும் என்வும் ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவித்துள்ளது.

பொருளாதார வளர்ச்சியில் பங்களிப்பு வழங்கக்கூடிய வலுப பிறப்பாக்கல் துறையானது கடந்த மே மாதம் 9.2 வீதத்தால் வளர்ச்சியடைந்து காணப்பட்டபோதிலும், யூன் மாதத்தல் வீழ்ச்சியடைந்திருந்ததாக ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. இதேபோன்று, இறக்குமதி செயற்பாடுகள் ஏப்ரல் மற்றும் யூன் மாதங்களில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை பதிவு செய்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டுக்கான எதிர்வுகூறலின் பிரகாரம் பொருளாதார வளர்ச்சி 7.2 வீதமாகவும், பணவீக்கம் 6.5 வீதமாகவும் அமைந்திருக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தேர்தல் தோல்விக்குத் தார்மீக பொறுப்பு
# திஸ்ஸ சிறந்த முன்னுதாரணம்
## அமைச்சர் சுசில் பாராட்டு



(கொழும்பு)

தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து விலகியதன் ஊடாக, ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க சிறந்த முன்னுதாரணத்தை வெளிப்படுத்தி இருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொது செயலாளர் அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த மாகாண சபைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து, திஸ்ஸ அத்தநாயக்க ஐக்கிய தேசிய கட்சியின், கண்டி குண்டசாலை தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து விலகினார்.

இதனைத் தொடர்ந்தே அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

# கூட்டமைப்பின் தீர்மானம்
# நல்லிணக்கத்துக்கு பச்சைக்கொடி
## இது ஜே.வி.பி.யின் கணிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எடுத்துள்ள தீர்மானத்தை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும (ஜே.வி.பி) பாராட்டியுள்ளன.

இந்த முடிவானது நல்லிணக்கத்துக்கு சாதகமான ஒரு சமிக்ஞை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இந்தத் தீர்மானமானது அவர்கள் தமது பிரிவினைத்திட்டத்திலிருந்து விலகி வந்துள்ளதை காட்டுகின்றது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பேச்சாளரான விஜித்த ஹேரத் எம்.பி தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் இந்த தீர்மானமானது புதுப்பாதை யொன்றை காட்டுவதாக அமைந்துள்ளது எனவும் எதிர்காலத்தில் சாதகமான நிலைமைகள் ஏற்படுவதற்கான அடையாளமாக இதை கொள்ளலாம் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இவ்வாறான முடிவுகள் தொடர்ந்து நல்ல வழியில் செல்லும் என்று தான் நம்புவதாகவும் அவர் கூறினார். இருப்பினும் இந்த தீர்மானம் முன்னாள் இராணுவ அதிகாரியான ஆளுநருக்கு எதிரான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தொடர்ச்சியான நிலைப்பாட்டின் குறியீடாக உள்ளதென்றும் அவர் கூறினார்.

அரசாங்கத்தினால் இனவாதிகளாக சித்திரிக்கப்படும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, தனது இந்தத் தீர்மானத்தின் மூலம் தன் மீதான இனவாத குற்றச்சாட்டிலிருந்து விடுபட்டுள்ளதெனவும் அவர் கூறினார்.

# எதிரும் புதிருமாக பேரணி
# நடுவீதியில் சந்தித்து மோதல்
## ஐ.தே.க.வின் அரசியல் நாகரிகம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராகவும் ஆதரவாகவும் மாத்தறை தெவிநுவர பிரதேசத்தில் நேற்றுக் காலை ஆரம்பமான இரண்டு பேரணிகளில் சென்றவர்கள் ஒருவருக்கொருவர் தாக்கிக் கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தெவிநுவர ஸ்ரீ சுனந்த அனுநாஹிமி சந்தியில் நேற்றுக் காலை 9 மணியளவில் இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றது.

இந்த மோதலை அங்கு சென்ற கிராமவாசிகள் இரண்டு தரப்பினருக்கும் எச்சரிகை விடுத்தனர்.

அரசியல் செய்ய முடியும் ஆனால் எமது கிராமங்களில் மோதிக்கொள்ள இடமில்லை. மீறினால் அடித்து விரட்டுவோம் என்று கிராமவாசிகள் கூறியுள்ளனர்.

இதனையடுத்து ரணிலுக்கு எதிராக பேரணி கோஷங்களை எழுப்பியவாறு மாத்தறையை நோக்கி புறப்பட்டுச் சென்றது.

ரணிலுக்கு எதிரான பேரணிகளை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலக்கப்பட்டுள்ள மேல் மாகாண சபை உறுப்பினர் ஷிரால் லக்திலக்க மற்றும் தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவான பேரணிகளை ஐக்கிய தேசியக்கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர மற்றும் தெவிநுவர தொகுதி அமைப்பாளர் எச். ஆர். விமலசிறி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# மைக்ரோசொப்ட் நிறுவனத்தின்
# இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி இம்ரான்



(கொழும்பு)


இலங்கை மற்றும் மாலைத் தீவு ஆகிய நாடுகளின் புதிய விதிவிட முகாமையாளராக இம்ரான் வில்கசிம் நயமிக்கப்பட்டுள்ளதாக மைக்ரோ சொப்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.

சிறிலங்காவினதும், மாலை தீவினதும் விதிவிட முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ள இம்ரான் வில்கசிமிடம் நிறுவனத்தை திறம்பட நடத்துவதற்கான ஆற்றல்கள் காணப்படுகின்றதுடன் இருநாட்டினதும் நிறுவனத்தின் வர்த்தக மற்றும் நுகர்வோர் தயாரிப்புக்கள், சேவை வழங்குதல், பங்குச் சந்தை, நிதி செயற்றிரன், வாடிக்கையாளர் மற்றும் பங்காளர் அனுபவங்கள், ஊழியர் முகாமைத்துவம் உள்ளிட்ட பல விடயங்களுக்கு அவர் நேரடிப் பொறுப்பை ஏற்று செயற்படுவார்.

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான பொதுமுகாமையாளர் ஜேமி ஹார்பர் புதிய நியமனம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், “இம்ரான் எமது வியாபார நடவடிக்கைகளில் சிறப்பாக ஈடுபட்டதுடன் நாட்டிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு சிறந்த ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளார்.

அத்துடன் இவர் மைக்ரோசொப்ட் சிறிலங்கா நிறுவனத்தின் மூலம் நாட்டுக்கு பெறுமதி சேர்க்கவும், வாடிக்கையாளர்கள், பங்காளர்கள் மற்றும் சமூகத்துக்கு ஒத்துழைப்பை வழங்கவும் பணியாற்றுவார் என தெரிவித்தார்.

# வாழ்வில் வளம் சேர்க்க எமது பணிகள் தொடரும்



சந்தர்ப்பங்கள் தவறவிட ப்படுவதனால் ஆயிரம் கனவுக ளுடன் எதிர்காலத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கும் எமது இளம் தலைமுறையினரின் கனவு கள் சிதைக்கப்பட்டுவிடும். எனவே எதிர்காலத்தைநோக்கிய பசுமை யான சிந்தனையுடன் மட்டும் பய ணித்துக்கொண்டிருக்கும் அந்த இளம் பிஞ்சுகளின் வாழ்வில் ஒளியேற்றுவதற்காக எமது பணி கள் தொடரும் என நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திர குமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புளியம் பொக்கணை நாகேந் திரபுரத்தில் மின் விநியோகத்தினை ஆரம்பித் துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அங்கு அவர் மேலும் உரையாற்று கையில்.

எமது மக்கள் தொடர்ந்தும் சந்தர்ப்பங்களை தவறவிட்டுக் கொண்டே வருகின்றனர் எமக்கு கிடைக்கின்ற முன்னேற்றத்திற்கு ஏதுவான சந்தர்ப்பங்கள் தவற விடப்படுவதனால் ஆயிரம் கனவு களுடன் எதிர்காலத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கும் எமது இளம் தலைமுறையினரின் கனவுகள் சிதைக்கப்பட்டுவிடும். இது எதிர்காலத்தில் எமது இனத்தின் இருப்பையும் கேள் விக்குறியாக மாற்றிவிடும் .

எனவே இன்றைய இளம் தலைமுறை யினரின் எதிர்காலம் குறித்த அக்கறையும், முன்னேற் றங்களை நோக்கிப்பயணிக்கின்ற சிந்தனையும் சமூகத்தில் பெரும் பான்மையானோருக்கு இல்லா திருப்பினும் அது பற்றி சிந்திக் கின்றவர்களின் துணையுடன் நீண்டகால முற்போக்கு சிந்தனை களுக்கமைவாக நாம் செயற்படத் தயாராகவுள்ளோம். ஏனெனில் சமூகத்தில் அனைவருமே உணர்வுகளின் பாடுபட்ட சிந்த னைகளின் அடிப்படையில் மட்டும் செயற்படுகின்ற சந்தர்ப்பத்தில் எமது தேசம் எதிர்கால சந்த தியினருக்கு வெறுமையான நிலப்பரப்புக்களை மட்டுமே பரி சாகவழங்க நேரிடும். எனவே இன்றைய இளம் தலைமுறை யினரின் சுபீட்சமான எதிர் காலத்தை கருத்தில் கொண்டு தொடர்ந்தும் ஆக்கங்களையும் முன்னேற்றங்களையும் நோக்கிப் பயணிப்பதற்கு நாம் தயாராக வுள்ளோம். எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திர குமார் வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவடைந்த மறுநாள் முதல் நாம் மக்களுக்கான சேவைகளை முன்னெடுப்பதற்கு ஆரம்பித்துவிட்டோம்.

எனவே எதுவுமே அறியாது தமது எதிர்காலத்தைநோக்கிய பசுமையான சிந்தனையுடன் மட்டும் பயணித்துக் கொண்டிருக் கும் அந்த இளம் பிஞ்சுகளின் வாழ்வில் ஒளியேற்றுவதற்காக எமது பணிகள் தொடரும் என அவர் மேலும் தெரிவித்தரார்.

அத்தோடு இங்கு ஆரம்பிக் கப்பட்ட மின்இணைப்பு வேலைத் திட்டங்கள் இடை. நிறுத்தப்பட்டு விடும் எனவும் சில சக்திகள் மக்கள் மத்தியில் வதந்திகளை பரப்பிவிட்டு தமது அரசியல் இலாபங்களுக்காக மக்களுக்கு ஏற்படும் நன்மைகளை தடுத்து நிறுத்த முனைந்தன ஆனால் நாம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறை வேற்றவேண்டும் என்ற நோக்கின டிப்படையில் இவ்வேலைத்திட்ட ங்களை தொடர்ந்து முன்னெடு த்து வருகின்றோம் அதனடிப் படையில் அடுத்துவரும் சில நாட் களுக்குள் கண்டாவளைப்பிரதேசத திற்கும் மின் வழங்கல் செயற் பாடு ஆரம்பித்து வைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுமார் 110 இலட்சம்ரூபா செல வில் நாகேந்திரப்புரத்திற் கான மின் இணைப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இன்று பாராளு மன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அவர்களால் மின்விநிநோகம் ஆரம பித்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு மாகா ணசபை உறுப்பினர் தவநாதன் கண்டாவளைப் பிரதேசசெயலர் முகுந்தன் வடக்கின்வசந்த மின் விநியோகத்திட்ட முகாமையாளர் குணசீலன், வடக்கின்வசந்த மின்பொறியியலாளர் அமிலடயஸ் ஆகியோரும் ஈழமக்கள் ஜன நாயகக்கட்சியின் கண்டாவளைப் பிரதேச தொடர்பாளர் செல்வம் மற் றும் நாகேந்திரபுரம் கிராம சேவ கர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ரவி ஆகியோரும் மற் றும் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளும் பெருமளவான மக்க ளும் கலந்து கொண்டனர்.

## 33 குடும்பங்களுக்கு ஊக்குவிப்பு தொகை வழங்கல்


(பாண்டியன் குளம்)

முல்லைத்தீவு மாவட்ட மாந்தைகிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 15 கிராம அலுவலர் பிரிவுக் குட்பட்ட பெண்களை தலைமைத் துவம் கொண்டவர்களுக்கு ஊக்கு விப்பு தொகை வழங்கப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் கேட்போர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மு.ப 10.45 மணிக்கு பிரதேச செயலர் ரி.பிரிந்தாகரன் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன. போரினால் பாதிக்கப்பட்டு கணவன்மார்களை இழந்த 33 குடும்பங்களுக்கு தலா பத்தா யிரம் ரூபா வீதம் 33 குடும் பங்களுக்கு சமூக சேவைகள் அமைச்சினால் சுயதொழில் ஊக்கு விப்பு தொகை வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் 15 கிராமத்தை சேர் ந்த கிராம அலுவலர்கள் சமூக நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (140)

## கலந்துரையாடல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் அடங்கும் பிரதேசங்களின் அபி விருத்தி தொடர்பாக சனசமூக நிலைய நிர்வாகத்துடனான கலந் துரையாடல் ஒன்று இடம்பெற வுள்ளது. .எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 2.00மணிக்கு அலுவலக கேட்போர் கூடத்தில் நடை பெறும் இக்கலந்துரை யாடலில் சனசமூக நிலையங்க ளின் தலைவர்களை செயலாளர் களையும் தவறாது கலந்து கொள் ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.



நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நந்தன ரணவீன மற்றும் நெல்லியடி பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் அதிகாரி மற்றும் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (18)

# வீதியில் உறங்கும் கட்டாக்காலி நாய்கள்

-வாகன விபத்துக்கள் தாராளம்-

(வடமராட்சி)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியின் கோப்பாய் இருபாலைக் கிடைப்பட்ட வீதியில் நாய்கள் படுத்துறங்குவதால் இவ்வீதியால் போக்குவரத்தை மேற்கொள்ளும் வாகனங்கள் விபத்தைச் சந்திக்க நேரிடுவதாக பயணிகள் விசனம் தெரிவிககின்றனர்.

இவ்வீதி காப்பெற்வீதியாக சீர மைக்கப்பட்டுள்ள நிலையில் கட் டாக்காலி நாய்கள் இவ்வீதியை தங்குமிடமாக பயன்படுத்தி வரு கின்றன.

குறிப்பாக இரவு வேளை களில் பல நாய்கள் இவ்வீதி யில் படுத்துறங்குவதால் இரவு வேளைகளில் வாகன சாரதிகள் நாயை பார்த்து வாகனத்தை திருப்பியோ விலத்தியோ செல் லும்போது விபத்துக்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே இரவு வேளைகளில் காப்பெற் வீதிகளில் படுத்துறங் கும் நாய்களை விரட்டி போக்கு வரத்துக்கு வழிவகை செய்யப்பட வேண் டும் என பொதுமக்களும். சாரதிகளும் தெரிவிக்கின்றனர் (116)

# பேருரை

(யாழ்ப்பாணம்)

வண்ணை வேங்கடேஷப் பெருமான் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு தினமும் மாலை 7.30 மணிக்கு தெய்வீகப் பேருரை இடம்பெற்று வருகிறது.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை சடாயு என்னும் விடயம் பற்றி ஆசிரியர் கு. பாலசண்முகன் பேருரையை நிகழ்த்தவுள்ளார்.

# முரசின் இன்றைய பலன்

(06.10.2013 ஞாயிற்றுக்கிழமை)



விஜய வருஷம் புரட்டாதி மாதம் 20 ஆம் திகதி.சித்திரை நட்சத்திரம் பி.ப 05.09 வரை, பின் சுவாதி 06.10 வரை பின் துதியை பி.இ 4.59வரை இராகுகாலம 04.32- 06.02 வரை. சுபநேரம 09.02- 10.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | புதிய ஒப்பந்த மொன்றில் கைச்சாத்திடல், நட்டம் காரணமாக தொழிலைக் கைவிட்டு வெளிநாடு செல்ல முற்படல். |
| ரிஷபம் | விளையாட்டுத்துறையில் பாராட்டும் பரிசில்களும் கிடைத்தல், கடனாக பணம் பெற வங்கி பச்சைக்கொடி காட்டுதல். |
| மிதுனம் | மக்களின் செய்கையால் பெருமை பெறுதல், கடந்த கால துன்ப நிகழ்வினை மீட்டதால் மனவாட்டம். |
| கடகம் | தாயாரின் நோய் மாறும் மகிழ்ச்சியான செய்தி, தொழிலாளர் முதலாளியாரின் உறவு மேம்படல், நீண்ட நாள் நிலுவை வந்து சேர்தல். |
| சிம்மம் | சகோதரர் பொறுத்த கட்டத்தில் உதவிக்கு வருதல், சிகிச்சைக்காக அயல் நாட்டை நாடுதல். |
| கன்னி | பிள்ளைகளைப் பராமரிக்க வேலையாளைத் தேடச் செல்லல், கள்ளப்பணம் பிறரால் திணிக்கப்படல். |
| துலாம் | நோயை அலட்சியப்படுத்தியதனால் அபாய கட்டம், வாகனயோகம் மாமனால் கிட்டுதல், சுண்டங்காய் காற்பணம் சுமை கூலி முக்காற்பணநிலை ஏற்படல். |
| விருச்சிகம் | இழுபட்ட விவாகம் முற்றாகும் நிலைக்குவரல், கண்டிக்க வெளிக்கிட்டதனால் தண்டனை கிடைத்தல். |
| தனுசு | புலனடக்கத்தால் ஆபத்து விலகிவிடல், தேங்கியிருந்த பொருட்கள் அதிரடி விற்பனையாதல். |
| மகரம் | நாவடக்கத்தினால் கைகலப்பு மறைதல், சீனிச் சத்து கூடியதால் நோயினால் வருந்துதல். |
| கும்பம் | மருத்துவச் செலவுக்கு கடன்படுதல், பரீட்சை முடிவினால் மனையில் கொண்டாட்டம். |
| மீனம் | பிறரை சிரிப்பால் அடித்து வழிக்கு கொண்டு வருவீர்கள், விரும்பாத நபர் வீட்டுக்கு வந்ததினால் களேபரம். |

# முன்பள்ளி விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

ஜே/88 மாதர் கிராம அபிவிருத்தி சங்கமும், ஜே/88 கிராம அலுவலர் பிரிவு செய்தமிழ் சிறுவர் கழகம் நடாத்தும் மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.00 மணிக்கு யாழ். ஆறுகால்மடம் செழியன் வீதியில் அமைந்துள்ள வானவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சிறுவர் கழகத் தலைவர் எஸ். ரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் திருமதி ந. சந்திரா, சிறப்பு விருந்தினர்களாக கிராம அலுவலர் மா. பஞ்சலோகரஞ்சன், சமுர்த்தி உத்தியோகஸ்தர், சனசமூக நிலையத் தலைவர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறுவர்களுக்கான பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகவும், இப்போட்டி நிகழ்வை கிராமப் பெரியோர், பெற்றோர், விளையாட்டு ஆர்வலர்கள் என அனைவரும் கலந்துகொண்டு சிறார்களை உற்சாகமூட்டுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

## பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளம் இன்றுடன் நிறைவு

# பதக்கங்களைக் குவிக்க வடமாகாணம் முனைப்பு

(கொழும்பு)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியின் இன்றைய இறுதி நாளில் வடமாகாண வீர, வீராங்கனைகள் பல பதக்கங்களைக் கைப்பற்றக் கூடிய வாய்ப்பு அதிகம் இருப்பதாக நம்பப்படுகின்றது.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டி கடந்த 2ஆம் திகதி முதல் கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித்தொடரில் வடமாகாணத்தின் 12 கல்வி வலயங்களைச் சேர்ந்த 450இற்கும் மேற்பட்ட வீர,வீராங்கனைகள் பங்குகொண்டுள்ளனர். இதில் முதல் நாள் போட்டியில் மூன்று பதக்க்ங்களையும், இரண்டாம் நாள் போட்டியில் ஏழு பதக்கங்களையும், மூன்றாம் நாள் போட்டியில் ஐந்து பதக்கங்களையும் கைப்பற்றியுள்ள வடமாகாண வீர, வீராங்கனைகள் நேற்றைய தினமும் பதக்கங்களைக் கைப்பற்றியிருந்தனர். இதில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மற்றும் அளவெட்டி அருணோதயக் கல்லூரி வீர,வீராங்கனைகளேஅதிக பதக்கங்களைக் வென்று கொடுத்துள்ளனர். குறிப்பாக, கோலூன்றிப் பாய்தல் போட்டியில்இவ் வீர,வீராங்கனைகள் அசத்தியுள்ளதுடன் மாகாணத்தின் பதக்கப் பட்டியலையும் அதிகரித்துள்ளனர்.




பவித்திரா

இதேவேளை, மூன்றாம் நாள் போட்டி நிகழ்வில் ஐந்து பதக்கங்கள் கிடைத்துள்ளன. இதில் ஆண்களுக்கான 17 வயதுப் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப்பளைமகாஜனக் கல்லூரி வீரர் சிவநாதன் டிலக்ஷன் 3.80 மீற்றர் உயரத்தினைத் தாண்டி தங்கப் பதக்கம் வென்றார். இதே பிரிவில் மகாஜன கல்லூரியைச் சேர்ந்த இராசதுரை லக்ஷ்மன் 3.40 மீற்றர் உயரம் பாய்ந்து வர்ண விருதினைப் பெற்றுக் கொண்டார்.

பெண்களுக்கான 21 வயதுப் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி வீராங்கனை அ. பவித்திரா 3.05 மீற்றர் உயரத்தினைக் கடந்து தங்கப் பதக்கம் வென்றார். இதே வயதுப் பிரிவில் அருணோதயக் கல்லூரி வீராங்கனை ஆர். ஜக்சனா 2.80 மீற்றர் கடந்து வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஆண்களுக்கான 17 வயதுப் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி வீரர் சஜீபன் 3.60 மீற்றர் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார். எஸ். விதுர்சன் 3.30 மீற்றர் உயரம் பாய்ந்து வர்ண விருதை வென்றார். 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான நீளம் பாய்தலில் யாழ். இந்துக் கல்லூரி வீரர் வசீகரன் ஜஸ்மினன் 7.03 மீற்றர் நீளம் பாய்ந்து வெள்ளிப் பதக்கம் வென்றார். 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தலில் யாழ். இந்துக் கல்லூரி வீரர் இரத்தினசிங்கம் செந்தூரன் 1.88 மீற்றர் பாய்ந்து வர்ணவிருது வென்றார். இதேவேளை, பெருவிளையாட்டுப் போட்டியில் வடமாகாணம் 15 பதக் கங்களைக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.இதே வேளை, கடந்த ஆண்டு 18 பதக்கங்களை வென்ற வடமாகாணம் இந்தாண்டு இன்றைய இறுதி நாளை விட இதுவரை 16இற் கும் மேற்பட்ட பதக்கங்களைக் கைப் பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முன்னேற்றம்



(பீஜிங்)

சீன ஓப்பன் ரென்னிஸ் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு நடால் தகுதி பெற்றுள்ள அதேவேளை, பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா ஜோடி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது.

சீன ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி பீஜிங் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் பெண்கள் இரட்டையர் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த அரையிறுதியில் இந்தியாவின் சானியா மிர்சா-ஜிம்பாப்வேயின் காரா பிளாக் ஜோடி, முதல்நிலை இணையான இத்தாலியின் சாரா எர்ரானிமிராபர்ட்டா வின்சியுடன் பலப்பரீட்சை நடத்தியது. 1 மணி 12 நிமிடங்கள் நடந்த விறுவிறுப்பான இந்த மோதலில் சானியா ஜோடி 6-4, 6-4 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

பெண்கள் ஒற்றையர் காலிறுதி ஆட்டத்தில் செக்குடியரசின் பெட்ரா கிவிடோவா 4-6, 6-2, 6-4 என்ற செட் கணக்கில் உள்ளூர் மங்கை சீனாவின் லீ நாவை விரட்டினார்.

ஆண்கள் ஒற்றையர் காலிறுதியில் இத்தாலி வீரர் பேபியோ போக்னினியை எதிர்த்து களம் இறங்கிய ஸ்பெயினின் ரபெல் நடால் முதல் செட்டை 2-6 என்ற கணக்கில் இழந்ததுடன் 2ஆவது செட்டிலும் 1-4 என்று பின்தங்கி தோல்வியின் விளிம்புக்கு தள்ளப்பட்டார். ஆனாலும் மனம் தளராத நடால் போராடி சரிவில் இருந்து எழுச்சி பெற்றதுடன், 2ஆவது மற்றும் 3ஆவது செட்டை தனதாக்கி ஒரு வழியாக அதிர்ச்சி தோல்வியில் இருந்து தப்பி பிழைத்தார். 2 மணி 15 நிமிடங்கள் நீடித்த இந்த ஆட்டத்தில் நடால் 2-6, 6-4, 6-1 என்ற செட் கணக்கில் வெற்றி கண்டு அரையிறுதிக்கு முன்னேறினார். அரையிறுதியில் நடால் செக்குடியரசின் தோமஸ் பெர்டிச்சை சந்திக்கிறார். இதிலும் வெற்றி பெற்று நடால் இறுதிசுற்றை எட்டினால், சேர்பிய வீரர் ஜோகோவிச்சிடம் இருந்து முதல் இடத்தை தட்டிப்பறித்து 2011ஆம் ஆண்டுக்கு பின்னர் மீண்டும் முதல் அரியணையில் ஏறி விடுவார்.

# அட்டவணை மாற்றம்; பரிசீலிக்க குழு நியமனம்




கால்பந்து விளையாட்டின் உலக நிர்வாக அமைப்பான பிபா 2022 ஆம் ஆண்டில் கட்டார் நாட்டில் நடக்கவிருக்கும் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகள், அந்த நாட்டில் கோடைக்காலத்தில் நிலவும் கடுமையான வெப்பநிலை காரணமாக, மழை காலத்துக்கு மாற்றப்படவேண்டுமா என்பது குறித்து பரிசீலிக்க குழு ஒன்றை நியமிக்கவிருக்கிறது.

இந்தக் குழு கால்பந்து அதிகாரிகள், மருத்துவ வல்லுநர்கள், ஒலிபரப்பாளர்கள் மற்றும் நிதி ஆதரவு தரும் நிறுவனங்கள் ஆகியவர்களுடன்கலந்தாலோசித்து பின்னர் நிர்வாகக் குழுவுக்கு அறிக்கை ஒன்றைத் தரும்.

அடுத்த ஆண்டு வரை முடிவு ஏதும் எடுக்கப்படாது என்று பிபா அமைப்பின் தலைவர் செப் ப்லாட்டர் கூறினார்.

வெப்பநிலை காரணமாக கட்டார்உலகக் கோப்பைப் போட்டிகளை வேறொரு மாதத்துக்கு தள்ளிவைக்கவேண்டும் என்ற அழுத்தத்துக்கு எதிராக, இந்த மாற்றம் வெவ்வேறு நாடுகளில் உள்நாட்டுக் கால்பந்து போட்டிகளைப்பாதிக்கும் என்ற கவலைகளும் வந்துள்ளன.

# கிளார்க்கின் நிம்மதி பெருமூச்சு

தேர்வாளர் பதவியிலிருந்து விலகியமை என்பது தான் மேற்கொண்ட சிறப்பான செயல்களில் ஒன்று என அவுஸ்ரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார். அவுஸ்ரேலியாவில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் அவ்வணியின் தலைவருக்கும் தேர்வாளர் தகுதி அளிக்கப்பட்டிருந்தது. இதைப் பெற்றுக் கொண்ட முதலாவது தலைவராக மைக்கல் கிளார்க் காணப்பட்டார். இந்நிலையில் மிக்கி ஆர்தர் அவ்வணியின் பயிற்சியாளர் பதவியிலிருந்து நீங்கிய பின்னர், தேர்வாளர் பதவியிலிருந்து விலகுவதாக மைக்கல் கிளார்க் அறிவித்திருந்தார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த மைக்கல் கிளார்க், அணி யின் தேர்வாளர் பதவியிலிருந்து விலக எடுத்த முடிவு, தான் எடுத்த முடிவுகளில் மிகச்சிறப்பான முடிவுகளில் ஒன்று எனக் குறிப்பிட்டார். தேர்வாளர் பதவியென்பது முழுநேரத் தொழில் எனக் குறிப்பிட்ட மைக்கல் கிளார்க், அணித்தலைவராகவும், தேர்வாளராகவும் இருக்கும் போது அணியின் வீரர்களோடு நேரத்தைச் செலவிட முடியாது போனதாகவும், ஆகவே தற்போது அணியின் வீரர்களோடு மீண்டும் அதிக நேரத்தைச் செலவிட முடிந்துள்ளதாகவும் குறிப்பிட்டார். தேர்வாளர்களின் கூட்டங்களுக்காகவும், தேர்வு தொடர்பாக மணிக்கணக்காக தொலைபேசியிலும் இருப்பதற்குப் பதிலாக இப்போது சக வீரர்களுடன் கோப்பி அருந்துவதிலும், மதிய, காலை உணவுகளை அருந்துவதிலும் தற்போது நேரத்தைச் செலவிடுவதாக மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.




# நாமலுக்குத் தலைமை

(கொழும்பு)

இலங்கை ரக்பி அணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை ரக்பி கால்பந்தாட்ட சங்கம் மற்றும் சர்வதேச ரக்பி சபை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள செரண்டிப் கிண்ண ரக்பி போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 1ஆம் திகதி வரை கொழும்பு தேசிய ரக்பி மைதான்த்தில் இடம்பெறும் என ரக்பி சங்கத்தின் தலைவர் அசங்க செனவிரத்ன தெரிவித்தார்.

இப்போட்டித் தொடரில் இலங்கை, போலாந்து, மடகஸ்கர் ஆகிய அணிகள் மோதுகின்றன. இந்தப் போட்டிகள் அனைத்தும் மின்னொளியில் இடம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கை அணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமை தாங்குகிறார். அணியின் தலைவர் யோசித்த ராஜபக்ஷ காயம் காரணமாக பங்கேற்காத நிலையில் நாமல் ராஜபக்ஷ தலைமை தாங்குவது விசேட அம்சமாகும்.

# அணியில் இடம்பிடிக்க ஆட்டத்திறனே பரிகாரம்

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் மட்டுமே சேவாக், கம்பீர் மீண்டும் அணியில் இடம்பிடித்துக்கொள்ள முடியும் என இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்தியாதான் தற்போதைய நிலையில் நல்லதொரு அணியாக விளங்குகிறது.

மேலும் யுவராஜ் சிங் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளதால் துடுப்பாட்ட வரிசையில் 4ஆவது இடம் பலமடைந்துள்ளது.

அவுஸ்ரேலிய அணி இந்தியாவில் வந்து விளையாடும் போது நிச்சயம் யுவராஜ் சிங் மிரட்டலாக இருப்பார்.

மீண்டும் அணியில் இடம் கிடைக்க யுவராஜ்சிங் மேற்கொண்ட முயற்சிகள், கடுமையான உழைப்பு. பாராட்டுக்குரியது.

கிட்டத்தட்ட 6 வார காலம், பிரான்ஸில் பயிற்சி எடுத்துள்ளார். இது ஆச்சரியப்படுத்துகிறது. மீண்டும் நல்ல நிலைக்கு அவர் திரும்பியுள்ளார். இந்திய அணிக்கு அவர் நல்ல பலம் சேர்ப்பார். ஆனால் மீண்டும் அணிக்குத் திரும்பப் போராடும் சேவாக்கும் சரி, கம்பீரும் சரி அதற்கான முயற்சிகளை முழுமையாக எடுப்பது போலத் தெரியவில்லை. தங்களுக்குக் கிடைத்த வாய்ப்புகளை அவர்கள் வீணடிக்கிறாரக்ள். இந்திய ஏ அணியில் இடம் கிடைத்த நிலையில் அதை அவர்கள் சரிவரப் பயன் படுத்தவில்லை, இது துரதிர்ஷ்டவசமானது.

சேவாக்கும், கம்பீரும் சிறப்பாக ஆடி தங்களது திறமைகளை நிருபிக்க வேண்டும். அப்போது தான் அணிக்கு திரும்ப முடியும். சச்சின் டெண்டுல்கரை ஓய்வுபெறும்படி எவரும் கட்டாயப்படுத்தக்கூடாது. ஓய்வு குறித்த முடிவை அவரிடமே விட்டுவிடவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சென்றலில் தரப்படுத்தல் ஜொனியன்ஸ் முதலிடம்



(யாழ்ப்பாணம்)

ஜோர்ஜ் வெப்ஸ்ரார் கிண்ணத் தரப்படுத்தலில் ஜொனியன்ஸ் அணி முதலிடத்தைப் பிடித்துள்ளார். யாழ். சென்றல் விளையாட்டுக்கழகத்தினால் யாழ். மாவட்ட அணிகள் தரப்படுத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த 30ஆம் திகதி வரை இடம்பெற்ற 156 போட்டிகளின் முடிவுகளின் அடிப்படையிலேயே ஜொனியன்ஸ் அணி 134.4 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளது. தரப்படுத்தல் விபரம் வருமாறு:

| அணிகள் | புள்ளிகள் | போட்டி | வெற்றி |
|---|---|---|---|
| யாழ். ஜொனியன்ஸ் | 134.4 | 27 | 19 |
| மானிப்பாய் பரிஷ் | 107.5 | 21 | 15 |
| ஜொலிஸ்ரார் | 090.6 | 22 | 13 |
| கொக்குவில் கே.சி.சி.சி. | 086.4 | 19 | 14 |
| யாழ். சென்றல் | 083.3 | 17 | 12 |
| யாழ். பல்கலைக்கழகம் | 079.9 | 15 | 10 |
| சென்றலைட்ஸ் புளூ | 074.5 | 18 | 11 |
| வட்டுக்கோட்டை ஓல்கோஸ்ட் | 070.8 | 18 | 10 |
| திருநெல்வேலி கிரிக்கெட் | 060.1 | 15 | 08 |
| கிறாஸ்ஹோப்பர் | 051.5 | 14 | 06 |
| ஸ்ரான்லி | 041.8 | 13 | 05 |
| அரியாலை சென்றல் | 040.2 | 14 | 04 |
| பற்றீசியன்ஸ் | 038.5 | 13 | 04 |
| ஸ்ரீகாமாட்சி | 038.3 | 13 | 04 |
| நியூஸ்ரார் | 037.4 | 12 | 04 |
| திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. | 030.5 | 10 | 03 |
| யூனியன்ஸ் | 029.5 | 11 | 02 |
| விக்ரோறியா | 016.2 | 09 | 03 |



# கிண்ணம் வென்றது இளந்தரன் அணி

(வெற்றிலைக்கேணி)

55ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட கால்பந்தாட்டப் போட்டியில் இளந்தரன் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

55ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் வெற்றிலைக்கேணி பிரதேச கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில்மாபெரும் கால்பந்தாட்டப் போட்டித் தொடர் நடாத்தப்பட்டது. இப்போட்டித் தொடரில் 11 இற்கும் மேற்பட்ட அணிகள் பங்கு கொண்டன. கடந்த முதலாம் திகதி முதல் 12ஆம் திகதி வரை வெற்றிலைக்கேணியில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் இளந்தரன் அணியும், கட்டைக்காடு சென். மேரிஸ் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய இளந்தரன் அணி 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டி நிகழ்வில் 552ஆவது படைப் பிரிவின் தளபதி கேணல் தீபாலி வன்னியாராச்சி, 55ஆவது படைப் பிரிவின் பிரிகேடியர் அஜித் விஜயசிங்க, 51ஆவது படைப் பிரிவினி பிரிகேடியர் சூழ அபேநாயக்க, மதகுருமார், விளையாட்டு ஆர்வலர்கள், இரசிகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுச் செய்திகள்

## உலகக் கிண்ண கிரிக்கெட்

# ஆப்கான் தகுதி



உலக கிரிக்கெட் லீக் சம்பியன்ஷிப் தொடரில் 2ஆவது இடம் பெற்ற ஆப்கானிஸ்தான் அணி, முதன் முறையாக உலக கிண்ண (2015) தொடருக்கு தகுதி பெற்றது.

ஐ.சி.சி., சார்பில் 12ஆவது உலக கோப்பை தொடர், 2015 பெப்ரவரி, 14 முதல் மார்ச் 29 வரை அவுஸ்ரேலியா, நியூசிலாந்தில் நடைபெறவுள்ளது. மொத்தம் 14 அணிகள் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடக்கும்.

ஏ பிரிவில் இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, இலங்கை, பங்களாதேஷ், நியூசிலாந்து மற்றும் பி பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவு, சிம்பாப்வே என, 10 அணிகள் நேரடியாக தகுதி பெற்றன.

சார்ஜாவில் நேற்று முடிந்த உலகக் கிரிக்கெட் லீக் சம்பியன்ஷிப் தொடர் மூலம் (ஜூன் 2011 முதல் 2013 அக்., 4), 2 அணிகள் தேர்வு செய்யப்பட்டன. 8 அணிகள் பங்கேற்ற இத்தொடரில், ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை (14 போட்டி) மோதின. புள்ளிப்பட்டியலில் முதலிடம் பெற்ற அயர்லாந்து (11 வெற்றி, 24 புள்ளி) ஏற்கனவே தகுதி (பி பிரிவு) பெற்றுவிட்டது.

2,3ஆவது இடத்தில் தலா 18 புள்ளிகளுடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், நெதர்லாந்து அணிகள் இருந்தன. நான்காவது (9 வெற்றி, 17 புள்ளி) இடத்தில் இருந்த ஆப்கானிஸ்தான், தனது கடைசி போட்டியில் நேற்று முன்தினம் கென்யாவை சந்தித்தது.

முதலில் விளையாடிய கென்ய அணி, 43.3 ஓவர்கள் நிலைவில், 93 ஓட்டங்களுக்குள் சுருண்டது. எளிய இலக்கைத் துரத்திய ஆப்கானிஸ்தான், 20.5 ஓவர்கள் நிறைவில், மூன்று விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்று ஏழு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதையடுத்து, 19 புள்ளிகளுடன், பட்டியலில் 2ஆவது இடத்துக்கு முன்னேறி,2015 உலக கோப்பைத் தொடருக்கு தகுதிபெற்றது. ஏ பிரிவில் இடம் பெற்ற ஆப்கானிஸ்தான் அணி,உலக கோப்பைத் தொடருக்கு (50 ஓவர்) தகுதி பெறுவது இது தான் முதன் முறை. இதற்கு முன் 2010, 2012இல் ருவென்ரி–20 உலக கோப்பை தொடரில் விளையாடியது.

மீதமுள்ள இரண்டு இடங்களுக்கு, 2014இல் நியூசிலாந்தில் நடக்கவுள்ள தகுதிச்சுற்று போட்டிகளின் மூலம் தேர்வு செய்யப்படும். இதில் நெதர்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஸ்கொட்லாந்து, கென்யா, நமீபியா, கனடா, உகாண்டா, ஹாங்காங், நேபாளம் மற்றும் பப்புவா நியூகினியா என 10 அணிகள் மோதவுள்ளன.

# கட்டப்பிராய் முழுமதி, நெல்லியடி ஸ்ரீமுருகன் சம்பியன்



முழுமதி விளையாட்டுக்கழகம் நடாத்திய மாபெரும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கட்டப்பிராய் முழுமதி, நெல்லியடி ஸ்ரீமுருகன் அணிகள் கைப்பற்றிக் கொண்டன.

முழுமதி விளையாட்டுக் கழகம் 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுக்கான மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியை யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடாத்தியது. இச்சுற்றுப் போட்டியில் 41இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொண்டன. இப்போட்டித் தொடர்கள் அணிக்கு எட்டு பேர் கொண்ட ஆறு ஓவர்கள் போட்டியாக நடாத்தப்பட்டது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முழுமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. 2012ஆம் ஆண்டுக்கான இறுதிப்போட்டியில் சங்கானை உதயதாரகை அணியை எதிர்த்து நெல்லியடி ஸ்ரீமுருகன் அணி மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நெல்லியடி ஸ்ரீமுருகன் அணி 5.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 45 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சங்கானை உதயதாரகை நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்று பரிதாபமாகத் தோல்வியைத் தழுவியது.

இதேவேளை 2013ஆம் ஆண்டுக்கான இறுதிப் போட்டியில் கட்டப்பிராய் முழுமதி அணியும், உடுவில் ஸ்ரைல் போய்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய முழுமதி அணி 7.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 52 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய உடுவில் ஸ்ரைல் போய்ஸ் அணி 6.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவிக் கொண்டது.

இந்தப் போட்டிகளில் முழுமதி அணி வீரர் கிரிதாஸ் சிறந்த பந்து வீச்சாளராகவும், உடுவில் ஸ்ரைல் போய்ஸ் அணியைச் சேர்ந்த சாருஜன் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் தெரிவுசெய்யப்பட்டதுடன், அமரர் நாகமணி மகேந்திரலிங்கம் ஞாபகார்த்த சிறந்த வீரர் விருதுக்காக முழுமதி அணியைச் சேர்ந்த றதீஸ் தெரிவுசெய்யப்பட்டார் இப்போட்டித் தொடருக்கு. ஈஸ்வரன் கல்லுடைக்கும் ஆலை அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி நிகழ்வில் விளையாட்டுக்கழகங்களின் தலைவர்கள்; செயலாளர்கள், வீரர்கள், விளையட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டு போட்டியைக் கண்டு களித்தனர்.

# செய்தியும் சிந்தனையும்

– அபிமன்யு – 1





**செய்தி**

கடந்த செப்ரம்பர் 21, 2013 நடைபெற்ற வடக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் தமிழர்களின் வெற்றி.

**சிந்தனை**

**ஒரு சிறு கதை:**

தண்ணீர்த் தாகத்தில் தவித்தவர்களுக்கு எதிர்பாராத விதமான துரிதத்தில் ஒரு பானையில் தண்ணீர் கிடைத்தது.

- நிறைவாக இல்லையெனினும், கணிசமான அளவு நீர் அப் பானையில்.

ஆனாலும், அத் தண்ணீர் போதாதென்றும், அது எமது தாகத்தைத் தீர்க்காதென்றும் கூத்தாடிக் கூத்தாடி அப்பானையைப் போட்டு உடைத்தனர்.

சன்னதம் ஆடிச் சிதறடித்தனர்.

காலப்போக்கில் தாகம் தீர்க்கப்படாத நிலைமையில், உடைந்த அந்தப் பானையின் ஒரு துண்டில் தேங்கியிருக்கும் தண்ணீரைத் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடுகிறார்கள்.

வெற்றிக் களிப்பில் மிதக்கிறார்கள்.

இந்தப் பானை வேண்டாம், உடைத்தெறியுங்கள், உங்களுக் குத் தங்கத்திலான பானை பெற் றுத் தருகிறோம் என்றவர்கள் காணாமல் போய்விட்டார்கள்.

அந்தப் பானை உடையைக் காரணமாக இருந்தவர்களில் பலரே, எதுவித சுரணையோ, கழிவிரக்கமோ, மன்னிப்புக் கேட்கும் மனப்பாங்கோ அற்றவர்களாக, அந்த உடைந்த துண்டில் இருக்கும் தண்ணீரைத் திரட்டித் தருகி றோம் என்று தாகத்தால் தவிப்பவர்களுக்கு உறுதிகள் வழங்குகிறார்கள்.

தாகத்தால் தவிப்பவர்களும், அவர்களே தங்கள் ஆபத்பாந்தவர்கள், அவர்களே தங்கள் தாகத்தைத் தீர்த்து வைக்க வல்லவர்கள் என்ற நினைப்பில் அந்த உடைந்த துண்டைக் கையில் வைத்திருப்பவர்களையும், அத் துண்டில் மிதக்கும் தண்ணீரையும் ஆவல் பொங்கப் பார்க்கிறார்கள்.

-- இந்தக் கதையில் வரும் பானையையும் தண்ணீரையும் 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் 13ஆவது அரசியல்யாப்பு திருத்தத்தினால் ஏற்படுத் தப்பட்ட இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபையாகவும், உடைந்த துண்டும் அதில் தேங்கியிருக்கும் தண்ணீரும் வடக்கு மாகாணசபைத் தேர்தலாகவும் நீங்கள் உரு வகப்படுத்திக் கொள்வீர்களானால் இக் கதையில் வரும் கதாபாத்திரங்களை நீங்கள் இனம் காண முடியும்.

-- பானையை உடைத்துவிட்டு தமக்கும் அதற்கும் எதுவித சம்பந்தமில்லாததுபோல் இன்னமும் தம் பாட்டுக்கு அரசியலிலும் சமூகத்திலும் வலம் வரும் பிரகிருதிகளை ஏற்றுக் கொள்ளும் எம் இனத் தின் அறியாமையை நோவதா?

அல்லது, தனிமனிதனுக்கு இருப்பதாகக் கருதப்படும் விதி, ஒரு இனத்திற்கும் இருக்கிறது எனக் கொண்டு, அழிவது எனக் கங்கணம் கட்டிக் கொண்டதுபோல் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் எம் தமிழ் இனத்தின் விதி இது என்று கொள்வதா?

இனியாவது அறிவுடனும், தீர்க்கதரிசனத்துடனும், திண்மையுடனும் உடைந்த துண்டில் இருக்கும் தண்ணீரையாவது பேணிப் பெருக்குவார்கள், தவிப்பவர் களின் தாகத்தைத் தீர்ப்பார்கள் என்ற ஆசை எழுவதையும் தவிர்க்க முடியவில்லை.

அதே சமயம், கடந்தகால துர் அனுபவங்கள் போல், அது வெறும் நப்பாசையாக, தமிழர்களின் நிலைமை இன்னமும் மோசமாகி விடுமோ என்ற ஆதங்கத்தை யும் விலக்க முடியவில்லை.

அந்த உடைந்த துண்டை யும், அதில் தேங்கியிருக்கும் தண்ணீரையும், சுயநலமே மேவும் பதவிப் போட்டிகளி லும், குறுக்குவழிப் பிரபல்ய வேட்கையிலும் போட்டடித்து வீணாக்கி விடுவார்களோ?...

- மக்கள் தங்களுக்குத் தகுந்தவர்களையே, தங்கள் யோக்கியதைக்கு ஏற்பவே, தங்களின் தலைவர்களாக ஏற்றுக் கொள்கிறார்கள் என யோசப் டி மேயிஸ்ரி என்ற தத்துவஞானி கூறியதும் ஞாபகத்திற்கு வருகிறது!

# பிழையின்றித் தமிழ் 50

– ஞானச்செல்வன் –

## மீண்டும் சில வாக்கியப் பிழைகள்

தொலைக்காட்சிச் செய்தியில் ஒருநாள், "வன்முறைத் தாக்குதல்களுக்கு உயிரிழந்தனர்" என்று படிக்கப்பட்டது.

தாக்குதல்களுக்கு உயிரிழந்தனரா?

தாக்குதல்களால் உயிரிழந்தனரா?


இரண்டாவதுதான் பொருத்தமாக உள்ளது. தாக்குதலுக்குப் பலி ஆயினர் என்னும்போது வாக்கியம் சரியாகும். இரண்டு வகையாலும் சொல்லிப் பாருங்கள். வேற்றுமை புலப்படும்.

மற்றொரு செய்தி: "ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பில் கொள்ளை". இதைக் கேட்டவுடன், அடுக்குமாடி வீடுகளில் ஓரடுக்கு உண்டா? குறைந்தது இரண்டு அடுக்காவது இருக்குமே என்று நினைக்கத் தோன்றியது. ஒரு என்பதை அடுக்கு எனும் சொல்லோடு இணைத்துக் காண்பது இயல்பாக எழும் எண்ணமே. இவ்வாக்கியத்தை, "அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் கொள்ளை" என்று எழுதினால் - படித்தால் பொருள் உணர்த்துதலில் பிழையின்றி அமையும். சற்றே கவனம் கொள்ளுதல் வேண்டும்.

ஓர் இலக்கியத் திங்களிதழில் ஒரு வாக்கியம். "இதெல்லாம் நடைமுறை நியாயங்கள்". இத்தொடர் சரியா? இது என்பது ஒருமை. நியாயங்கள் பன்மை. இவையெல்லாம் நடைமுறை நியாயங்கள் என்று எழுதியிருக்க வேண்டும். (இப்படி நுட்பம் காண்பது நடைமுறை நியாயமா என்று முணுமுணுக்காதீர்)

மற்றொரு திங்களேட்டில், "எத்தகைய இடர்பாடுகள் ஏற்பட்டாலும், மக்கள் உந்தாற்றல் பெருகிறார்கள்" என்று கண்டோம். இவ்வாக்கியத்தில் இரண்டு பிழைகள். இடர்ப்பாடுகள் என்று ஒற்றுச் சேர்த்து எழுத வேண்டும். மற்றது, உந்தாற்றல் பெறுகிறார்கள் என்று (பெறுதல்) எழுத வேண்டிய இடத்தில் பெருகிறார்கள் என இடையினம் (பெருகுதல்) போட்டது பிழை. உந்தாற்றல் எனும் அருஞ்சொல் எழுதவல்லார் பெறுதலைப் பிழையாக்கலாமா?

அரித்துவார் கங்கையின் பெருக்கோடு இமயமலையின் மடியில் (அடிவாரத்தில்) அமைந்த இயற்கையெழில் செறிந்த இடம். அந்த ஊரைப் போல் மனத்திற்கு அமைதி தரும் மற்றொரு ஊர் பற்றி எழுதியுள்ள ஓர் எழுத்தாளர், "கங்கையில்லாத ஹரித்துவாரைப் போன்ற மனதுக்கு அமைதியளிக்கும் இதமான சூழ்நிலை" என்று குறிப்பிட்டுள்ளார். ஹரித்துவாரில் கங்கை ஓடவில்லை என்பதான ஒரு கருத்தும் இவ்வாக்கியத்தில் ஏற்படக் கூடுமன்றோ? இதனைத் தெளிவாக



எப்படி எழுதலாம்?

"மனத்திற்கு அமைதியளிக்கும் இதமான - ஹரித்துவாரைப் போன்ற சூழ்நிலை - ஆனால் கங்கை மட்டும் இல்லை" என்று எழுதலாமே?

"மக்காவ்" என்பது ஒரு தீபகற்ப நாடு. இந்நாட்டைப் பற்றி எழுதிவரும் ஒருவர், மக்காவில் - என்று தொடங்கி ஒரு செய்தி. மக்கா என்று அரபுநாட்டில் ஓர் ஊர் உண்டே! முகம்மது நபி பிறந்தது மக்காவில். வெறியர்களால் துரத்தப்பட்டு மதீனா சென்றார். ஆதலின் மக்காவில் என்று எழுதும்போது மக்கா என்ற ஊரின் பொருள் தோன்றி வரும். பின் எப்படி எழுதலாம்?

"மக்காவ்" இல் என்று எழுதலாம். இது சற்றே கடினமாகத் தெரிகிறது. சற்று விரிந்து அமையினும், மக்காவ் நாட்டில் என்று எழுதுவதே பொருத்தமுடையதும், பிழையற்றதும் ஆகும்.

தொலைக்காட்சி செய்திகளில் இப்படிப் படித்தார்கள்:

"கப்பலோட்டிய தமிழர், செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவமதிப்புச் செய்ததைக் கண்டித்து" என்று தொடர்ந்தது அச்செய்தி.

சிதம்பரனார் அவமதிப்புச் செய்தாரா? யாருக்கு? எப்போது? ஏன்? என்ற வினாக்கள் எழுகின்றன. அந்நிகழ்வு என்னவென்றால், அவரது திருவுருவப் படத்துக்கு அவமதிப்புச் செய்தமை பற்றியதாகும். அதனால், வ.உ.சிதம்பரனார் படத்துக்கு அவமதிப்புச் செய்ததைக் கண்டித்து என்றோ, வ.உ.சிதம் பரனாரை அவமதிப்புச் செய்ததைக் கண்டித்து என்றோ அந்தச் செய்தி[illegible] சொல்லியிருக்க வேண்டும். சிதம்பரனார் அவ மதித்ததாகப் பிழையான பொருள் தோன் றும்படி இருத்தல் தகாது.

"ஏறக்குறைய இருபத்தெட்டு நாடுகளுக்கும் மேல் இவர் பயணம் செய்துள்ளார்" என்று ஒரு சொற்றொடர் சிற்றிதழ் ஒன்றில் பார்த்தோம். ஏறக்குறைய (சுமார்) என்ற சொல். இருபத்தெட்டு எனும் வரையறுத்த எண்ணிக்கையோடு பொருந்தவில்லை. ஏறக்குறைய முப்பது நாடுகளுக்கு என்றிருக்கலாம். "மேல்" என்னும் சொல்லும் குறிப்பிட்ட எண்ணிக்கையின் பின் ஒட்டுதல் வேண்டாமே.

சிறுவர்க்கான பாட்டு ஒன்று. "உன்னதத்தைப் பெருவதற்கு" என்று அச்சாகியிருந்தது. உன்னதத்தைப் பெறுவதற்கு என்று இருத்தல் வேண்டும். பெறுதலும், பெருதலும் வேறு வேறு அன்றோ? அதிலும் பெரு என்பது பெரிய என்னும் பொருள் மட்டுமே தரும். பெருவதற்கு எனும் சொல்லுக்கு எந்தப் பொருளும் இல்லை. உன்னதம் பெருகுவதற்கு என்று வந்தால் பொருளுடை யதாகும். பழம்பெரும் நடிகர் என்பதைப் பழம் பெறும் நடிகர் ஆக்குதல் எப்படித் தவறோ அப்படியே, பெறு - பெருவாதலும் பிழையே.

அண்மைக்காலமாக வெளிவருகிற திரைப்படங்களில் கதாநாயகனாகத் தோன்றும் இளைஞன் எப்படிச் சித்தரிக்கப்படுகிறான்?

பொழுது விடிந்ததுமே குடிப்பவனாக (சூது கவ்வும்) கும்பலாக உட்கார்ந்து குடிப்பவனாக (மூடர் கூடம்) வேலை வெட்டி இல்லாமல், அதைத் தேடும் முயற்சி கூட இல்லாமல், பெண்களைத் துரத்திக்கொண்டு அலைபவனாக (கேடி ரங்கா கில்லாடி பில்லா, வருத்தப்படாத வாலிபர் சங்கம்)

சொ.ப்ட்வேர் வேலையை விட்டுவிட்டு ஆள் கடத்துபவனாக (மங்காத்தா, சூது கவ்வும்)

தன் தீய வழக்கங்களைத் திருத்த முயலும் பெற்றோர்களை ஒருமையில் பேசி அவமதிப்பவனாக (தீயா வேலை செய்யணும் குமாரு)

இப்படித்தான் நம் இளைஞர்கள் குடிகாரர்களாக, பொறுக்கிகளாக, பொறுப்பில்லாதவர்களாக, பெண்கள் பின்னால் அலைபவர்களாக, அதற்காக எந்த அவமானத்தையும் பொறுத்துக் கொள்ளும் சொரணையற்றவர்களாக இருக்கிறார்களா? உங்கள் நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள்?


பாத்திரங்கள் மட்டுமல்ல, அண்மைக்கால சினிமாக்களின் கதைக் கருக்கள் என்ன?

தமிழகத்தின் சமகால தீவிரப் பிரச்சினை ஒன்றை நகைச்சுவை என்கிற பெயரில் நீர்த்துச்செய்யும் வேலையை, "வருத்தப்படாத வாலிபர் சங்கம்" செய்திருக்கிறது.

"சூது கவ்வும்" படத்தில் ஓர் அரசியல்வாதி நேர்மையாக இருப்பது தவறு என்பதைப் போல ஒரு கருத்து முன்வைக்கப்படுகிறது. மாட்டிக் கொள்ளாமல் ஆள் கடத்துவது எப்படி என்று இளைஞர்களுக்கு வகுப்பெடுக்கப்படுகிறது.

"கண்ணா லட்டு தின்ன ஆசையா"வில் சித்தரிக்கப்பட்ட இளைஞர்களைப் பாருங்கள். பள்ளிப் பெண்ணைக் கூட துரத்தித் துரத்தி, "ஈவ் டீஸிங்" செய்யும் இளைஞராக பவர் ஸ்டார் சீனிவாசன் நடித்திருந்தார். வேலை வெட்டி இல்லாத மூன்று இளைஞர்கள் ஒரு பெண்ணை சரிப்பதற்காக, "தில்லாலங்கடி" வேலைகள் செய்கிறார்கள். தண்ணி அடிக்கிறார்கள். கலாட்டா செய்கிறார்கள். தொடர்ச்சியாக, "கேடி பில்லா கில்லாடி ரங்கா", நேற்றைய, "வருத்தப்படாத வாலிபர் சங்கம்" என்று இந்தப் போதை இளைஞர்கள்தான் இன்று ஹீரோக்களாக சித்தரிக்கப்படுகிறார்கள். இந்தப் போக்கு தொடர்ந்து நீடித்தால் இப்படி போதை இளைஞனாக, பொறுக்கியாக இருப்பதுதான் ஹீரோவின் அடையாளம் என இளைஞர்கள் மனதில் பதிந்து போகாதா?

எல்லா ஊரிலும் இளைஞர்களில் ரவுடிகளும், பொறுக்கிகளும் இருக்கிறார்கள். ஆனால் அதுவே பெரும்பான்மை குணம் கிடையாது.



# எங்கே போகிறது தமிழ் சினிமா?

**- யுவகிருஷ்ணா கட்டுரையிலிருந்து.**

பெரும்பான்மையை பிரதிநிதித்துவப்படுத்தி தமிழில் மிகக் குறைந்த படங்களே வருகின்றன. கற்பனை வறட்சி, புதியவற்றை முயற்சிக்கத் தயங்கும் வணிக அழுத்தம் காரணமாக மசாலாப் படங்களில் மட்டுமல்ல, கலைப்படங்களிலும் கூட மிகையாக சித்தரிக்கப்படும் பாத்திரங்களும், காட்சிகளும் இடம்பெறுகின்றன.

மது அருந்துவது, புகை பிடிப்பது, சைட் அடிப்பது, அடாவடியாகக் காதலிப்பது, துரத்தித் துரத்தி யாரையோ அடிப்பது, உதைப்பது, வெட்டுவது... இப்படியாகத்தான் சமீபகாலமாக தமிழ் சினிமாவின் இளைஞன் சித்தரிக்கப்படுகிறான் அல்லது அரசியல்வாதியாக ஆசைப்படுபவன் வாக்காளர் பட்டியலில் தன் பெயரைப் பதிந்து கொள்ள வேண்டும் என்ற பொது அறிவு கூட இல்லாத படுமுட்டாளாக இருக்கிறான்.


சினிமாவில் சித்தரிக்கப்படும் இதே இளைஞன்தான் சமூகத்திலும் இருக்கிறானா? ஊழலுக்குக் எதிராக, பாலியல் வன்முறைகளை எதிர்த்து அவர்கள் வீதியிலிறங்கி குரலெழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். குடும்பப் பொறுப்புக்களைச் சுமந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தங்கள் கனவுகளைக் கைவிட்டு வேலைக்குப் போனவர்கள் இருக்கிறார்கள். உடன் பிறந்த சகோதரிகளது திருமணத்திற்காக கூடுதல் வேலைகள் செய்கிறவர்கள் இருக்கிறார்கள். கடன் வாங்கியாவது படித்து முன்னேற வேண்டும் என்று வங்கியில் கடன் வாங்கிப் படிப்பவர்களில் இந்தியாவிலேயே தமிழ் நாட்டு மாணவர்கள்தான் முதலிடம். யதார்த்தம் இப்படி இருக்க... டாஸ்மாக் பாரில் மது போதையில் முடங்கிப் போனவனாக இளைஞர்களைச் சித்தரிப்பது ஏன்? இதற்குப் பின்னுள்ள நுண் அரசியல் என்ன?

இது திரைப்படத்தின் வீழ்ச்சி மட்டுமல்ல, சமுதாயத்தின் வீழ்ச்சி. வலிமைமிக்க ஊடகமான சினிமாவை இன்றைக்கு எங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறோம்? கதாநாயகன் அணியும் கோட், கையில் கட்டியிருக்கும் வாட்ச், முகத்தில் அணிந்திருக்கும் கண்ணாடி மாதிரி கதாநாயகியையும், நாயகனின் விளையாட்டு பொம்மையாக சித்தரிகின்றார்கள். எப்படியெல்லாம் இருக்கக் கூடாதோ, அந்த நிலைக்கு இந்த சினிமா ஊடகம் வந்திருக்கிறதே.. இந்த வருத்தமும் கோபமும் பலருக்கும் உண்டு.

ஆனால் இந்த அறிவுஜீவிகளின் கோபம் கையாலாகாத மலட்டுக் கோபம். இன்றைய அரசியல்வாதிகளோ, அறிவுஜீவிகளோ ஏன் ஊடகங்களோ கூட இந்தச் சீரழிவைக் கண்டிப்பதில்லை. குறைந்தபட்சம் ஒரு விவாதத்தைக்கூட முன்னெடுப்பதில்லை. இவர்களில் பலர் சினிமாவால் ஆதாயம் பெறுகிறார்கள் என்பது கூட காரணமாக இருக்கலாம்.

அதனால் மக்கள், குறிப்பாக படித்த இளைஞர்கள், இந்தப் படங்கள் நம்மை இழிவுபடுத்துகின்றன என்பதைக்கூட உணர்ந்துகொள்ள இயலாதவர்களாக இந்தப் படங்களை விழுந்தடித்துக் கொண்டு போய்ப் பார்க்கிறார்கள்.

தெரியாமல்தான் கேட்கிறேன். தமிழன் என்கிற மண்ணாந்தைக்கு சொரணை என்று ஒன்று நிஜமாகவே இருக்கிறதா?




# இந்தா போகிறதே பஸ் வண்டி... அதற்கு எறியுங்கள்!

**- நடேசன் கட்டுரையிலிருந்து.**

போராட்டம் என வரும்போது ஏராளமானவர்கள் அதை தவிர்க்கத்தான் விரும்புகிறார்கள். ஒடி தப்பிவிட முயலுகிறார்கள். ஆனால் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அவர்களை அதில் இழுத்து விட்டுவிடுகிறது. எமது வகுப்பில் இருபது பேரில் அன்று ஒருவன் ஊர்வலத்துக்கு சென்றதுபோல 95 வீதமானவர்கள் அன்று அந்த ஊர்வலத்தை போராட்டத்தை முடிந்தவரை தவிர்க்கவே விரும்பினார்கள். காரணம் பலருக்கு வாழ்க்கையே போராட்டமாக இருந்தது.

இதே வேளையில் போராட்டத்தின் வாடையே தம்மீது படியாமல் வாய்ச்சொல்லால் உசுப்பேற்றியவர்கள் அக்காலத்திலும் இருந்தார்கள். எனக்குத் தெரிய வண்ணை ஆனந்தனின் பொறிபறக்கும் பேச்சுகள், காசிஆனந்தனின் இரத்தத்திலகங்கள் அன்றைய காலகட்டத்தில் எப்படி உறைந்த இரத்தங்களை கொதிக்க வைத்தது என்பது எனது வயதுக்காரருக்குத் தெரியும். ஆனால் இப்போதைய இணையத்தில் ஆயிரக்கணக்கில், இலட்சக் கணக்கில் ஆனந்தன்கள் இருக்கிறார்கள். அக்காலத்தில் குறைந்தபட்சம் மக்கள் மத்தியில் வந்து பேசவேண்டும். சிறைவாசமும் அனுபவிக்கவேண்டும்.

நான் சொல்லும் 70 ஆம் ஆண்டு காலகட்டத்தில் அரசியல் என்பது நிழலாக எம்மைத் தொடர்ந்தது. நிழலுக்கு ஒடி மறைய முடியாது என்பதுபோல் இடைவிடாமல் துரத்தியது.

குடியரசு தினங்களில் பாடசாலைக்கு செல்லாதது மட்டுமல்ல மற்றவர்களையும் அப்படி செய்யத் தூண்டுவது எமது ஆரம்ப செயலாக தொடர்ந்து நடந்தது.

முதலாவது குடியரசு தினத்தில் வைத்தீஸ்வரா பாடசாலையில் மாணவர்கள் பாடசாலையை பகிஷ்கரித்தபோது தலைமை ஆசிரியர் மணவர்களை அமைதியாக உள்ளே வரும்படி கேட்டுக்கொண்டார். ஆனால் பகிஷ்கரிப்பை ஒழுங்குபடுத்தியவர்கள் பாடசாலைக்கு கல்லெறிந்தபோது அந்த வழியால் சைக்கிளில் வந்த முதியவர் ஒருவர் "தம்பிமாரே படிக்கிற பாடசாலைக்கு ஏன் கல்லெறிகிறீர்கள்? அப்படி கல்லெறிய வேண்டுமானால் இந்தா போகிறதே அரசின் இலங்கை போக்குவரத்து சபை பஸ் வண்டி. அதற்கு எறியுங்கள்" என்றார்.

இது எப்படி இருக்கிறது?

யாவோ(Yehovah) கொடுத்த அருள்வாக்கின் பிரகாரம் இஸ்ரேலியர்களை எகிப்திலிருந்து மோசஸே (Moses) வெளியேற்றினார்.

அதுபோல் அன்று பெரியவரின் அருள்வாக்குப் பிரகாரம் பாடசாலையை பதம்பார்த்த அந்தக் கல்லுகள், போக்குவரத்துச்சபை பஸ் வண்டிகளை நோக்கி எறியப்பட்டது. நானறிந்தமட்டில் அரசியல் காரணங்களுக்காக அதுதான் யாழ்ப்பாணத்தில் நடந்த முதலாவது கல்வீச்சு சம்பவம் என நினைக்கின்றேன். அதன்பின்பு யாழ்ப்பாண குடாநாடெங்கும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் வண்டிகள் சேவையில் இல்லாமல் போகும் வரையும் கல்லெறிந்து உடைத்து, எரித்தது எமது வரலாறு.



# உலக சனத்தொகையை எட்டிவிட்ட கைப்பேசிப் பாவனையாளர்கள்!

இன்றைய உலகில் வாழும் மக்கள் தொகைக்குச் சமனாக கைத்தொலைபேசி (Cell Phone) பாவனையாளர்களின் தொகையும் அதிகரித்துள்ளது. ஐ.நாவின் ரெலிகொம் ஏஜன்சியின் கணிப்பின்படி, இன்றைய உலகில் 6 பில்லியன் (600 கோடி) கைத்தொலைபேசி சந்தாதாரர்கள் உள்ளனர். இதன்படி பார்த்தால், 100 பேருக்கு 86 பேர் கைத்தொலைபேசி பாவிக்கிறார்கள் எனத் தெரிய வருகிறது.

மேலும் சர்வதேச ரெலிகொம் கொம்யுனிக்கேசன் யூனியனின் கணிப்பீட்டின்படி, சீனாவில் மாத்திரம் 1 பில்லியன் (100 கோடி) கைத்தொலைபேசி பாவனையாளர்கள் உள்ளனர். அதேவேளையில் இந்தியாவும் அந்த எல்லையை இவ்வருடம் தொட்டுவிடும்.

ஜெனிவாவில் உள்ள ஒரு ஸ்தாபனத்தின் கணிப்பீட்டின்படி தற்போதைய 7 பில்லியன் (700 கோடி) சனத்தொகையில், மூன்று பேருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் - அதாவது 2.3 பில்லியன் மக்கள் - கணனி வலைத்தளத்தை (Internet) உபயோகிக்கிறார்கள். ஆனால் இதில் பெரும்பான்மையானவர்கள் முன்னேறிய நாடுகளைச் சேர்ந்தவர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(வானவில்)

# எச்சரிக்கை விடும் Twitter Alert வசதி



இயற்கை சீற்றம் போன்ற சூழ்நிலைகளில் எச்சரிக்கை தருவதற்காக Twitter Alert சேவை தொடங்கப்பட்டுள்ளது. உலகளவில் பிரபலமடைந்த சமூக வலைத் தளங்களில் ஒன்று தான் டுவிட்டர். இது தற்போது புதுவித சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது. அதாவது இயற்கை சீற்றம் போன்ற அசாதாரண சூழ்நிலைகளில் எச்சரிக்கை தரும் சேவையை தொடங்கியுள்ளது. இதுகுறித்து தலைமை அதிகாரி ஒருவர், கடந்தாண்டு லைப் லைன் என்ற பெயரில் ஜப்பானில் அவசரகால தகவல்களை பரிமாறிக் கொள்ள வழி செய்தோம்.

இதே பாணியில் இப்போது டுவிட்டர் அலேர்ட் என்ற பெயரில் உலகம் முழுவதும் பயனளிக்கும் வகையில் ஏற்படுத்தியுள்ளோம்.

சட்டம், ஒழுங்கு பராமரிக்கும் பொலிஸ், பொதுமக்கள் பாதுகாப்பு ஏஜென்சிகள், அவசரகால சேவை அமைப்புகள், செஞ்சிலுவை போன்ற அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் போன்றவை இதை பயன்படுத்தி பொதுமக்களுக்கு, அவ்வப்போது தேவையான எச்சரிக்கை தகவல்களை தரும் என்று நம்புகிறோம்.

மேலும், டுவிட்டர் அக்கவுன்ட் வைத்துள்ளவர்களுக்கு போனிலும் தகவல்களை சொல்ல தனி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

டிவி, ரேடியோ போன்ற தகவல்தொடர்பு சாதனங்கள், மின்சார துண்டிப்பு போன்றவை ஏற்படும் போது டுவிட்டர் அலேர்ட் சேவை பயன்படும் என்று தெரிவித்துள்ளார்.

# YouTube இன் முதலாவது இசை விருதுவழங்கல் விழா!





வீடியோ பரிமாற்ற இணையத்தளமான யூரியூப (YouTube), தனது முதலாவது இசை விருதுவழங்கல் விழாவை அடுத்த மாதம் நடத்தவுள்ளது. நியூயோர்க் நகரில் நவம்பர் 3 ஆம் திகதி இவ்விழா நடைபெறும் என கூகுள் நிறுவனத்தின் ஒரு அங்கமான YouTube இணையத்தளம் அறிவித்துள்ளது. லேடி ககா, எமினம், ஆர்கேட் பயர் ஆகியோரின் நேரடி இசை நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் நடைபெறும். ஒக்டோபர் 17 ஆம் திகதி இவ்விருதுக்கு பரிந்துரை செய்யப்படும் வீடியோக்கள் அறிவிக்கப்பப்படவுள்ளது.

YouTube இணையத்தளத்தில் அதிகமாக பார்வையிடப்பட்ட மற்றும் பகிரப்பட்ட வீடியோக்களின் அடிப்படையில் இப்பரிந்துரைகள் அமையும் என YouTube அறிவித்துள்ளது. வெற்றி பெறும் வீடியோக்களின் விபரங்கள் நவம்பர் 3 ஆம் திகதி விழாமேடையில் அறிவிக்கப்படும்.

# மற்றவர் தொட்டவுடன் திரை மூடும்!





ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி கைபேசி திரையை தொட்டு பயன்படுத்துவோம். அழுத்தும் வேகம், மேலே கீழே தடவுவது என இந்தச் செயல்கள் ஒவ்வொரு ஆளுக்கும் வேறுபடும்.

இந்த வேறுபாடுகளை வைத்து அந்தக் கைப்பேசியின் உரிமையாளர் யார் என்பதை கண்டறிந்து மற்றவர் தொட்டால் திரை அணைத்துவிடும் புதிய மென்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


இதை நிறுவியது முதல் உங்களின் விரல் அசைவு வேகம், தொடும் அழுத்தம், இழுக்கும் முறை போன்றவற்றை உள்வாங்கி பதிந்து கொள்ளும்.

100 நபர்களிடம் நடத்திய சோதனையில் இந்த மென்பொருள் 98% அளவில் உரிமையாளரை சரியாகக் கண்டுபிடித்து விட்டது.

பிற மென்பொருள்கள் மற்றும் விளையாட்டுகள் விளையாடும் போது இந்த மென்பொருள் வேலை செய்யாது. ஆனால் முக்கியமாக மின்னஞ்சல், குறுந்தகவல் மற்றும் புகைப்படங்களை பார்க்கும் போது இது செயற்பட்டு பிறர் பயன்படுத்தாத வண்ணம் காக்கும்.

விரைவில் Silent Sense மென்பொருள் அனைவரின் பயன்பாட்டிற்கும் வர இருக்கிறது.

# பேஸ்புக் Status இனை எடிட் செய்ய புதிய வசதி:




பேஸ்புக் தளம் அவ்வப்போது புதிய வசதிகளை வெளியிட்டு சமூக வலை தளங்களில் தான் எப்போதும் ராஜா என்பதை நிரூபித்து வருகிறது. அவ்வகையில் சமீபத்தில் வந்துள்ள புதிய வசதி நாம் பகிர்ந்த Status களை Edit செய்யும் வசதி. இதன் மூலம் நாம் ஒரு Status ? இல் ஏதேனும் எழுத்துப் பிழை செய்திருந்தால் அதை சரி செய்து கொள்ளலாம்.

இதை செய்ய நீங்கள் ஏற்கனவே பகிர்ந்த Status ஒன்றிற்கு செல்லுங்கள். அதில் வலது மூலையில் உள்ள Options Icon ஐ கிளிக் செய்யுங்கள். அதில் Edit ஒன்று ஒரு புதிய வசதி வந்திருக்கும். இப்போது மாற்றம் செய்யும் வசதி வரும். தேவையான மாற்றத்தை செய்யுங்கள். பின்னர் Done Editing என்பதை கிளிக் செய்யுங்கள்.அவ்வளவு தான் உங்கள் Status எடிட் செய்யப்பட்டு விட்டது. ஆனால் இதை வைத்து ஏதும் ஏமாற்றும் வேலைகளை நீங்கள் செய்ய முடியாது. காரணம் நுனவை செய்து முடித்தவுடன் Done Editing என்று வந்து விடும். இதனால் நீங்கள் எப்போது, என்ன மாற்றம் செய்தீர்கள் என்று எல்லாமே வந்து விடும். யாரெல்லாம் போஸ்டை பார்க்க முடியுமோ அவர்களால் நீங்கள் எடிட் செய்ததையும் பார்க்க முடியும்.

ஏதேனும் தவறாக எழுதி இருப்பின் இதை பயன்படுத்தி மாற்றம் செய்யலாம். இது நிறைய பேருக்கும் பயன்படும் வசதியாக இருக்கும். iPhone பயனர்களுக்கும் விரைவில் இந்த வசதி கிடைக்கும்.

# பரபரப்பான கூகிள் கண்ணாடி!



இனி கடுகளவிற்கு சுருங்கிவிடும் போலிருக்கிறது தகவல்தொழில்நுட்பச் சாதனங்கள். கையளவு தொலைபேசி.... ஒரு ஸ்மார்ட் கை கடிகாரமாக மாறியுள்ளது.. சிறிய மூக்கு கண்ணாடி பட்டையளவே உள்ள கூகிள் கண்ணாடியில் அசத்தலான அனைத்து வசதிகளும் வந்துவிட்டது. இது வெறும் கண்ணாடி அல்ல.. ஒரு மினி ஸ்மார்ட்போன், ஒரு மினி கம்ப்யூட்டர்.. ஒரு மினி லப்டொப்.. ஒரு மினி டப்ளட்... இப்படி எதைச்சொன்னாலும் இதற்கு ஒப்பாகாது... ஏனென்றால் இவைகளில் உள்ள அனைத்து வசதிகளையும் ஒருங்கே பெற்றுள்ளது கூகிள் கண்ணாடி (Google Glass).

மொபைல் தொழில்நுட்பத்தின் அடுத்தக் கட்ட பரிணாமம் என்று கூட இதைச் சொல்லலாம்.

அப்படி என்னதான் இந்த கூகிள் கண்ணாடியில் உள்ளது?

இல்லாத்தது எது என்று கேட்டால்தான் சரியான கேள்வியாக இருக்கும். காரணம் இது வரைக்கும் வந்த மொபைல்களில் உள்ள அனைத்து வசதிகளும் இதில் உள்ளன.

வை-பை, புளூடூத், டச் ஸ்கிரீன், இன்ரநெற் வசதிகள்...

வீடியோ எடுக்கும் வசதி...

போட்டோ எடுக்கும் வசதி..

எடுக்கப்படும் படங்கள் மற்றும் வீடியோக்கள், அக்கண்ணாடியில் உள்ள Memory Card இல் சேமிக்கும் வசதி..

எடுக்கப்பட்ட படங்கள், வீடியோக்களை சமூக வலை தளங்கள் மற்றும் இ-மெயிலில் பகிர்ந்து (Share) கொள்ளும் வசதி...

E-mail களை இக் கண்ணாடியிலேயே பார்த்துக்கொள்ளும் வசதி...

மின்னஞ்சலுக்கு வாய்மொழி (Voice input) மூலம் பதிலளித்தால், அது எழுத்துகளாக மாறிவிடும்.

ஏதாவது சந்தேகம் ஏற்பட்டு, கண்ணாடியிடம் கேட்டால், உடனே பதில் தந்து விடும். உதாரணமாக உலக வங்கி எங்குள்ளது? உலக வங்கியின் படங்கள் வேணடும் எனக் கேட்டால், இன்ரநெற்றில் தேடி, அதற்குரிய தகவல்களை உடனே நமது கண் முன்னே நிறுத்தும்.

கண்ணாடியின் சிறிய ஸ்கிரீனில் அதுபற்றிய தகவல்களைப் படங்களை காட்டும்.

எங்காவது வெளியில் அல்லது வெளியூரில் பயணிக்கும் போது, செல்லவேண்டிய பகுதிக்கு வழி கேட்டால் அந்த வழிக்குரிய MAP ஸ்கிரீனில் காண்பிக்கும்.

செல்லுமிடமெல்லாம் உள்ளதை, நம் கண்ணால் பார்க்கும் பகுதிகள் அனைத்தையும், இங்கிருக்கும் உறவினர்கள், நண்பர்களுக்கு நேரடியாக ஒளிபரப்பலாம் (Live Telecast).

இது ஒரு மொழி மாற்றியாகவும் (Translator) செயல்படுகிறது. மொழி தெரியாத நாடுகளில் பயணம் மேற்கொள்ளும்போது அங்கு பேசப்படும் மொழியை நமக்கு வேண்டிய மொழியில் மொழிபெயர்த்துக் கொடுக்கிறது..

இத்தனை சிறப்பம்சங்கள் கொண்ட இதனுடைய விலை சற்று அதிகம்தான்... ஆனால் இதிலுள்ள வசதிகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது குறைவுதான்.. ஆரம்பவிலை இரண்டரை இலட்சம் ரூபா மட்டும்தான்.. இல்லாதது எதுவும் இல்லை என்று சொல்லுமளவிற்கு வச திகளடங்கிய இக்கூகிள் கண்ணாடி.. இனி உலகையே ஆளப்போகிறது என்பதில் சந்தேகமில்லை...





# உங்கள் மனதில் உள்ளதை வெளிப்படுத்தும் தொழில்நுட்பம்



Wristband எனும் தொழில்நுட்பம் மூலம் பல்வேறு செயற்பாடுகளை செய்ய முடியும் என்பது அண்மையில் நிரூபிக்கப்பட்டிருந்தது. இவை உயிர் தொழில்நுட்பத்தினைக் கொண்ட பிந்திய கண்டுபிடிப்பாக இருந்தன. இந்நிலையில் தற்போது Headbands எனும் புதிய தொழில்நுட்பம் ஒன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இதன் மூலம் மனிதனின் மனதில் உள்ளவற்றினை இலகுவாக அறிந்துகொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கனடாவை சேர்ந்த InteraXon எனும் நிறுவனத்தினால் இத்தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

# கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் 37 மாணவர்கள் புலமைப்பரிசில் சித்தி



(கிளிநொச்சி)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி மகாவித்தியாலத்தியில் 191 புள்ளிகளைப் பெற்று கிளிநொச்சி மாவட்ட ரீதியில் முதலிடத்தினை செல்வி. யோகலிங்கம் கோபிகா பெற்றுக் கொண்டுள்ளார் இம்முறை இப்பாடசாலையிலிருந்து 37 மாணவ மாணவியர் தரம் 5 இற்கான புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சித்தியடைந்த மாணவர்களின் விபரம்:

யோகலிங்கம் கோபிகா 191 -மாவட்டத்தில் ஆம் நிலை, ஸ்ரீதரன் பவித்திரன் 183- மாவட்டத்தில் 7ஆம் நிலை, றொபேட்சன் அபினயா -180 மாவட்டத்தில் 11 ஆம் நிலை, குணானந்தன் அபின் -179 மாவட்டத்தில் 13 ஆம் நிலை, சத்தியமூர்த்தி சுருதி -177 மாவட்டத்தில் 16 ஆம் நிலை, வினோதரன் லோஜிகா -174 மாவட்டத்தில் 21 ஆம் நிலை, இராஜேந்திரன் யுவாஜினி -174 மாவட்டத்தில் 21 ஆம் நிலை, விக்னேஸ்வரன் சிபானுகன் -172 மாவட்டத்தில் 30ஆம் நிலை, நாகலிங்கம் பிரதாபன் -172 மாவட்டத்தில் 30 ஆம் நிலை, உதயகுமார் சுரேணுகா -172 மாவட்டத்தில் 30 ஆம் நிலை, ஜெகதீஸ்வரன் கம்சாஜனி -171, உமாபதீஸ்வரன் ஆனந்தி -169, இராஜநாதன் டிசபத்மன் -169, ரவிதரன் மதுசாளினி 169, சபேஸ் ஜானுகா 165, செல்வராசா ஜெனட் நிருசா- 164, டினேந்திரகுமார் சுஸ்மிதா- 164, உதயகுமார் கிசோப்பிரியன்- 164, பரணீஸ்வரன் ஜஸ்ரீன- 164, ராஜ்குமார் அபினயா- 163, புஸ்பாகரன் குபேரன்- 163, விமலநாதன் சஞ்சீதா- 163, விமலநாதன் விதுசன்- 162, குபேந்திரன் டிலக்னா- 162, பாஸ்கரன் எழில்சாந்த்- 161, தியாகராஜன் லோசன்- 160, முருகமூர்த்தி கஜனிதரன்- 160, சிவ நாதச்செல்வம் சஞ்சிகா 159, பத்மராசா கயல்விழி-159, சுரேந்திரன் யதுர்சிகா- 159, சுந்தரலிங்கம் சஞ்சிகா 159, வையகுரு நாதன் தாமிரா- 158, சோதிரவி லக்சியா- 156, விஜயகுமார் பிரிந்தியா- 155, சுரேஸ்வரன் கவினா- 154, பாலகிருஷ்ணன் தனுசியா- 154, ஜோன் கென்னடி துவாரகா- 153.

# சட்ட அலுவலர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சில் சட்ட அலுவலர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரி 21இற்கும் 45வயதிற்குட்பட்டவராகவும் இலங்கை பிரஜையாகவும், நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய உடல் நல ஆரோக்கியமுள்ளவராகவும் நற்பண்புகளை கொண்டவராகவும் இருத்தல் அவசியமாகும்.

கல்வித்தகைமையாக, சட்டத்தரணியாகவும் சட்டம் சம்பந்தமான பட்டம் பெற்றவராகவும் மூன்று வருட அனுபவத்துடன், சரளமாக ஆங்கில மொழியில் தேர்ச்சியும் பெற்றிருத்தல் வேண்டும்.

பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரியதுமாகும் நேர்முகப் பரீட்சையில் ஒவ்வொருதகைமைகளுக்கும் குறிப்பிட்ட புள்ளிகள் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் 25.10.2013இற்கு முன்னர் செயலாளர், கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு, புதிய செயலகம், மாளிகாவத்தை கொழும்பு -10 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பதாரியின் கையொப்பம் சமாதான நீதவான் அல்லது வழக்கறிஞர் மற்றும் அரச உயர் அதிகாரியினால் உறுதிப் படுத்தப் படல்வேண்டும். (105)

## புன்னை நீராவி பிரஜைகள் குழு தேசிய ரீதியில் முதலிடம்

(முழங்காவில்)

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு தேசிய ரீதியில் சிறந்த சிரேஷ்ட பிரஜைகள் குழுவை தெரிவு செய்வதற்கான போப்பி நிகழ்வில் கிளி. மாவட்ட கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் புன்னை நீராவி சிரேஷ்ட பிரஜைகள் குழு முதலிடம் பெற்றுள்ளது.

இப் போட்டி நிகழ்வினை முதியோர் திணைக்களமும் ஹெல்த் ஏஜ் நிறுவனமும் இணைந்து நடாத்தியிருந்தன.

இதில் முதல் இடத்தைதட்டிக் கொண்ட புன்னை நீராவி சிரேஷ்ட பிரஜைகள் குழுவுக்கான விருதுகளும் சான்றிதழ்களும் 10 ஆயிரம் ரூபா காசசோலையும் கிடைத்துள்ளதாக அதன் செயலாளர் சி. பெருமாள் தெரிவித்தார். (112)

# சிறுவர் தினப் போட்டிமுடிவுகள்

(முன்னைய தொடர்ச்சி)

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்தினால் கரவெட்டி கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட சர்வதேச சிறுவர் தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

**ஓவியம் ஆரம்பப்பிரிவு**

கை.பிருதுவி (யா.கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), யோ.சங்கீதா (யா/வதிரி திரு. இருதயக்கல்லூரி), கு.கபிலன் (யா/விக்னேஸ்வரா ஆரம்ப பாடசாலை).

**கீழ்ப்பிரிவு**

த.அபிசன் (யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலம்), கு.நிமல்ராஜ் (யா/விக்னேஸ்வரா கல்லூரி), உ.உதயராஜ் (யா/வதிரி திரு.இருதயக் கல்லூரி),

**மத்திய பிரிவு**

இ.சுரக்சனா (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), பா.நிசாந்தன் (யா/கரணவாய் மகா வித்தியாலயம்), சி.பிரியேந்திரா (யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்),

**கவிதை கீழ்ப்பிரிவு**

சி.லக்சிகா (யா.ஞானாசாரியார் கல்லூரி), பி.கேதாரணி (யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), வி.தர்சிகா (யா/கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்).

**.கவிதை மத்திய பிரிவு**

ஜெ.தாட்சாயினி (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), க.சாமந்தி (யா/தேவரயாளி இந்துக் கல்லூரி), அ.அபிசாயினி (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)

**மேற்பிரிவு**

ம.கிருசாந்தி (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி),தே.கலைமகள் (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), ந.காயத்திரி (யா/கரணவாய் மகாவித்தியாலயம்). (முற்றும்) (18)

# பதிவிறக்கப் பெட்டகம்

தன்னை நேசிப்பவனையும் நேசிப்பது ஒரு பெரிய காரியமா?

அதை நாய் செய்யும்.

தன்னை பகைத்தவனையும் நேசிக்க வேண்டும்.

**– பிரமிள் (தியானதாரா)**

இங்கிருக்கும் நாம் மட்டும் நாம் அல்ல, நாம் அனுபவித்துக்கொண்டிருப்பது எதுவோ அதுவும் நாம்தான். பியானோ வாசிக்கும்போது பியானோ என்னில் ஒரு பகுதி. சாப்பிடும் போது சாப்பாடு என்னில் ஒரு பகுதி. கழிவறையில் இருக்கும்போது மலக்குழியும் நம்மில் ஒரு பகுதியே.

**– நாராயண குரு**

ஒவ்வொரு மனிதனும் நிலவைப் போல. அவனிடம் இருள் சூழ்ந்த மறுபக்கம் இருக்கிறது. நிலாவைப் போலவே அவன் பிறரிடம் அதைக்காட்ட மாட்டான். **– மார்க் ட்வைன்**

மனித மனமே சிறிதும் நம்பிக்கைக்குகந்தது இல்லை. பல வருடங்களை இருந்த சுவடே தெரியாமல் பிரக்ஞையில் இருந்து அழித்துவிட்டிருக்கும். ஏதோ ஐந்து நிமிடங்களை அநாதி கால நீடிப்புப் போல அணு அணுவாக நினைவின் மேல்தளத்தில் வைத்திருக்கும். அதனுடைய கடிகாரமும் கலண்டரும் தனி. ஒருவேளை அதெல்லாம் அதற்குக் கிடையாதோ என்னவோ. **– அசோகமித்திரன்**

மனிதனுக்கு லாகிரிப் பொருட்கள் தேவையாகத்தான் இருக்கின்றன. குடும்பம், சம்பள உயர்வு, அதிகாரம், சமூக அந்தஸ்து... இவைகள் எல்லாமே போதைப் பொருட்களாக உருவெடுக்கின்றன. **– நகுலன்**

சாதாரணமாக ஒரு நண்பரிடம் செய்வது போல் வாசகனிடம் நலம் விசாரிப்பது, புன்னகையுடன் அன்பாக பேசுவது, கவனிப்பது இதையெல்லாம் செய்வதில் சில எழுத்தாளர்களுக்கு தயக்கம் உள்ளது. இதை ஒரு சமூக பண்பாட்டுக் குறை எனலாம். உதாரணமாக சில வருடங்களுக்கு முன் நான் சத்யம் தியேட்டரில் தியோடர் பாஸ்கரனை சந்தித்தேன். அக்காலத்தில் நான் உயிர்மையில் எழுத ஆரம்பித்திருக்கவில்லை. ஆனால் பாஸ்கரனின் எழுத்து மிகவும் பிடிக்கும். நான் அவரிடம் சென்று இதை சொன்னேன். அவர் என்னை பார்க்காதது போல் திரும்பி பக்கத்தில் நின்ற நண்பரிடம் பேச ஆரம்பித்தார். பின் என்னிடம் எதையும் சொல்லாமல் கிளம்பி விட்டார். இது எழுத்தாளனின் விநோத குணம் அல்ல. சில தன்நிநபர்களுக்கு உள்ள ஆளுமைக் குறைபாடு. சுஜாதா கூட புதியவர்களை சந்திப்பதில் கூச்சம் கொண்டவர் தான்.

சில வாசகர்கள் மாறுபட்ட கருத்துக்களோடு வருவார்கள். உடனே நம் எழுத்தாளர்கள் அவர்களை உட்கார வைத்து வகுப்பெடுப்பார்கள். வாசகர் வெறுத்துப் போவார். ஒரு வாசகர் பாராட்டுவதோ விமர்சிப்பதோ எழுத்தாளனை தூக்கி வைக்கவோ கீழே போட்டு மிதிக்கவோ அல்ல. அதன் உத்தேசம் உறவை ஸ்தாபிப்பது தான். வாசகன் நான் உங்களுக்கு சரிக்கு சமம் என நிறுவ விரும்புகிறான். அப்போது தான் நட்பு சாத்தியப்படும். இந்த பாராட்டு அல்லது விமர்சனம் ஒரு முகமன் போல அல்லது "வானம் ரொம்ப மந்தாரமா இருக்கே, நல்ல மழை வரும் போல" என வானிலை அறிக்கையுடன் பேச்சை ஆரம்பிப்பது போல.

உரையாடலின் போது வாசகனுக்கு எதுவும் புதிதாக புரிய வைக்கும் அவசியமில்லை. தேவையானது அத்தனையும் அவன் பிரதியில் இருந்தே கற்றுக் கொள்கிறான். நல்ல உரையாடல் இரு நண்பர்கள் சேர்ந்து புது ஊருக்கு பயணம் போவது போல. அதில் பேச்சு அல்ல முக்கியம், புதிய விசயங்களை சேர்ந்து கண்டறியும் திகிலும் ஆச்சரியமும் தான்.

இதையெல்லாம் விட்டு விட்டு சிலர் யாராவது வாசகன் என வந்தால் வாயிலும் காதிலும் ஒரு வெடிப்பெட்டியை சொருகி விட்டு தீக்குச்சி உரச துவங்கி விடுகிறார்கள். அல்லது 'தெய்வம் எந்தக் காலத்திலடா பேசியது' என்ற கணக்கில் பேசாமல் இருந்து விடுகிறார்கள். மனிதர்களிடம் பேசத் தெரியாதவர்கள் மனிதர்களைப் பற்றி, அதுவும் நன்றாகவே, எழுதுவது விசித்திரம் தான்.

**– அபிலாஷ் சந்திரன்**

# ஐ.தே.கட்சியின் பின்னடைவுக்கு காரணம் என்ன?

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன விளக்கம்



ஐக்கிய தேசியக் கட்சிக்குள் காணப்பட்ட உள்ளக பிரச்சினையே அந்தக் கட்சியின் தோல்விக்கு காரணமாக அமைந்துள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்ரிபால சிறிசேன தெரிவிக்கின்றார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இந்தக் கருத்தினை கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்ரிபால சிறிசேன தெரிவித்த கருத்து :-

'ஏன் தேர்தல் ஒன்று நடாத்தப்படுகின்றது. தேர்தலை நடாத்த வேண்டாம் என எதிர்க்கட்சி கூறுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் வரலாற்றில் மிகவும் பாரதூரமான இடத்தை நோக்கி இன்று வந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறான பேரழிவொன்றை சந்தித்திருக்காது. இது வெளியில் ஏற்பட்ட தோல்வி கிடையாது. கட்சிக்குள் காணப்பட்ட உள்ளக பிரச்சினையே கட்சியின் தோல்விக்கு காரணமாக அமைந்துள்ளது. கட்சியின் தலைவருக்கு எதிராக கட்சிக்கு பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. பிரச்சினைகள், சவால்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கட்சியின் தலைவருக்கு எதிராக பேரணியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஆதரவாளர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் மாத்திரமே பங்கேற்கின்றனர். எமது கட்சியை பிரித்தார்கள். எனினும், ஐக்கிய தேசியக் கட்சி இன்று சீரழிந்துள்ளது. 74 முதல் 94 வரை எமது கிராம மட்டத்திலுள்ள மக்கள் கட்சியை விட்டு பிரிந்து செல்லவில்லை"

மத்திய மாகாணத்தில் அநுராத ஜயரட்ன மற்றும் வடமேல் மாகாணத்தில் ஜோஹான் பெர்ணான்டோ ஆகியோர் அதிக விருப்பு வாக்குகளை பெற்றுள்ளபோதிலும், அவர்களுக்கு அமைச்சு பதவிகள் எதுவும் வழங்கப்படாமைக்கான காரணம் குறித்து இதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கும் அமைச்சர் மைத்ரிபால சிறிசேன பதிலளித்தார்.

'ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒன்றிணைந்தே இந்த தீர்மானத்தை எடுக்கின்றது. நீங்கள் குறிப்பிட்ட அநுராத ஜயரட்ன மற்றும் ஜோஹான் பெர்ணான்டோ ஆகியோர் தமது தேர்தல் பிரசாரத்தை சிறந்த முறையில் முன்னெடுத்தனர். அவர்களுக்கு சிறந்த எதிர்காலமொன்று உள்ளது. ஆளும் கட்சியின் அமைப்பாளர், தலைவர்கள், உபதலைவர் போன்ற பதவிகள் வழங்கப்படும். அதனால் எவருக்கும் அநீதி இழைக்கப்படவில்லை"

இதனையடுத்து அந்த உறுப்பினர்களுக்கு ஏதேனும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதா என்றும் ஊடகவியலாளர்கள் வினவினர்.

இதற்கு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதிலளித்தார்.

சுசில் பிரேமஜயந்த தெரிவித்த கருத்து :-

'இல்லை. கூட்டமைப்பில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் வேட்புமனுவில் கையொப்பம் இடுவதற்கு முன்னர் வேட்பாளர் கையொப்பம் இட்ட சத்திய கடதாசியின் பிரதிகள் உள்ளன. தேவையேற்படின் காட்டுகின்றேன்.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் போட்டியிடுகின்றனர். கூட்டமைப்பின் கீழ் அவர்கள் போட்டியிடுவார் க்ளாயின், கூட்டமைப்பின் யாப்பு செயற்படும். கூட்டமைப்புக்கு கீழ்படிந்தே அவர்கள் செயற்படவேண்டும். பதவிகளை வழங்குமாறு இளைய உறுப்பினர்களான இருவரும் எம்மிடம் எவ்வித கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை"

# நீதிமன்ற விசாரணைகள் ஸ்தம்பிதம்

## நீதிவான்கள் பலர் விடுமுறையில்

### தெற்கில் புதிய நெருக்கடி

(கொழும்பு)

மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு விசாரணைகளில் சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளது. அதிகளவான மேன்முறையீட்டு நீதவான்கள் விடுமுறையில் சென்றுள்ள காரணத்தினால் இந்த சர்ச்சை ஏற்பட்டுள்ளது.வழக்கு விசாரணைகளை நடாத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

12 மேன்முறையீட்டு நீதவான்களில் மூன்று பேர் மட்டுமே கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். ஏனைய ஒன்பது பேரும் விடுமுறையில் சென்றுள்ளனர்.

இதனால் நேற்றுமுன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்ற விசாரணைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. அதிகளவான மேன்முறையீட்டு நீதவான்கள் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டுள்ளனர். இதேவேளை, அண்மையில் பொதுநலவாய நாடுகள் நீதவான் மாநாட்டில் பங்கேற்று நாடு திரும்பிய மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதவான் ஸ்ரீஸ்கந்தராஜா நோய்வாய்ப்பட்டுள்ளார். இதனால் ஒரு மாத காலத்திற்கு ஓய்வு பெற்றுக்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வடக்கிலிருந்து தெற்கு நோக்கி

## நல்லிணக்கத்தை தேடும் வாகன பவனி

### 54 நாடுகளின் தேசிய கீதத்துடன் விழிப்புணர்வு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் தலைநகர் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டினை முன்னிட்டு எம்.டீ.வி மற்றும் எம்.பீ.சி நிறுவனங்கள் தேசிய இளைஞர் சேவை மன்றத்துடன் இணைந்து நடாத்தும் வாகன பவனி இன்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிமனை உதவிப்பணிப்பாளர் எம்.நைறூஸ் தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிமனையினால் ஏற்பாடு செய்யப்பட்ட மட்டு மாவட்ட ஊடகவியலார்களுடான வருடாந்த சந்திப்பு கடந்த வியாழக்கிழமை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மட்டு மாவட்ட பணிமனையில் இடம் பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியிலுள்ள வட கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்டங்களுக்குச் சென்று வரும் இந்த வாகன பவனி மாவட்டங்களுக்கு வரும் போது, ஒவ்வொரு மாவட்டங்களிலும் பொதுநலவாய நாடுகளில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு நாடுகளின் தேசிய கீதம் இசைக்கப்பட்டு அந்த நாட்டைப் பற்றிய குறிப்பொன்றை மும்மொழிகளிலும் கூறப்பட வேண்டுமென்ற செயற்றிட்டத்திற்கு அமைவாக மட்டக்களப்புக்கு இன்று வருகை தரவுள்ள குறித்த வாகன பவனிக்கு மட்டக்களப்பு பஸ் நிலையத்திற்கு முன்பாக வைத்து பொட்ஸ்வானா நாட்டு தேசியக் கீதம் மட்டக்களப்பு மஹஜனக் கல்லூரி மாணவிகளால் இசைக்கப்பட்டு அதே கல்லூரி மாணவிகளால் தமிழ் ஆங்கிலம் சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் அந்த நாட்டைப் பற்றிய குறிப்பொன்றும் கூறப்படவுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிமனை உதவிப்பணிப்பாளர் எம்.நைறூஸ் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம். சார்ல்ஸ் மற்றும் முக்கிய அதிதிகள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பொதுநலவாய நாடுகளில் அங்கத்துவம் பெற்றுள்ள 54 நாடுகளின் தேசிய கீதங்கள் இலங்கையில் 54பகுதிகளில் இசைக்கப்பட்டு அவற்றைப் பற்றி சிறுகுறிப்பு மும்மொழிகளிலும் தெரிவிக்கப்படவுள்ளதுடன் குறித்த வாகன பவனி பருத்தித் துறையிலிந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# திட்ட மேலாண்மைத்துறையில்

## முதுமானிக் கற்கை நெறி

### இலங்கையில் அறிமுகம் செய்கிறது பிரிட்டிஷ் பல்கலைக்கழகம்

(கொழும்பு)

SLIIT கணனி பிரிவானது, ஐக்கிய இராச்சியத்தின் முன்னணி பல்கலைக்கழகங்களில் ஒன்றான கீல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து சர்வதேச அங்கீகாரம் பெற்ற திட்ட மேலாண்மை முதுமானி கற்கைநெறியை (MSc in Project Management) நடத்தவுள்ளது. இந்த 1 வருட முதுமானி கற்கையின் வகுப்புக்கள் ஒக்ரோபர் மாதத்தின் இரண்டாவது வாரத்திலிருந்து ஆரம்பிக்கப் படவுள்ளது.

இந்த திட்ட மேலாண்மை முதுமானி கற்கையானது வளர்ந்துவரும் தொழிற்துறையின் போட்டித்திறன், திறமைகள் மற்றும் அறிவு போன்ற வினாக்களை எதிர்கொள்ளக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கீல் பலகலைக் கழகத்தின் இந்த உயர்பட்ட கற்கை மூலம் வழங்கப்படும் திட்ட மேலாண்மை நெறிமுறைகள் மற்றும் ஆற்றல் ஆகியன மாணவர்கள் எந்தத் துறையை தேர்ந்தெடுப்பினும் பயனுள்ள தாகவே அமையும். 50 ஆவது ஆண்டு பூர்த்தியை கொண்டாடும் கீல் பல்கலைக்கழகமானது உலகளவில் மூன்றாமிடத்திலும், தற்போது சண்டே டைம்ஸ் பல்கலைக்கழக லீக் தரவரிசை அட்டவணையில் 29ஆவது இடத்தி லும் உள்ளது. இக் கற்கையானது நவீன வணிக சூழலில் திட்ட மேலாளர் தனது பங்கினை சரிவர மேற்கொள்வதற்கான தொழில் நுட்ப மற்றும் செயல்முறை திறன்களை வழங்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. மேலும் இக் கற்கையானது மாணவர் களிற்கு மக்கள் முகாமைத்துவம் மற்றும் குழு கட்டமைப்பிற்கு தேவையான நுண் திறன்களை வழங்குகிறது. எந்தவொரு துறையிலும் இளநிலை பட்டம் அல்லது பல ஆண்டுகால வேலை அனுபவம் ஆகியன இக்கற்கைக்கான தகைமைகளாக கொள்ளப்படுகிறது' என கீல் பல்கலைக் கழகத்தின் பேராசிரியரும், முதுமானி பாடத்திட்டத்தின் பணிப்பாள ருமான ஸ்டீவ் லிங்க் மேன் தெரிவித்தார்.

# கைதடி மேற்கில் விபத்து

## சைக்கிளில் சென்ற முதியவர் பலி

(கைதடி)


கோப்பாய் வீதியில் கைதடி மேற்குப்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதிவிபத்தில் வயோதிபர் ஒருவர் பலியானார் கைதடி மேற்கைச் சேர்ந்த கந்தன் ஞானமுத்து வயது 64 என்ற வயோதிபரே இவ்வாறு பலியானார்.

இவரது சடலம் பொலிஸாரால் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் குறித்த மேலும் தெரிய வருவதாவது, சம்பவதினம் குறித்து வயோதிபர் கோப்பாய் வீதியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த போது வீதியின் வளைந்த பகுதி ஒன்றில் வேக மாக வந்த ஓட்டோ ஒன்று குறித்த வயோதிபரின் சைக்கிள் மீது மோதவே வயோதிபர் அருகில் இருந்த கழிவு நீர்வாய்க்காலில் வீழ்ந்து காயமடைந்து இறந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தை அடுத்து குறித்த ஓட்டோ அங்கிருந்து தப்பிச் சென்றதாகவும் இதன் பின்னர் உயிரிழந்தவரின் சடலம் யாழ்போதனாவைத்தியசாலையில் சாவகச்சேரி பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டதுடன் ஓட்டோ ஓட்டுநரான சந்தேகநபர் பின்னர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பா, 51)

# "13" இற்கு வலுச்சேர்க்கும் கட்சிகள்

## அரசுக்கு அதிகரிக்கும் தலைவலி



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு இடையிலான கூட்டணி வலுவடைந்தால் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு தலைவலியை ஏற்படுத்தும் என தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பு செத்ஸ்ரீபாயவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


கிழக்கு மாகாணசபையில் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை மூலம் கூட்டமைப்பிற்கும் முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையிலான உறவு அம்பலமாகியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிவினைவாத நோக்கங்களை முன்னிலைப் படுத்தி செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

புலிகள் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்ட போதிலும், புலிகளின் பிரிவினைவாத கொள்கைகள் கோட்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலைமையானது அரசாங்கத்திற்கும் நாட்டிற்கும் பாதக விளைவுகளை ஏற்படுத்தக் கூடுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

27. 
உருவில் உள்ள சிறுவன் பயணம் செய்வது மாலை வேளையில் எனின் சிறுவன் செல்லும் திசை யாது?
1. தெற்கு     2. மேற்கு     3. கிழக்கு


28. விபுலன் ஒரு ஆண்பிள்ளை விபுலனின் தம்பிக்கு இரண்டு சகோதரிகளும், இரண்டு சகோதரர்களும் உள்ளனர். எனின் விபுலனுக்கு எத்தனை சகோதரர்கள் உள்ளனர்?
1. 1     2. 2     3. 3

29. 
கடிகார முகத்தில் உள்ள மணித்தியால முள் அமைந்துள்ள முறைக்கு ஏற்ப நிமிடமுள் இருக்க வேண்டிய இலக்கமாவது?
1. 6இல்     2. 12இல்     3. 10இல்

30. 6 லீற்றர் எண்ணெய் 10 சிறிய போத்தல்களில் அடைக்கப்பட்டால் ஒரு போத்தலில் உள்ள எண்ணெய்யின் அளவு யாது?
1. 6.0*l*     2. 10.0*l*     3. 0.6*l*

❖ **உருவில் A,B,C,D நகரங்களுக்கிடையிலான தூரங்கள் பற்றிய விபரம் தரப்பட்டுள்ளது.**

நகரம் A இல் இருந்து B நகரத்துக்கான தூரமும், நகரம் C யில் இருந்து நகரம் D க்கான தூரமும் சமனாகும். நகரம் B யிலிருந்து நகரம் C க்கானதூரம் A,B நகரங்களுக்கிடையிலான தூரத்தின் $\frac{1}{3}$ பங்காகும் நகரம் A யில் இருந்து B க்கான தூரம் 27km ஆகும்.




31. நகரம் B இல் இருந்து C க்கான தூரம் யாது? ......................

32. நகரம் A இல் இருந்து B,C ஊடாக D க்கான தூரம் யாது? ......................

33. வாகனம் ஒன்று 1லீற்றர் பெற்றோலில் 9km தூரம் பயணம் செய்யும் எனின் அவ்வாகனம் நகரம் A யில் இருந்து D வரை பயணம் செய்ய தேவையான பெற்றோலின் அளவு யாது? ......................

❖ **கீழுள்ள சட்டகத்தை அவதானித்து 34ஆம், 35ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| B | T | L | X | M |
| S | P | G | A | U |
| C | R | K | I | H |
| J | O | W | Z | D |
| Y | E | V | F | N |

34. இச்சட்டத்தில் மேலிருந்து கீழாக நான்காவது வரிசையில் இடமிருந்து வலமாக ஐந்தாவது பெட்டியில் உள்ள எழுத்து எது? ......................

35. இச்சட்டத்தில் கீழிருந்து மேலாக ஐந்தாவது வரிசையில் வலமிருந்து இடமாக மூன்றாவது பெட்டியில் உள்ள எழுத்து எது? ......................

36. கை, பூ, இலை, கண் போன்ற சொற்கள்
1. சினைப்பெயர்கள்     2. குணப்பெயர்கள்     3. பொருட்பெயர்கள்

37. எனது தாயின் சகோதரனின் தாயின் கணவன் எனது தாய்க்கு என்ன உறவு முறை?
1. கணவன்     2. தந்தை     3. மாமன்

38. வர்தா 2011ம் ஆண்டு 7வது பிறந்த தினத்தை கொண்டாடினாள் எனின் அவள் பிறந்த ஆண்டு யாது?
1. 2005     2. 2003     3. 2004

◆ **39 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக**

39. இது நான்கு எழுத்துக்களை கொண்ட சொல்லாகும். இரண்டாம் எழுத்தை நீக்கினால் பணம் ஆகும். மூன்றாம் எழுத்தை நீக்கினால் பயம் ஆகும். எனின் இந்த நான்கு எழுத்து சொல் யாது ? ......................

40. நான் யாழ்ப்பாணத்தில் உள்ள நவாலி என்னும் ஊரில் பிறந்தேன். என்னை தங்கத் தாத்தா என அழைப்பார்கள். குழந்தைகளுக்கான பல பாடல்களை பாடியுள்ளேன் நான் யார் ? ......................





## தரம் - 5 புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2014


# கல்வி முரசு





❖ **1ஆம், 2ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருக்களிடையே ஒத்த இரண்டு உருக்களை குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடையின் கீழ் கோடிடுக.**

01.    
A     B     C     D

1. B உம் D உம்     2. B உம் C உம்     3. A உம் D உம்

02.  

 
A     B     C     D





1. A உம் D உம்     2. B உம் C உம்     3. C உம் D உம்

❖ **கீழ்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ்கோடிடுக.**

03. சர்மினாவின் தங்கை சாமிலா, ஆமினாவின் சகோதரி சர்மினா அதன்படி கூறக்கூடிய கூற்று.
1. ஆமினாவின் தங்கை சர்மினா
2. சர்மினாவின் அக்கா ஆமினா
3. சாமிலாவின் சகோதரி ஆமினா

04. நான்கில் ஒன்றை நீக்கினால் ஐந்து ஆகும். இக்கூற்று உண்மையாவது
1. எழுத்துக்களில் எழுதும் போது
2. இலக்கத்தில் எழுதும் போது
3. உரோமன் எண்குறியில் எழுதும் போது

05. கீழே தரப்பட்ட கடிகாரமுகங்களின் நேரங்களை ஒழுங்குமுறையாகக்காட்டும் விடையை தெரிக.

A  B  C  D 

1. B, C, A, D     2. C, A, B, D     3. D, C, A, B

06. 3, 2, 6, 4, 9, 6 [          ] 10, 18, 12, 21, 14 எண் தொடரில் வெற்று கூட்டினுள் வரவேண்டிய எண்களை கொண்ட விடையை தெரிக.
1. 12, 8, 15     2. 8, 10, 14     3. 15, 12, 8

தராசுகளில் உள்ள உருக்களின்படி 7ஆம், 8ஆம் வினாக்களுக்கு விடை தருக.




07. ■ இவ்வுருவின் நிறை யாது? 1. 375g 2. 450g 3. 350g

08. ○ இவ்வுருவின் நிறை யாது? 1. 100g 2. 150g 3. 125g

❖ கீழேயுள்ள விபரணத்தை வாசித்து வினாக்களுக்கு விடைதருக.


| | | |
|---|---|---|
| 1 அப்பிள் | 2 அப்பிள் | 1 பப்பாசி |
| 1 தோடை | 2 தோடை | 1 அன்னாசி |
| 1 அன்னாசி | 1 அன்னாசி | 65.00 |
| 75.00 | 120.00 | |

09. அன்னாசி ஒன்றின் விலை யாது? 1. 30.00 2. 24.00 3. 45.00

10. பப்பாசி ஒன்றின் விலை யாது? 1. 38.00 2. 35.00 3. 32.00

11. அப்பிள் ஒன்றும் தோடைஒன்றும் வாங்கத்தேவையான பணத்தொகை யாது?
1. 40.00 2. 52.00 3. 45.00


12. சதுரமுகி செய்வதற்கான வெட்டுரு தரப்பட்டுள்ளது. இதனை மடித்து ஒட்டுவதன் மூலம் பெறப்படும் சதுரமுகியின் எதிர்ப்பக்கங்களில் உள்ள புள்ளிகளின் கூட்டுத்தொகை 7 ஆக அமையக்கூடிய உரு எது?




13. உலோகங்கள் தொடர்பாக கூறப்பட்ட கூற்றுக்களில் பிழையான கூற்று எது?
1. உலோகங்கள் வெப்பமேற்றும் போது விரிவடையும்.
2. இரசம் திரவநிலையில் உள்ள உலோகமாகும்.
3. உலோகங்களிலே அடர்த்தி கூடியது வெள்ளி ஆகும்.

14. எனது சட்டையில் மூன்று வகையான பத்து நாணயங்கள் இருந்தன. அவற்றின் மொத்தப் பெறுமதி 27ரூபா எனின் என்னிடம் இருந்த நாணயங்கள் எவை?
1. ரூபா 5 நாணயங்கள் 4, ரூபா 2 நாணயங்கள் 3, ரூபா 1 நாணயங்கள் 3
2. ரூபா 5 நாணயங்கள் 4, ரூபா 2 நாணயங்கள் 2, ரூபா 1 நாணயங்கள் 3
3. ரூபா 5 நாணயங்கள் 3, ரூபா 2 நாணயங்கள் 5, ரூபா 1 நாணயங்கள் 2

15. உருவில் உள்ள அடைப்புக்கு பொருத்தமான பகுதியை தெரிவு செய்க.




16. 9 × 0 = 9 ⊠ 9 இக்கோலத்திற்கு ஏற்ப ⊠ என்ற குறியீடு எதற்காக வரையப்பட்டுள்ளது.
1. கூட்டல் 2. கழித்தல் 3. வகுத்தல்



17. பாதையில் செல்லும் போது நாம் கவனிக்க வேண்டியது
1. பாதையின் இடது புறமாகச் செல்ல வேண்டும்.
2. பாதையில் வலது புறமாகச் செல்ல வேண்டும்
3. பாதையில் வரிசையாக செல்ல வேண்டும்.

18. ஆப்பிழுத்த குரங்கு போல என்ற உவமைத்தொடரின் கருத்து
1. தொடர்ந்து முயற்சிசெய்து பயனடைதல்.
2. மீளமுடியாத துன்பத்தில் சிக்கியிருத்தல்.
3. வேதனைப்பட்டு வெற்றியடைதல்.

❖ **19ஆம், 20ஆம் வினாக்களுக்கு அறிவுறுத்தலுக்கு ஏற்ப செயற்படுக**

X உண்மையாகவும் Y உண்மையல்லாமலும் இருப்பின் Aஐ தெரிவு செய்க
X உண்மையல்லாமலும் Y உண்மையாகவும் இருப்பின் Bஐ தெரிவு செய்க
X,Y இரண்டும் உண்மையாக இருப்பின் Cஐ தெரிவு செய்க
X,Y இரண்டும் உண்மையாக அல்லாமல் இருப்பின் Dஐ தெரிவு செய்க

19. X - ஒற்றை எண்கள் யாவும் முதன்மை எண்கள்
Y - அடுத்தடுத்துள்ள இரு முக்கோண எண்களின் கூட்டுத்தொகை சதுர எண்களாகும்
1. A 2. B 3. D

20. X - மாணிக்கக்கல் துகள்களை போடும் கூடை நாம்புவ
Y - ஒளி நேர்கோட்டில் பயணம் செய்கிறது.
1. A 2. B 3. C

**A+B=35 , B+C=25 , A+C=30**

21. மேலே தரப்பட்ட தகவலின்படி A இன் பெறுமானம் யாது? 1. 12 2. 15 3. 20

22. C யின் பெறுமானம் யாது? 1. 18 2. 10 3. 15

23. தரப்பட்ட திண்மவடிவங்களில் முகங்களின் எண்ணிக்கையின்படி குறைந்த முகங்களின் எண்ணிக்கை -யிலிருந்து கூடிய முகங்களின் எண்ணிக்கை வரை எழுதப்பட்ட வரிசை எது?
1. உருளை, நான்முகி, கூம்பகம், கனவுரு
2. நான்முகி, உருளை, கூம்பு, கூம்பகம்
3. கூம்பகம், நான்முகி, சதுரமுகி, கனவுரு

24. துடித்த - எரிந்து கட்டத்தில் உள்ள சொற்களுக்கு பொருத்தமான விடையை தெரிக.
1. பெயர்சொல் - வினைச்சொல் 2. இணைமொழி - அடைமொழி
3. பெயரெச்சம் - வினையெச்சம்

25. எரிபொருள் விலை அதிகரிப்பு. காரணமாக ஏற்படமுடியாத விளைவு
1. பேருந்து கட்டணம் அதிகரிக்கும்
2. விவசாய விளை பொருட்களின் விலை அதிகரிக்கும்
3. ஆடம்பர பொருட்களின் விலை அதிகரிக்கும்

26. யாழ்ப்பாணத்துக்கான கப்பல் சேவை இருதினங்களாக இடம்பெறவில்லை இதற்கான காரணமாக அமையக்கூடியது.
1. கப்பல் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமை
2. எரிபொருள் விலை அதிகரித்தமை
3. காலநிலையில் சீர்கேடு ஏற்பட்டமை

# வடக்கு மாகாண சபையின் நிதி மூலகங்கள் எவை?

## காத்திருக்கிறது பொருளாதார சவால்கள்

வடமாகாண சபை நிர்வாகமானது அரசியலுடன் பொருளாதாரத்தினையும் இணைத்து தமிழ் மக்களுக்கு ஒரு உடனடி நிவாரணத்தினை வழங்குவது சவாலான விடயம். இச் சவாலை எதிர்கொள்வதிலேயே அதன் வெற்றியும் தங்கியுள்ளதாக கொழும்புப் பல்கலைக்கழக பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

வடக்கில் அரசியல் வெற்றியைச் சாதித்த கூட்டமைப்பு பொருளாதார சவால்களையும் எதிர்கொள்ளவேண்டும் போன்ற விடயங்களில் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் என்ன கருத்துக்களைக் கொண்டுள்ளனர் என்பது பற்றி பல்வேறு மட்டங்களில் கருத்தறியப்பட்டது இந்த வரிசையில் கேட்டறியப்பட்ட கருத்துக்களில் முக்கியமானவை, கொழும்புப் பல்கலைக் கழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கோ. அமிர்தலிங்கம் அவர்கள், வடக்கு மாகாண சபை தேர்தல் முடிவுகள பற்றி தனது கருத்துப் பகிர்வில் தெரிவித்துள்ளதாவது,

வடமாகாண சபை நிர்வாகமானது அரசியலுடன் பொருளாதாரத்தினையும் இணைத்து தமிழ மக்களுக்கு ஒரு உடனடி நிவாரணத்தினை வழங்குவது சவாலான விடயம் என்ற போதும் அது மிகவும் அவசியமாகவுள்ள நிலையில் இச் சவாலை எதிர்கொள்வதிலேயே அதன் வெற்றியும் தங்கியுள்ளது. மேலும் அனைவரும் எதிர்பாரத்ததைப் போல் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்று விட்டது. இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபை முழுமையாகவும் சுதந்திரமாகவும் இயங்க முடியாமல் போனதன் காரணமாக சுதந்திர இலங்கையின் வரலாற்றிலேயே ஒரு அரசியல் ரீதியான நிர்வாக அமைப்பினை தமிழ் மக்கள் நிர்வகிக்கப் போகும் முதலாவது சந்தர்ப்பமாக இதுவாக இருக்கப் போகின்றது.

இது ஒரு அரசியல் ரீதியான வெற்றியாகக் காணப்பட்டாலும் பொருளாதார ரீதியான சவால்கள் நிறையக் காத்திருக்கின்றன. வடமாகாண சபைக்கு ஒரு நிலையான கட்டிடம் கூட இல்லாத நிலை, மையுடன் சவால்கள் ஆரம்பமாகி விட்டன.

இலங்கையில் வடமாகாணத்திற்கு மட்டும் தற்போது வரை மாகாண இறைவரித் திணைக்களம் கிடையாது. பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின்படி மாகாண சபைகளுக்கு சர்வாம் ரீதியிலான வரிவிதிக்கும் அதிகாரமோ வெளிநாடுகளிலிருந்து கடன் பெறுகின்ற அதிகாரமோ கிடையாது.

மாகாண சபைகளுக்கு ஒரு வீதம் புரள்வு வரி விதிக்கும் முன்பிருந்த அதிகாரமும் தற்போது நீக்கப்பட்டுவிட்டது. தற்போது சொத்துக்கள் கைமாற் றப்படும் போது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை மட்டுமே மாகாண சபைகளுக்குரிய பிரதான வரிவருமான மூலமாகக் காணப்படுகின்றது. வடமாகாண இறைவரித் திணைக்களம் தற்போது காணப்படாத காரணத் தினால் இது அமைக்கப்படும் வரை வடமாகாண சபைக்கு முத்திரைத் தீர்வை வருமானம் கிடைப்பதிலும் தாமதங்கள் ஏற்படப் போகின்றன.

இலங்கையிலுள்ள மாகாண சபைகள் மத்திய அரசாங்கம் வழங்கும் திரட்டு நிதியிலேயே பெரும்பாலும் தங்கியிருக்கினறன.

2011 ஆம் ஆண்டு தரவுகளின் படி மேல் மாகாணமானது இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 44.4 பங்களிப்பினைச் செய்திருக்கையில் வட மாகாணமானது 3.7 வீத பங்களிப்பினையும் கிழக்கு மாகாணமானது 5.7 வீத பங்களிப்பினையும் செய்துள்ளன.

வட மாகாணம் இலங்கைப் பொருளாதாரத்திற்கு குறைந்தளவிலான பங்களிப்பினைச் செய்வதன் காரணமாக அதிகள்வான திரட்டு நிதியினை வட மாகாண சபை பெறுவதானது மத்திய அரசாங்கத்திற்கும் வட மாகாண சபைக்கு இடையில் நிலவப் போகின்ற சுமுக உறவிலேயே தங்கியிருக்கப் போகினறது. வெளிநாட்டு உதவிகள் கூட மத்திய அரசாங்கத்தின் திறைசேரி ஊடாகவே வழங்கப்பட வேண்டிய ஏதுநிலைகள் காணப்படுகின்றன.

இவை யாவும் பொருளாதார ரீதியாக வடமாகாண சபை எதிர் நோக்கப் போகும் சவால்களைக் குறித்துக் காட்டுகின்றன. முப்பது வருட காலம் யுத்தத்தினால் மிகப் பெரிய அழிவுகளைச் சந்தித்துகளைப் படைந்துள்ள தமிழ் மக்கள் பொருளாதார ரீதியான எழுச்சியினை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர்.

இவ்விடதகில் வடமாகாண சபை நிர்வாகமானது அரசியலுடன் பொருளாதாரத்தினையும் இணைத்து தமிழ்மக்களுக்கு ஒரு உடனடி நிவாரணத்தினை வழங்குவது சவாலான விடயமெனினும் காலத்திற்குத் தேவையான முயற்சியாகும்.

# சித்திபெறாத மாணவனை தீயினால் சுட்ட தந்தை கைது



நடந்து முடிந்த புலமைப்பரிசில் பரீட்சையில் குறைந்த புள்ளியை பெற்ற தனது மகனை தீயினால் சுட்ட தந்தையை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொகவந்தலாவை கீழ் பிரிவு தோட்டத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. நடந்து முடிந்த புலமைப்பரிசில் பரீடசையில் 95 புள்ளிகளைப் பெற்றதன் காரணமாக புள்ளிகள போதாது எனக் கூறியே தனது 10 வயது மகனை அவரது தந்தை தீயினால் சூடு வைத்துள்ளார்.

பொகவந்தலாவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் படி சம்பவம் தொடர்பாக குறித்த சிறுவனின் தந்தையை பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த சிறுவனின் கழுத்துப் பகுதியிலும் வலது காலிலும் எரிகாயங்களுடன் பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொகவந்தலாவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கனடா விசா பெறுவதற்கு இலங்கையர்களுக்கும் புதிய நடைமுறை

கனடா விசா பெறுவதற்காக விண்ணப்பிக்கும் சில நாடுகளைச் சேர்ந்தவர்கள், இந்த வருடக்கடைசியிலிருந்து சில புதிய நிபந்தனைகளை (Biometrics Requirements) பூர்த்தி செய்வது அவசியமாகும்.

அந்த நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஏனைய நாடுகள் அப் பேனியா, அல்ஜீரியா, கொங்கோ ஜனநாயகக் குடியரசு, எரித்திரியா, லிபியா, நைஜீரியா, சவூதி அரேபியா, சோமாலியா, தென்சூடான், சூடான், துனூசியா என்பன உடபட மேலும் சில நாடுகளாகும்.

இந்த புதிய நிபந்தனைகளின்படி, ஒருவர் தனது விரல் அடையாளங்கள், புகைப்படங்கள் என்பனவற்றை கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கான

செலவாக மேலதிகமாக 85 கனெடிய டொலர்களையும் செலுத்த வேண்டும். கடந்த காலங்களில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த குற்றவாளிகள் கனடாவுக்குள் வந்துள் ளதை அடுத்தே கனேடிய அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். அதன் காரணமாகவே இந்தப் புதிய விதிமுறைகளின் மூலம் கனடாவின் குடியேற்ற முறைமையைப் பாதுகாக்க முடியும் என கனெடிய அரசு கருதுகிறது. விருந்தினர்கள், தற்காலிக வெளிநாட்டுத் தொழிலாளர்கள், மாணவர்கள் என கனெடிய விசாவுக்கு விண்ணப்பித் துள்ள 3 இலட்சம் பேரில் 20 வீததினர் இந்த விதிமுறை அமுல் செய்யப்பட்ட முதல் வருடத்தில் தமது சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டியிருக்கும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் குழந்தைகள், வயோதிபர்கள், இராஜதந்திரிகள் போன்றோருக்கு இந்த நடைமுறையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

# செலான் வங்கி இணைவு

செலான் வங்கியானது அண்மையில் மைக்ரோ கார்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் குத்தகைப் பங்காளராக கைகோர்த்துள்ளது.

இதன்மூலம் நாடெங்கிலும் இருக்கின்ற அந்நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுக்கு மன மகிழ்ச்சியைத் தரும் குத்தகை (லீசிங்) வசதிகள் மற்றும் வங்கியூடான காப்புறுதி சேவைகளையும் வழங்குகின்றது.

மைக்ரோ கார்ஸ் வாடிக்கையாளர்கள் அனைவரும் செலான் வங்கியினது குத்தகை வசதிகளை நாடாளாவிய ரீதியிலுள்ள வங்கியின் 150 சேவை நிலையங்களுள் ஏதாவது ஒன்றின் ஊடாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

செலான் வங்கியின் பொது முகாமையாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரத்ன இது தொடர்பாக கூறுகையில், வங்கியியல் துறையில் சிறப்புத்தன்மைமிக்க சேவை வழங்கலின் 25 ஆண்டு நிறைவை இவ்வருடம் நாம் கொண்டாடுகின்ற நிலையில், மைக்ரோ கார்ஸ் நிறுவனத்துடன் கைகோர்ப்பதையிட்டும் அதனது வாடிக்கையாளர்களுக்கு எமது குத்தகைசார் வசதிகள் மற்றும் காப்புறுதி சேவைகள் பலவற்றை வழங்குவதையிட்டும் நாம் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகின்றோம் என்றார்.

# நடுக்கடலில் தத்தளித்த இலங்கையர்கள் மீட்பு



(கொழும்பு)

இலங்கையின் தென்மேற்கு கடற்பரப்பில் 215 கிலோமீற்றர் தொலைவில் படகு பழுதடைந்தமையின் காரணமாக ஆபத்துக்கு முகங்கொடுத்த 70 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் 70 பேரும் பாதுகாப்பான நிலையில் நேற்று முன்தினம் காலி துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

தொழிநுட்ப கோளாறு காரணமாக படகு தென்மேற்கு கடற் பரப்பில் 215 கிலோமீற்றர் தொலைவில் பழுதடைந்துள்ளது. இந்நிலையில் படகில் பயணித்தவர்களை இலங்கை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

இந்த கப்பலில் 13 சிறுவர்கள், 13 பெண்கள் மற்றும் 46 ஆண்களும் பயணித்துள்ளனர். படகிலிருந்து மீட்கப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக குற்றத்தடுப்பு பிரிவினரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

புத்தளம், கற்பிட்டியிலிருந்து இவர்கள் படகு மூலம் சட்ட விரோதமான முறையில் அவுஸ்ரேலியா நோக்கி பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# வாசிப்பு மாத போட்டிகள்

வேலணை பிரதேச சபை பொது சன நூலகத்தின் வாசிப்பு மாத போட்டிகள் இடம்பெறவுள்ளன.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வேலணை பிரதேச சபையின் கீழ் இயங்கும் பொது சன நூலகத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு கட்டுரைப்போட்டி,கவிதைப்போட்டி, இறுவட்டு மூலமான ஆங்கிலக் கல்வி, முன்பள்ளி மாணவர்களுக்கு கதை சொல்லும் நேரம் மற்றும் திறந்த பொது அறிவுப் போட்டி என்பன இடம்பெறவுள்ளதாக வேலணைப்பிரதேச சபை செயலாளர் தெரிவித்துள்ளார். வெற்றிபெறும் மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக அறிவித்துள்ளனர்.



நீர்வேலி தெற்கு பாலர் நிலையத்தில் கணனி ஆய்வுகூடத்திறப்பு விழாவானது கடந்த மூன்றாம் திகதி மாலை 4.00 மணியளவில் நீர்வேலி நலன்புரிச்சங்கம் லண்டன் கிளை தலைவர் மா.திருவாசகத்தால் திறந்து வைக்கப்பட்டது.

# அமெரிக்க கடன் நெருக்கடி உலக பொருளாதாரத்தை பாதிக்கும்

## சர்வதேச செலாவணி நிதிய இயக்குநர்

அமெரிக்காவில் தற்போது நிலவும் கடன் நெருக்கடி உள்நாட்டை மட்டுமின்றி உலக பொருளாதாரத்தையும் பாதிப்படைய செய்யும் என சர்வதேச செலாவணி நிதியத்தின் (ஐ.எம்.எப்.) இயக்குநர் கிறிஸ்டீன் லகார்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள வொஷிங்டன் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ஐ.எம்.எப். நிர்வாக இயக்குநர் கிறிஸ்டீன் லகார்ட் பேசுகையில் அமெரிக்காவில் இப்போதுள்ள சூழல் நிதிச் சுமையை குறைக்க உதவாது. அரசுத்துறைகள் மூடப்பட்டுள்ளதால் இன்னும் அதிக பாதிப்பையே ஏற்படுத்தும். இது அமெரிக்க பொருளாதாரத்தை மட்டுமின்றி, உலக நாடுகளின் பொருளாதாரத்தையும் பாதிப்படைய செய்யும். எனவே, இந்த நிலையை உடனடியாக போக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள தொய்வை சரிசெய்ய வருங்காலங்களில் நிதி சீரமைப்பு நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ள வேண்டும். அதேசமயம், வருவாயை அதிகரிக்க செய்து, கடன் நெருக்கடியை குறைக்கும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட வேண்டும்.ஜப்பானில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்பு நடவடிக்கைகள் மூலம் அந்நாட்டின் கடன் வெகுவாக குறைந்துள்ளது. குறிப்பாக, ஜப்பானில் பணியாளர்கள் தரப்பில் பெண்களின் பங்கு அதிகரித்துள்ளதால் 2030ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு வளர்ச்சி விகிதம் 4 சதவீதம் அதிகரிக்கும். இதுபோன்ற வளர்ச்சி அடைந்த நாடுகளின் (ஜி7 நாடுகள் கூட்டமைப்பு) பங்கு மட்டும் உலகின் மொத்த உற்பத்தியில் 40 சதவீதம் ஆகும். எனவே, இந்த நாடுகளில் மேற்கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கைகள் மற்ற நாடுகளிலும் பிரதிபலிக்கும். இதுபோன்ற நாடுகள் தேசிய திட்டங்களில் மட்டும் கவனம் செலுத்தாமல், சர்வதேச சமூகத்துக்கு ஏற்ற வகையில் திட்டங்களை செயல்படுத்துவது மிக அவசியம் என்றார்.

இந்நிலையில் அமெரிக்காவில் கடன் உச்சவரம்பை உயர்த்தாவிட்டால், 2008 ஆம் ஆண்டு ஏற்பட்டதைப் போன்ற அல்லது அதைவிட மோசமான நிதி நெருக்கடி நிலையை மீண்டும் சந்திக்க நேரிடும் என அந்நாட்டின் நிதி அமைச்சர் ஜாக் லூ கருத்து தெரிவித்துள்ளார்.

அரசு ஊழியர்களுக்கு சம்பளம்: அரசுத்துறைகள். மூடப்பட்டதால் சுமார் 8 இலட்சம் பணியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையை மாற்ற, குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 20 எம்.பி.க்கள் இணைந்து அரசுத்துறை நிறுவனங்கள் இயங்க வலியுறுத்தி கையெழுத்திட விருப்பம் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. அதேசமயம், வேலையை இழந்துவாடும் சில அரசுத் துறையினருக்கு மட்டும் சம்பளம் வழங்க இரு சபைகளிலும் கடந்த வியாழக்கிழமை ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் எதிரொலியாக, அந்நாட்டு அதிபர் ஒபாமா இந்த வாரத்தில் மேற்கொள்ளவிருந்த ஆசியப் பயணம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டது.

## பரபரப்பை ஏற்படுத்திய நடுவீதிச் சவுக்கடி

நடுவீதியில் பெண் ஒருவரை பொலிஸ் அதிகாரி ஒருவர் சவுக்கால் அடிப்பது போன்ற வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.சூடானைச் சேர்ந்த ஹலிமா என்ற பெண்ணே தண்டனைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தலைநகரான கார்டோமில் நடந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஹலிமா, முன்பின் தெரியாத நபரின் காரில் ஏறியதையடுத்து, நடுவீதியில் வைத்து அனைவரின் முன்னிலையில் பொலிஸ் அதிகாரி ஒருவர் சவுக்கால் அடித்துள்ளார். அப்போது இனிமேல் காரிலேயே ஏறக்கூடாது என்று கூறிக் கொண்டே அடித்துள்ளார். வலிதாங்க முடியாமல் குறித்த பெண் கதறுவதும் வீடியோவில் பதிவாகியுள்ளது.

இதுகுறித்த வீடியோ தற்போது இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உலகச் செய்திகள்

## கென்யாவில் மீண்டும் கலவரம்; துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் பலி



கென்யாவில் மீண்டும் வெடித்த கலவரத்தில் கிறிஸ்தவ தேவாலயம் தீக்கிரையாகியது. கலவரக்காரர்கள் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் பலியாகியுள்ளனர்.

கடந்த மாதம் நைரோபியில் உள்ள வெஸ்ட் கேட் வர்த்தக வளாகத்தில் தாக்குதல் நடத்தி 67 பேரின் படுகொலைக்கு காரணமானவர்களுடன் தொடர்புடைய சிலரை கைது செய்ய பொலிசார் நடத்திய தாக்குதலில் அந்த முஸ்லிம் மதகுருவும் அவருடன் 3 பேரும் சுட்,டுக் கொல்லப்பட்டனர்.

இதற்கு கண்டனம் தெரிவித்து நடைபெற்ற போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கற்கள் மற்றும் ஆயுதங்களால் பாதுகாப்புக்கு நின்ற பொலிசார் மீது தாக்குதல் நடத்தினர்.இதனையடுத்து, நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் பலியாகினர். அப்பகுதியில் உள்ள தேவாலயத்தை வன்முறையாளர்கள் தீ வைத்து எரித்தனர்.


## இயற்கை சீற்றங்களை எதிர்கொள்ளப் பழக வேண்டும்

(புதுடில்லி)

"உத்தரகண்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, இயற்கை சீற்றங்களை எதிர்கொள்ளும் விஷயங்களில், நாம் பாடம் கற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது," என, இந்திய பிரதமர் மன்மோகன் சிங் பேசினார்.


அவர் மேலும் தெரிவிக்கையில் நம் நாட்டில், மழை, புயல், நில நடுக்கம், சுனாமி, வெள்ளப் பெருக்கு போன்ற பல்வேறு இயற்கை சீற்றங்கள் ஏற்படுகின்றன. இவை தவிர, மனிதர்களால் ஏற்படும் பேரழிவுகளும் நிகழ்கின்றன.கடந்த காலங்களில் நிகழ்ந்த இதுபோன்ற பேரிடர்களால் நமக்கு, பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதிலும், ஜூன் மாதம், உத்தரகண்டில் பெய்த பேய் மழையும், அதைத் தொடர்ந்து நடந்த வெள்ளப் பெருக்கும், நமக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி விட்டது.

உத்தரகண்ட்டில் நிவாரண பணிகளை மேற்கொள்வதற்கு, மத்திய அரசு அனைத்து உதவிகளையும் அளிக்கும். இது போன்ற இயற்கை சீற்றங்கள் ஏற்படும்போது, அவற்றை நாம் எவ்வாறு எதிர்கொள்வது என்ற பாடத்தை கற்க வேண்டிய அவசியத்தை உத்தரகண்ட் பேரழிவு நமக்கு உணர்த்தியுள்ளது. இதுபோன்ற பேரழிவுகள், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை, பெரிதும் பாதிக்கும். எனவே, அவற்றை முன் கூட்டியே அறியும் வகையில் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள்,



வானிலை ஆராய்ச்சி போன்றவற்றை, பலப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றார்.

## ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியே அவசரசட்ட வாபசுக்கு காரணம்



"தண்டனை பெறும் மக்கள் பிரதிநிதிகளை பாதுகாக்கும் அவசர சட்டம், வாபஸ் பெறப்பட்டதற்கு, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தான் காரணமே தவிர ராகுல் அல்ல," என்று பா.ஜ., மூத்த தலைவர் அத்வானி கூறியுள்ளார்.

அவசர சட்டம் பெறப்பட்டதற்கு, முழு காரணம் ஜனாதிபதி பிரணாப் தான். ராகுல் அல்லவே அல்ல. அவசர சட்டத்திற்கு, கடந்த மாதம், 24ஆம் திகதி மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்த போது, எவ்வித எதிர்ப்பும் காட்டாத ராகுல், திடீரென, அவசர சட்டம் முட்டாள்தனமானது என, கூறியதற்கு காரணம் என்ன?அவசர சட்டத்திற்கு எதிராக, பா.ஜ., தலைவர்கள் அனைவரும், ஜனாதிபதியை சந்தித்து மனு கொடுத்தோம். "இதற்கு ஒப்புதல் வழங்கக்கூடாது. என, வலியுறுத்தினோம். இதையடுத்து, அவசர சட்டத்திற்கு எதிராக குரல் கொடுக்கும்படி ராகுலை, அறிவுறுத்தியது சோனியா தான்.இதன் மூலம், ராகுல், பிரதமரை மட்டுமல்ல, ஐ.மு., கூட்டணியையும் அவமதித்துவிட்டார். ராகுலின் செயல்பாட்டில் சோனியாவுக்கும் பங்கு உண்டு. சட்டம் திரும்ப பெறப்பட்டதற்கு, ஜனாதிபதி தான் முழு காரணம் என்றார்.

## ஆந்திராவிலிருந்து தமிழகம் வரும் கிருஷ்ணா நீர்தடுப்பு போராட்டம்

ஆந்திராவில் இருந்து, தமிழகத்திற்கு கிருஷ்ணா நீர் அனுப்புவதை தடுத்து நிறுத்த, நாளை போராட்டம் நடத்தவுள்ளதாக ஆந்திர போராட்டக் குழு அறிவித்துள்ளது.

ஆந்திர மாநிலத்தை பிரிக்க எதிர்ப்பு தெரிவித்து ஆந்திராவில் போராட்டம் நடந்து வருகிறது. ஆந்திர மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளாமல், தமிழகத்தைச் சேர்ந்த மத்திய நிதி அமைச்சர் சிதம்பரம், மாநிலத்தைப் பிரிக்க ஒப்புதல் அளித்துள்ளதால், அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், தமிழகத்திற்கு திறந்து விடப்படும் கிருஷ்ணா நதிநீரை நிறுத்தி போராட்டம் நடத்த ஒன்றுபட்ட ஆந்திர போராட்டக் குழு முடிவு செய்துள்ளது.

சென்னை மக்கள் உப்புத் தண்ணீரை குடிப்பதை அறிந்த அப்போதைய ஆந்திர முதல்வர் என்.டி.ராமாராவ், தமிழகத்திற்கு, கண்டலேறு அணையில் இருந்து தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்தார் தொடர்ந்து தரப்பட்டு வருகிறது. இதை மனதில் கொள்ளாமல், ஆந்திராவை பிரிக்க, சிதம்பரம் ஒப்புதல் அளித்துள்ளார். இதை எதிர்த்து, நாளை தமிழகத்திற்கு தெலுங்கு கங்கை நீர் செல்வதை நிறுத்தி போராட்டம் நடத்த உள்ளோம்



என போராட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணா நதிநீர் வரத்து தடைபட்டால், சென்னைக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் என, கருதப்படுகிறது. இதுகுறித்து பொதுப்பணித் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "வீராணம் குடிநீரும், கிருஷ்ணா நதி நீரும் சென்னைக்கு பெருமளவு கைகொடுத்து வருகிறது. சமீபத்திய மழையாலும் ஓரளவு தண்ணீர் வந்துள்ளது. கிருஷ்ணா நதிநீர். தொடர்ந்து தடைபட்டால் பாதிப்பு ஏற்படும் என்றார்.



தமிழக-கேரள எல்லையில் உள்ள வனப்பகுதிகளில் அதிரடிப்படையினர், கெய்சர் என்ற மோப்பநாய் உதவியுடன் சேர்ந்து தீவிரவாதிகளைத்தேடும் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

# மன்னாரில் படகு மூழ்கியதில் இருவரைக் காணவில்லை

(மன்னார்)

மன்னார் சிலாவத்துறை சவேரியார்புரம் கிராமத்தில் இருந்து நேற்று முன்தினம் கடற்தொழிலுக்கு சென்ற மூன்று பேர் கொண்ட படகு ஒன்று கடலில் மூழ்கியதையடுத்து இரண்டு பேரைக் காணவில்லை என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஒருவர் மயங்கிய நிலையில் மற்றொரு மீன்பிடிப் படகில் சென்றவர்களினால் காப்பாற்றப்பட்டு, நேற்றுக் காலை மன்னார் வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டுள்ளார்.

சவேரியார்புரத்தைச் சேர்ந்த 41 வயதுடைய நிமால் என்ற தந்தை தனது மகனாகிய 19 வயதுடைய லோறன்ஸ் லடிஸ் மற்றும் அயலவராகிய 20 வயதுடைய லிங்கத்துரை சுரேஸ் ஆகிய இருவருடன் நேற்று முன்தினம் கடற்தொழிலுக்கு சென்றுள்ளார். காலையில் சென்ற இவர்களில் நிமால் என்பவர் மயங்கிய நிலையில் படகொன்றுடன் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார். இளைஞர்களான ஏனைய இருவரையும் காணவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 20 படகுகளில் ஏனைய மீனவர்கள் இரண்டு நாட்கள் தேடியுள்ளனர. எனினும் அவர்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை. காணாமற் போனவர்களைக் கண்டுபிடிப்பதற்காக கடற்படையினருடைய உதவி நாடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக சிலாவத்துறை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# தேவரையாளி இந்துவில் ஆசிரியர் தின விழா

(வடமராட்சி)

வடமராட்சி தேவரையாளி இந்துக்கல்லூரியின் சர்வதேச ஆசிரியர் தினவிழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் நா.நாகேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர் தா.வீரசிங்கம் சாவகச்சேரி பிரதேச சபையின் ஓய்வு நிலை செயலாளர் வே. சிவராஜலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையை பூநகரி பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் அதிகாரி செ.சுரேந்திராவும், ஏற்புரையை கல்லூரியின் அதிபர் மா.நவநீதமணியும், நன்றியுரையை கல்லூரியின் பழைய மாணவர் சங்க செயலாளர் மா. இலக்குமிகாந்தனும் நிகழ்த்தவுள்ளனர்.

ஓய்வுநிலை ஆசிரியர்கள் 5 பேரும், கல்லூரியின் அதிபர், ஆசிரியர்களும் மாணவர்களால் கௌரவிக்கப்படவுள்ளனர். (90)

# புனித செபமாலை மாதா வருடாந்த உற்சவம்

(உதயநகர்)

இரணைதீவு இரணை மாதா நகர் புனித செபமாலை மாதா ஆலய வருடாந்த உற்சவம் இடம்பெற்று வருகின்றது.

உற்சவத்தின் இறுதிநாளான நாளை காலை உற்சவ இறுதி ஆராதனை இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தின் போது நேற்றும், இன்றும் தென்னிலங்கை பர்திரியார் லலித் பெரேரா கலந்துகொண்டு சிறப்பு ஆராதனைகளை நடாத்துகின்றார்.

இவ் ஆலயம் உற்சவம் கடந்த மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகி நாளை திருச்சொரூப பவனியுடன் நிறைவடையவுள்ளது. (09)

# யாழ்.ஊடகவியலாளர்களுக்கு இருநாள் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இளம் அலுவலக செய்தியாளர்கள் மற்றும் உதவி ஆசிரியர்களுக்கான இரு நாள் பயிற்சிப்பட்டறை இடம்பெறவுள்ளது.

இம்மாதம் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் ஊடக கற்கைக்கான பயிற்றுவிப்பாளர் 'ராவய' வின் செய்தி ஆசிரியர் வி.லசந்த றுகுணுகே மற்றும் 'லங்கா ருடே' யின் சிரேஷ்ட ஊடகவியலாளர் துஷ்யந்தி கனகசபாபதி இப்பயிற்சிப் பட்டறையை முன்னெடுக்கவுள்ளனர்.

புலனாய்வு செய்தி அறிக்கையிடல், விவரண சித்தரிப்பு ஆகிய தலைப்புக்களில் இப்பயிற்சிப்பட்டறை இடம்பெறவுள்ளது.

# பளை பிரதேச செயலகத்தில் சிறுவர், முதியோர் தின விழா

(பளை)

பளை பிரதேச செயலகப் பிரிவின் சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செல்லமுத்து சிறிநிவாசனும், சிறப்பு விருந்தினராக மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவனும் கலந்து கொள்ளவுள்ளனர். சிறுவர், முதியோர் கௌரவிப்பு என்பவற்றுடன், கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (90)

## முடிவின்றித் தொடரும்....

இரா.சம்பந்தன் தெரிவித்ததாக மற்றும் ஒரு தகவல் கூறுகிறது. இந்த நிலையில் இது குறித்து கூட்டத்தில் கருத்து வெளியிட்ட முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் தனது சத்தியப்பிரமாண நிகழ்வின் பின்பே அது குறித்து தான் தீர்மானிக்க உள்ளதாக அறிவித்துள்ளார்.

## கற்றவர்களுக்கு...

லமைச்சர் குறிப்பிட்டுள்ளார். வட மாகாண சபையின் அமைச்சரவைக்குள் அமைச்சர்களைத் தெரிவுசெய்யும் விசேட கூட்டம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் தலைமையில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கின் அரசியலை தமிழ் தேசியக் கூட்டமைப்பு நடாத்துமாறும், தனக்கு மாகாண நிருவாகத்தை வழங்குமாறும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூட்டத்தில் கூடியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமைகளிடம் வேண்டியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## முதலமைச்சரின்....

தமிழ் மக்களால் வழங்கப்பட்ட ஆணையை அவர்களின் கையில் உள்ள மை காய்வதற்கு முன் தமிழ்க் கூட்டமைப்பு தூக்கி வீசி விட்டது. இந்தச் செயற்பாடு மகிந்த ராஜபக்ஷ அரசுக்கு எதிரான சர்வதேச போர்க்குற்ற விசாரணை அழுத்தத்தைக் குறைத்துவிடும். ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழு சர்வதேச விசாரணை ஒன்றை எதிர்வரும் மார்ச் மாதம் கோர வேண்டிய நிலை ஏற்படும் எனத் தெரிவித்திருக்கும் இந் நிலையில் இச் செயற்பாடு தவறான சமிக்கைகளை சர்வ தேசத்திற்கு கொடுத்துவிடும். தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் இவ்வாறான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தலைமையின் இவ்வாறான செயற்பாடுகளை ஏனைய கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்கள் தடுத்து நிறுத்த முன்வர வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கோரிக்கை விடப்பட்டிருக்கின்றது.

## உழவு இயந்திரத்தில்....

யில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் தனது வீட்டிலிருந்து மணல் ஏற்றுவதற்கான வேலை செய்வதற்காக் உழவு இயந்திரத்தில் சென்றுள்ளார். நேற்றுக்காலை உழவு இயந்திரத்தின் சில்லுக்குள் அகப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவ இடத்திற்கு வந்த பருத்தித்துறை நீதவான் ஸ்ரீமதி நந்தசேகரம் விசாரணைகளை மேற்கொண்டதுடன், பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொண்ட பின்னர் நேற்று மாலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (116)

## ஜனாதிபதியின் முன்....

நாட்டைவிட்டு வெளியேறியிருப்பதாக தெரியவருகின்றது.

நளைய தினம் நடைபெறும் பதவி ஏற்பு நிகழ்வில் பங்கு கொள்ளாமல் தவிர்க்கும் நோக்கிலேயே அவர் இந்தியா பயணமாகியிருப்பதாக தெரியவருகின்றது.

இது தொடர்பாக கேட்டறிவதற்கு நேற்றிரவு அவரை நாம் தொர்பு கொள்ள முயற்சித்த போதும் அவரது கைத்தொலைபேசி செயலிழந்திருந்தது. இதேவேளை, தனது நம்பிக்கைக்குரிய இளைய நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஜனாதிபதி மகிந்த முன்னிலையில் முதலமைச்சர் பதவி ஏற்கும் விவகாரம் தொடர்பில் மௌனம் சாதித்தமை குறித்தும் மாவை சேனா திராஜா கொழும்பின் மூத்த தமிழ் ஊடகர் ஒருவரிடம் மனம் வருந்தியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை முதலமைச்சராக விக்னேஸ்வரன், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், மதப்பெரியார்கள் முன்னிலையில் வடக்கில் பதவியேற்பதனையே தமது கட்சி விரும்புவதாகவும், இது தொடர்பாக தமது கட்சி தீர்மானமொன்றை நிறைவேற்றி இருப்பதாகவும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இதன் மூலம் ஜனாதிபதி முன்னிலையில் விக்னேஸ்வரன் பதவியேற்பதனை ரெலோவும் விரும்பவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று ஜனாதிபதி முன்னிலையில் சி.வி.விக்னேஸ்வரன் பதவி ஏற்பதனை தாமும் விரும்பவில்லையென புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பதவியேற்பதன் மூலம் அரசிடம் சரணாகதி அடைந்துவிட்டோம் என்ற கருத்து மக்கள் மனதில் ஏற்பட்டுவிடும் என்பதுதான் தனது கவலையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ரணிலை பதவி...

ருந்து வெளியேற்றப்பட்டிருந்த மாகாணசபை உறுப்பினர்கள் இருவர் தலைமையில் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கி இந்த ஆர்ப்பாட்ட ஊர் வலம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

அதேநேரம் ஐக்கிய தேசியககட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவின் ஏற்பாட் டில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவான பேரணியும் நடந்துளளது.

இதன்போது இரண்டு தரப்பி னருக்கும் இடையே மாத்தறை நகரில் ஏற்பட்ட மோதலிலேயே துப்பாக்கிப் பிரயோகம் நடந்துளளது. துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் மாகாணசபை உறுப்பினர் மைத்திரி குணரத்னவின் தந்தை ஹேர்மன் குணரத்ன கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்ார் தெரிவித்தனர்.

## உல்லாசப்பயணம்....

வைத்தியசாலையிலும், மற்றுமொருவர் மன்னார் சிலாவத்துறை கடற்படை வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாலபே மற்றும் ஹோக்கந்த ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆண்கள் பெண்கள் உட்பட 16 உல்லாசப் பயணிகள் சென்ற 2 படகுகள் கடலில் மூழ்கியதையடுத்தே இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலில் மூழ்கி உயிரிழந்த ஆண்கள் நான்கு பேருடைய சடலங்கள் உடனடியாகவே மீட்கப்பட்டுள்ளன. பெண் குழந்தையொன்றைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டதையடுத்து, கடற்படையினர் நடத்திய தேடுதலில் குழந்தை சடலமாக மீட்கப்பட்டிருக்கின்றது.

நேற்றுப்பிற்பகல் நடைபெற்ற இந்தச் சம்பவம் குறித்து மன்னார் சிலாவத்துறை பொலிசாரும், கடற்படையினரும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## டிப்பர் வாகனம்...


யாழ்.பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டு கற்கை மாணவனும்,தனியார் கல்வி நிலைய ஆசிரியருமான யோகேஸ்வரன் கஜிந்தன் (வயது - 24) என்பவரே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் தனியார் கல்வி நிலையம் ஒன்றில் கற்பிப்பதற்கு மட்டுவில் - புத்தூர் பிரதான வீதியில் சென்று கொண்டிருந்த சமயம் சிறுவீதியில் இருந்து பிரதான வீதிக்கு நுழைய முற்பட்ட டிப்பர் வாகனம் இவர் மீது மோதியுள்ளது. தலையில் படுகாயங்களுக்கு உள்ளான இவர் உடனடியாக அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் மாற்றப்பட்டு சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக டிப்பர் சாரதியை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன் வாகனத்தினையும் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை போக்குவரத்து பொலிஸார் மேற்க்கொண்டு வருகின்றனர். (பா,15)

# மீளவும் இனவாத தீயை மூட்ட பௌத்த அமைப்புக்கள் முயற்சி

## அமைச்சர் வாசு குற்றச்சாட்டு



நாட்டின் இனவாத மழை ஓய்ந்துள்ள இவ்வேளையில் மீண்டுமொரு முறை இனவாத தீயினை மூட்டி விடுவதற்கு சில பௌத்த அமைப்பு முயற்சிப்பதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சர் வாசு தேவ நாணயக்கார குற்றம் சுமத்தியுள்ளார். பொதுபல சேனா போன்ற பௌத்த இனவாத அமைப்புக்கள் முஸ்லிம்களின் மார்க்க விடயத்தில் அதிகமாக தலையிட்டு மீண்டுமொரு முறை யுத்தச் சூழலை ஏற்படுத்த முயல்வதை எங்களால் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

எம்வி. ரஸ்மின் எழுதிய போர்க்கால "சிங்கள இலக்கியங்கள் ஒரு பன்மைத்துவநோக்கு" என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் முப்பது வருட கால யுத்தம் நிறைவடைந்து இனவாத மழை பெய்து ஓய்ந்திருக்கும் இவ்வேளையில் பொதுபல சேனா, இராவணா பலய போன்ற பௌத்த இனவாத சக்திகள் நாட்டில் மீண்டுமொரு முறை இனவாத தீயினை மூட்டி விடுவதற்கு முயற்சிக்கின்றன.

இவ்வாறு மீண்டுமொரு முறை இந்நாட்டில் யுத்த சூழலை உருவாக்க பௌத்த அமைப்பு முயற்சிக்கின்றமையை எங்களால் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இலங்கையை சிறந்த ஜனநாயக நாடாக கட்டியெழுப்புவதாயின் அனைத்து இனத்தவர்களுக்கும் சமவுரிமை மற்றும் சம அந்தஸ்து வழங்கப்பட்டு ஒருமைப்பாட்டுடன் கூடிய ஜனநாயகத்தை கட்டியெழுப்ப வேண்டும்.

தற்போது எமது நாட்டில் சிறுபான்மையினர் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற இவ்வேளை மேற்படி நாட்டின் சூழ்நிலை காணப்பட்டால் இலங்கையை கட்டியெழுப்ப முடியாத சூழ்நிலை உருவாகும்.

தமிழர் முஸ்லிம்கள் எப்படிப்பட்ட பண்பைக் கொண்டவர்கள் என்பதை அவர்களுடைய இலக்கியங்கள் மூலமாக சிங்களவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் இந்நாடு இன ரீதியாக பிளவுபடுவதற்கு வாய்ப்புள்ளது.

இவையனைத்தையும் புரிந்துணர்வுடன் தீர்த்து ஒருமைப்பாட்டுடன் கூடிய ஜனநாயக நாடாக இலங்கையை கட்டியெழுப்ப அனைவரும் முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# போக்குவரத்து அதிகாரிகளுக்கு நேர அட்டவணைப் பயிற்சி

போக்குவரத்து நேர அட்டவணை தயாரிப்பது தொடர்பில் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் போக்குவரத்து துறை அதிகாரிகளுக்கு மூன்று நாள் பயிற்சிகளை வழங்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பயிற்சிகள் நாளை தொடக்கம் மூன்று நாட்களுக்கு வழங்கப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்தன தெரிவித்தார்.

பஸ் சேவைகளின்போது ஏற்படும் போட்டித்தன்மையை தவிர்ப்பதே இதன் நோக்கம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போக்குவரத்து நேர அட்டவணைகளை தயாரிப்பதற்கான புதிய தொழில்நுட்ப முறைமைகளையும் அறிமுகப்படுத்த தேசிய போக்குவரத்து ஆணைக் குழு திட்டமிட்டுள்ளது.

# புலமைப் பரிசில் பரீட்சையில் அதிசித்தி... மாணவர்களை வாழ்த்திய ஜனாதிபதி



2013 ஐந்தாந்தர புலமைப் பரிசில் பரீட்சையில் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் சித்திபெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

198 புள்ளிகளைப் பெற்று தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற காலி மஹிந்த கல்லூரி மாணவன் சந்தரு தத்சர பலஹேவா, கொடகம சுபாரதி வித்தியாலய மாணவி சவிந்யா கிம்ஹானி, இரத்தினபுரி கரகத்தலாவை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஹேஷான் சானுக தர்மரத்ன வடக்கில் பரமானந்தம் தனுராஜ் உட்பட நாடளாவிய ரீதியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 19 மாணவர்கள் நேற்றுமுன்தினம் பிற்பகல் அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தனர் .

இந்த சந்திப்பின் போது மேற்படி மாணவரகளின் திறமையை பாராட்டிய ஜனாதிபதி, அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அத்துடன் மக்கள் வங்கியினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட தலா ஒரு இலட்சம் ரூபாவுக்கான காசோலைகளையும் ஜனாதிபதி இந்த மாணவர்களுக்குக் கையளித்தார்.

சிங்கர் கம்பனியினால் வழங்கப்பட்ட மடிக்கணணிகள் மற்றும் அகராதிகள் போன்றவையும் ஜனாதிபதியினால் இவர்களுக்கு கையளிக்கப்பட்டன.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, மக்கள் வங்கியின் தலைவரான ஜனாதிபதி[illegible]ன் செயலணிப் பிரானி காமினி செனரத் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் அனுர திஸாநாயக்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஐ.தே.க.வின் உள்ளகப் பிரச்சினையே தேர்தல் தோல்விக்கான காரணமாகும்

## கூறுகிறார் அமைச்சர் மைத்திரிபால



ஐக்கிய தேசியக் கட்சிக்குள் காணப்பட்ட உள்ளக பிரச்சினையே அந்தக் கட்சியின் தோல்விக்கு காரணமாக அமைந்துள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

"ஏன் தேர்தல் ஒன்று நடாத்தப்படுகின்றது. தேர்தலை நடாத்த வேண்டாம் என எதிர்க்கட்சி கூறுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் வரலாறறில் மிகவும் பாரதூரமான இடத்தை நோக்கி இன்று வந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறான பேரழிவொன்றை சந்தித்திருக்காது. இது வெளியில் ஏற்பட்ட தோல்வி கிடையாது. கட்சிக்குள் காணப்பட்டஉள்ளக பிரச்சினையே கட்சியின் தோல்விக்கு காரணமாக அமைந்துள்ளது. கட்சியின் தலைவருக்கு எதிராக கட்சிக்குள் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

பிரச்சினைகள், சவால்கள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு கட்சியின் தலைவருக்கு எதிராக பேரணியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் [illegible]சியின் ஆதரவாளர்கள் எவ[illegible]ம் கலந்து கொள்ளவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் மாத்திரமே பங்கேற்கின்றனர். எமது கட்சியை பிரித்தார்கள். எனினும், ஐக்கிய தேசியக் கட்சி இன்று சீரழிந்துள்ளது. 74 முதல் 94 வரை எமது கிராம மட்டத்திலுள்ள மக்கள் கட்சியை விட்டு பிரிந்து செல்லவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆவரங்கால் வடக்கு சங்கத்தையும் விட்டுவைக்காத திருடர்கள்

ஆவரங்கால் வடக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்துக்குள் நுழைந்த திருடர்கள் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறை ஆவரங்கால் பிரதான வீதியில் அமைந்துள்ள கூட்டுறவுச்சங்கத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த கூட்டுறவுச்சங்கத்தின் நுழைவாயில் பூட்டை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் பல வகையான அத்தியாவசியப் பொருட்களான 25 அங்கர் பால்மா பெட்டி, 15 நெஸ்பிறே பெட்டி, 20 இற்கும் அதிகமான நெஸ்ரமோல்ட் மற்றும் பிஸ்கட் வகைகள் உட்பட ஏனைய அத்தியாவசியப் பொருட்களை சூறையாடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக அச்சுவேலி குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டை அடுத்து தடய அறிவியல் பொலிஸார் வந்து திருடர்களின் தடயங்களை கைப்பற்றியுள்ளதுடன் கைரேகைகளையும் பதிவு செய்துள்ளனர். இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக ஆவரங்கால், அச்சுவேலிப்பகுதியில் திருடர்களின் தொல்லை அதிகரித்துச் செல்வதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (15)

# புலமைப் பரிசில் பரீட்சையின் நோக்கம் புகழ் பெற்ற பாடசாலைகளில் அனுமதி

## மிலேச்சத்தனமான பரீட்சை எனவும் குற்றச்சாட்டு

(கொழும்பு)


மாணவர்கள் கல்வியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் எனும் நோக்கில் உதவித் தொகை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட புலமைப் பரிசில் பரீட்சையானது, புகழ்பெற்ற பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான பரீட்சையாக மாறியுள்ளதனால் அது, "மிலேச்சத்தனமான பரீட்சையாக மாறியுள்ளது என பாடசாலைகளைக் காக்கும் மக்கள். அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த மிலேச்சத்தனத்தினால் பரீட்சையில் சித்தியடையத் தவறுகின்ற பிள்ளைகளை கருணையின்றி இல்லங்களிலிருந்து விரட்டியடிக்கும் நிலைமைக்குப் பெற்றோர்கள் மாறியிருப்பதாக அவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தம்மிக்க அழகப்பெரும குறிப்பிட்டுள்ளார்.

இதனால் உடனடியாக இந்நிலையை நீக்குவதற்கு கல்வியமைச்சு உட்பட பொறுப்பு வாய்ந்த அனைத்து அதிகாரிகளும நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அதற்கு முன்னர் கல்வியியலாளர்களின் கருத்துக்களைப் பெற்று பரீட்சை நடாத்துவது குறித்து பொருத்தமானதொரு அமைப்புமுறையை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பிரபல்ய பெயர்களை மாற்றியமைத்து, அனைத்துச் சிறார்களும் சுதந்திரமாக அனைத்துக் கல்விச் சலுகைகளையும் பெற்றுக் கொள்ளும் வண்ணம் பாடசாலைகளை ஏற்படுத்தி, திறமை வாய்ந்த மாணவர்களை அப்பாடசாலைகளுள் உள்வாங்குவதற்கான ஒருமுறையை நாட்டினுள்ளே ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

# இறுதிக்குள் நுழைந்தது மும்பை இன்று ராஜஸ்தானுடன் மோதல்



(புதுடில்லி)

சம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதிப்போட்டிக்கு மும்பை அணி தகுதி பெற்றது. இன்று நடந்த இரண்டாவது அரையிறுதி போட்டியில் டிரினிடாட் அணியும் மும்பை அணியும் மோதின. இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி களத்தடுப்பைச் செய்தது.

இதனையடுத்து களமிறங்கிய டிரினிடாட் அணி 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 153 ஓட்டங்கள் எடுத்தது. இதன் பின்னர் களமிறங்கிய மும்பை அணி 19.1 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 157 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் மும்பை அணி இன்றையதினம் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் ராஜஸ்தான் அணியை எதிர் கொள்கிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 அக்ரோபர் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.